பழியும் பாவமும்

UNIVERSITY EXTENSION LIBRARY
30 JAN 1961
MADURAI

டாக்டர் - மு. வரதராசன்
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பன் கல்லூரி

[இதன் வருவாய் முழுதும் சென்னை செனாய்நகர்
திரு. வி. க. உயர்நிலைப் பள்ளிக்கு உரியது]

கிடைக்குமிடம்
பாரதி புத்தக நிலையம்
மதுரை

விற்பனை உரிமை :
பாரி நிலையம்
59, பிராட்வே, சென்னை-1
ரூ. 1·25

முதல் பதிப்பு : ஜூன் 1955
இரண்டாம் பதிப்பு : அக்டோபர் 1957

உரிமை ஆசிரியர்க்கு

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை சென்னை-14

2001 - 2020

பொய்யா மொழி

உண்ணற்க கள்ளை ;
உணில்உண்க சான்ரோரான்
எண்ணப்பட வேண்டா தார்.

அறிவினுன் ஆகுவது
உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றுக் கடை.

பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

2020

குறிப்பு :

கதை கற்பனை.

மு. வ.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

திருமணத்திற்குப் பிள்ளை வீட்டார் பத்துப் பேரும் பெண் வீட்டார் பத்துப்பேரும் இருந்தால் போதும். அல்லது, காந்தியடிகள் தம் மகனுடைய திருமணத்தின்போது கூறியதுபோல், இந்த வீட்டார் மூப்பதுபேரும் அந்த வீட்டார் மூப்பதுபேரும் வந்து நடத்திவைத்தால் போதும். மூந்நூறு நானூறுபேர், மூவாயிரம் நாலாயிரம்பேர் வர வேண்டும் என்றும், முழுதும் தெரிந்தவர்கள் அரைகுறையாய்த் தெரிந்தவர்கள் அத்தனை பேருக்கும் அழைப்பு அனுப்பி அனைவரும் வர வேண்டும் என்றும் முயல்வது ஒரு பெரிய ஆடம்பர மூட நம்பிக்கை என்பதை அவனுக்கு எடுத்துச்சொன்னேன். திருமணம் நிறைவேறியது என்னும் செய்தியை எல்லோருக்கும் அறிவிக்க வேண்டும் என்ற விளம்பர நம்பிக்கை இருந்தால், இப்போது மிக முற்போக்கான சிலர் செய்வதுபோல் திருமணம் நடந்தபிறகு இப்படி இன்ன இடத்தில் நடந்தது என்று மகிழ்செய்தி அனுப்பினால் போதும் என்றும் அவனுக்கு எடுத்துச்சொன்னேன். அவன் கேட்கவில்லை.

"மது! நாங்கள் உன் திருமணத்திற்கு வருவதால், உனக்கும் வீணான முயற்சியும் துன்பமும் ஏற்படும்.

எங்களுக்கும் ஒரு முழுநாள் வீணில் கழியும். நம் ஆபீசில் விடுமுறை கிடைப்பதே அரிதாக இருக்கிறது. உடம்பு நொந்தால் கெட்டால் விடுமுறை எடுப்பதற் காகச் சில நாள் கையிலிருந்தால் நல்லது அல்லவா? போகட்டும். நாங்கள் வந்து அங்கே இன்னது செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல். வருவோம். ரயில் ஏறி வந்து திருமணப் பந்தலில் கைகால் சேர்த்து நெருக்கி உட்கார்ந்திருந்து ஒரு வேலையும் செய்யாமலே பந்திக்கு முந்தி என்று முதல் பந்தியைத் தேடிச் சாப்பிட்டு, அடுத்த பந்திக்கு முன்னமே தேங்காய் வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டு உடனே ரயிலுக்குத் திரும்பவேண்டும். இதற்கு என் இவ் வளவு முயற்சி? உன் திருமணத்திற்குச் சாட்சி என்றால், நாங்கள் இல்லாவிட்டாலும் அந்த ஊரார் நூற்றுக்கணக்கில் இருப்பார்கள். ஆகையால் நீ வற்புறுத்தாதே. எங்களுக்கே அதை விட்டுவிடு. வாய்ப்புக் கிடைத்தால் பொழுதுபோக்கும் மாறு தலுமாக இருக்கட்டும் என்று வருவோம். வரா விட்டால் நீ கவலைப்படாதே. காலத்திற்கு ஏற்றபடி நாமே பழக்க வழக்கங்களை மாற்றி அமைத்துக் கொள்ள முடியவில்லை என்றால் வேறு யார்தான் செய்வார்கள்?'' என்று என்னென்னவோ சொன் னேன். பயன் இல்லை.

மதுசூதனனும் முற்போக்கான எண்ணங்கள் உடையவன்தான். பழம்பசலி அல்ல. ஆனால் எண்ணங்கள் மட்டும் இருந்து பயன் என்ன? செயல் என்றால் பழம் போக்கிலேயே போக விரும்புகிறான். அவன்மேல் குறைசொல்லிப் பயன் இல்லை. மனம் பெரும்பாலும் நடந்து தேய்ந்த ஒற்றையடிப் பாதை யிலேயே நடக்க விரும்புகிறது. குழந்தைகளைப் போல் அந்த வழியை விட்டு இப்படியும் அப்படியும் நடந்து

போக எல்லோராலும் முடியாது. குழந்தைகளைப் போல் எதிர்காலத்தைப் பற்றிக் கவலை அற்ற மனம் உடையவர்களுக்கே வாழ்க்கையில் அவ்வாறு நடக்க முடியும். மற்றவர்கள் தேய்ந்த பாதையிலே கண்மூடி நடப்பதே நல்லது என்று நம்புகிறார்கள். மதுவின் மனமும் அப்படிப்பட்டதே.

வேறு வழி இல்லை என்று அவனுடைய வற்புறுத்தலுக்கு இணங்கினேன். திருமணத்திற்கு முந்திய நாள் மாலை 6–30 மணிக்குக் காஞ்சிபுரம் ரயிலில் நானும் இனியனும் ஏறினேன். வண்டியினுள் ஏறுவதே எங்களுக்குப் பெருமுயற்சியாக முடிந்தது. எழுமூர் நிலையத்திற்கு வண்டி வந்தபோதே பெட்டிகள் முக்கால் பங்கு நிரம்பியிருந்தன. எழுமூர் நிலையத்திலோ எங்களைப் போல் அந்த வண்டிக்காகக் காத்திருந்த கூட்டத்திற்குக் கணக்கு இல்லை. அந்த நிலையத்தில் இருந்தவர்களுக்காக மட்டும் தனியாக ஒரு வண்டி விட்டிருந்தாலும் இடம் கொள்ளாது. அவ்வாறு இருக்க, வந்த வண்டியில் கிடைத்த கால்பகுதி இடம் அந்தக் கூட்டத்தை எப்படித் தாங்கும்? இனியன் இல்லையானால், நான் வண்டியில் ஏற முயலாமல் ஒதுங்கி நின்றுவிட்டுப் பேசாமல் வீட்டுக்கே திரும்பியிருப்பேன். 'நாம் போகாவிட்டால் திருமணம் நடக்காமல் நின்றுவிடுமா? நண்பன் கோபித்துக்கொண்டால், நாளடைவில் அந்தக் கோபம் ஆறிவிடும். பார்த்துக்கொள்ளலாம்' என்ற எண்ணங்கள் எழுந்தன. முன் ஒரு முறை ஒரு திருமணத்துக்குப் புறப்பட்டபோது இப்படி எண்ணிக் கொண்டே போகாமல் திரும்பிவிட்டேன். ஆனால் இப்போது இனியன் எப்படியோ கூட்டத்திற்குள் தோள்கொடுத்து நுழைந்து வண்டியில் ஏறி என் கையைப் பிடித்து இழுத்து ஏறச் செய்துவிட்டான்.

அவன் எப்போதுமே விடாமுயற்சி உடையவன். எண்ணிய பிறகு துணிந்துவிடுவதே அவன் வழக்கம். அந்தத் துணிவை இப்போதும் காட்டிவிட்டான்.

நாங்கள் ஏறி நின்ற பிறகும் அந்தப் பெட்டிக்குள் இன்னும் பலர் ஆணும் பெண்ணும் குழந்தைகளுமாய் ஏறி எங்களை நெருக்கித் தள்ளினர்கள். அதன் பயனாக வாயிலருகே நின்றிருந்த நாங்கள் இருவரும் பெட்டியின் நடுப்பகுதிக்கே போய்விட்டோம். அங்கிருந்து பெட்டியினுள் இருந்த எல்லோரையும் பார்த்துக்கொண்டிருக்க முடிந்தது. ஒரு குலுக்குக் குலுக்கிய வாறு வண்டி எழுமூர் நிலையத்தை விட்டு நகர்ந்தது. என்ன குலுக்கினாலும் நாங்கள் அசையாமல் நிற்க முடிந்தது. எதையும் பிடிக்காமலே நிற்க முடிந்தது. புளிமூட்டைகள்போல் மனித உடம்புகள் ஒன்றோடொன்று நெருங்கிப் பொருந்தியிருந்தமையால் வண்டியின் குலுக்கைப் பற்றிக் கவலை இல்லாமல் நிற்க முடிந்தது.

என் பக்கத்தில் நின்றிருந்த ஒருவர், "திருவண்ணாமலை கார்த்திகைத் திருவிழாவுக்குப் போகும் கூட்டம் போல் இருக்கிறதே" என்றார். மற்றொருவர், "ஆடிக்கிருத்திகைக்குத் திருத்தணிக்குப் போகும் கூட்டம் போல் இருக்கிறது என்று சொல்லக் கூடாதா?" என்றார். "சொல்லலாம், சொல்லலாம். எல்லாத் திருவிழாக்களையும் சொல்லலாம், எல்லாக் கோயில் தலங்களையும் சொல்லலாம்" என்றான் இனியன்.

ஒருவர் கனைத்துக்கொண்டே எங்களைப் பார்த்து, "ஆனால் திருவிழாக்களில் நகை பணம் திருடுபோவது, சிறுவர்கள் காணாமல் போவது, குழந்தைகள் கூட்டத்தின்காலில் அகப்பட்டு நசுங்குதல் முதலிய கொடுமைகள் உண்டு. அவை வண்டிகளில் நடப்பதில்லை" என்றார்.

" என்ன கொடுமைகள் நடந்தாலும் திருவிழாக்களுக்குப் போகும் கூட்டம் குறைந்தபாடில்லையே " என்றான் இனியன்.

"நாம் இப்போது ஏன் கூட்டமாகப் போகிறோம்? ஏன் இப்படி நெருக்குகிறோம்? அப்படித்தான் அவர்களும் அந்தந்தக் கோயிலுக்குக் கூட்டமாகப் போகிறார்கள் " என்றார் தலைப்பாகை அணிந்த ஒருவர்.

அவர் வியாபாரி போல் தோன்றினர். ஒருவேளை எந்த ஆபீசிலாவது தொழில் செய்பவராக இருக்கலாம். கோயிலுக்குப் போவதைக்கடிந்து பேசுகிறோம் என்று அவர் எண்ணிவிட்டார்போல் தெரிந்தது. உடனே நான் குறுக்கிட்டு, " கோயிலுக்குப் போவதைப் பற்றி யாரும் குறைகூறவில்லை. ஊர்கள் எல்லாம் திரண்டு ஒரே நாளில் போய்க் கூடுவதால், அங்கே நெருக்கத்தின் காரணத்தால் பல கொடுமைகள் நடக்கின்றன. நீரும் காற்றும் தூய்மை கெடுவதால் காலரா முதலிய தொத்து நோய்களும் ஏற்படுகின்றன. அதனால் ஒரே நாளில் இப்படிப் போய்க் குவியும் வழக்கத்தை விட்டு, அவரவர்களுக்கு ஓய்வான நாட்களில் போய்க் கோயிலில் வழிபட்டு வரலாமே. கோயிலிலும் கூட்டம் குறையும் ; சுத்தமாக இருக்கும்; நெருக்கம் இல்லாமல் வன்பு துன்புகள் இல்லாமல் வழிபாடும் அமைதியாகச் செய்யலாமே " என்றேன்.

இவ்வாறு நான் அவருடைய பேச்சை மறுத்த காரணத்தால், அவருக்குச் சினம் வந்தது போல் தோன்றியது. கொஞ்சம் ஆத்திர உணர்ச்சியோடு, " பெரியவர்கள் முட்டாள்கள் அல்ல. ஒரே நாளில் போகும்படி காரணத்தோடுதான் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த நாளில் மகத்துவம் ஏதோ இருக்கும் " என்றார்.

மற்றொருவர் அவரை ஆதரிக்க முன்வந்தவராய், "நல்லவர்கள் பலபேர் வரும் நாளில் போனால், அவர்களின் பாத தூசி பட்டால் நல்லது" என்றார்.

"பாத தூசி, வியர்வை நாற்றம், மலசலம், சளி, எச்சில் எலலாம் ஏராளமாக உண்டு" என்று இனியன் மெல்ல என் செவியில் முணுமுணுத்தான்.

என்னால் அமைதியாய் இருக்க முடியவில்லை. "பெரியவர்களை யார் மூட்டாள் என்று சொன்னார்கள்? ஒருவரும் சொல்லவில்லை. பெரியவர்கள் அந்தக் காலத்திற்கு ஏற்றபடி ஏற்பாடு செய்தார்கள். நாம் அதை இந்தக்காலத்திற்குத் தக்கபடி சிறிது மாற்றிக்கொள்ள வேண்டும். அந்தக் காலத்தில் ரயில் பஸ் முதலிய போக்கு வரத்துக்கள் இல்லை. கட்டைமாட்டு வண்டியிலோ கால்நடையாகவோ போக வேண்டும். கட்டுச் சோறு கையில் இருக்க வேண்டும். வழியில் உணவு விடுதிகள் இல்லை. நெடுந்தொலைவில் உள்ள கோயிலுக்குப் போகின்ற மக்கள் தனித் தனியே ஒவ்வொரு குடும்பமாகப் போனால், வழியெல்லாம் திருடு கொள்ளை முதலிய பயம் உண்டு. அவ்வாறு இல்லாமல், பல குடும்பம் சேர்ந்து போவதாக இருந்தால், துணை மிகுதியாகும். பயம் குறையும். பழனிக்குப் போவதாக வைத்துக்கொள்வோம். சேலத்திலிருந்து ஒரு குடும்பம் தனியே கட்டைவண்டியில் போவதானால் எவ்வளவு பயம் இருந்திருக்கும்? அதனால் எல்லா ஊராரும் ஒரே நாளில் போக ஏற்பாடு செய்தார்கள். பங்குனித் திருவிழாவுக்கு அல்லது ஆடிக்கிருத்திகைக்கு எல்லா ஊராரும் போய்த் திரளும்போது அந்தச் சேலத்துக் குடும்பமும் போவதானால், ஒரு கட்டைவண்டிக்குத் துணையாக வழியெல்லாம் ஆயிரம் ஆயிரம் கட்டை வண்டிகள் இருக்கும். சாலையெல்லாம் மரத்தடியிலெல்லாம் மக்கள் கூட்டம் இருந்தால், வழிநெடுகப்

பயம் இல்லாமல் பழனிக்குப் போய்ச் சேரலாம். அதனல் அந்தக் காலத்திற்குத் தகுந்தபடி முன்னோர் ஏற்பாடு செய்தார்கள். இந்தக் காலத்தில் பழனிக்கு எந்த நாளிலும் பயம் இல்லாமல் போய் ஓய்வாக அமைதியாக வழிபாடு செய்துவிட்டுத் திரும்பலாமே. ரயில், பஸ், ஓட்டல், போலீஸ் காவல் முதலியவை எந்த நாளிலும் எந்த வேளையிலும் இருக்கும்போது, ஒரே நாளில் போய்க் குவியும் வழக்கத்தை விட்டால் தப்பு என்ன ?'' என்றேன்.

ஒரு மூலையில் பெண்கள் இருந்த பகுதியில் குழந்தை ஒன்று அலறி அழுதது. திரும்பிப் பார்த்தேன். கால் நோக நின்றபடியே குழந்தையை வைத்து வருந்திக்கொண்டிருந்த ஒருத்தி, கால்வலி தீர்வதற்காகக் கொஞ்சம் திரும்பினளாம். பக்கத்தில் இருந்தவள் வைத்திருந்த மூட்டை குழந்தையின் தலையில் பட்டதாம் ; அதனல் அழுததாம். என் மனம் வருந்தியது. அங்கே இன்னும் ஏழெட்டுப் பெண்கள் நின்ற நிலையிலேயே நெருக்குண்டு வருந்தியதைக் கண்டேன். 'நீ தள்ளுகிறாய்', 'நீ தான், நான் அல்ல', 'நீ மட்டும் தான் பணம் கொடுத்து டிக்கட் வாங்கினயா ? நானும் தான் பணம் கொடுத்து வந்திருக்கிறேன்', 'உன் வாயை இங்கே காட்டாதே', 'நீ உன் வாயை மாமியாரிடத்தில் காட்டு', 'உங்கள் அப்பன் வீட்டு வண்டியா' 'இல்லை, உன் பாட்டன் வீட்டு வண்டி' என்று இப்படியே பேச்சுக்கள் படிப்படியாக வளரத் தொடங்கின.

என் பக்கத்தில் ஒருவர் இந்த நெருக்கடியிலும் சிகரெட் பற்ற வைத்து எங்கள் முகத்தில் ஊதிக் கொண்டிருந்தார். அதற்காக முகத்தை வேறு பக்கம் திருப்பி நின்றேன். அங்கே நேர் மூலையில் நீண்ட தலைப்பாகை அணிந்த மார்வாரி ஒருவர் பெரிய படுக்

கையை விரித்து மடித்து அதன்மேல் அவரே ஒரு பெரிய திண்டுபோல் உட்கார்ந்திருந்த காட்சியைக் கண்டேன். அவர் ஒருவருடைய உடம்பு கொண்ட இடத்தில் மூன்று நான்குபேர் உட்காரலாம் போல் தோன்றியது. "அங்கே போய் அவரை நகரச் செய்தால் நாம் இருவரும் இருக்கலாமே" என்று இனியனுக்குச் சொன்னேன். "அங்கே போவது எப்படி? அதைச் சொல். வல்வில்ஓரி என்று யாரோ ஒருவனைப் பற்றிப் படித்தோமே அவனுடைய அம்பு வந்தாலும் கூட இந்தக் கூட்டத்தை ஊடுருவிச் செல்ல முடியாதுபோல் இருக்கிறதே" என்றான் அவன்.

பக்கத்தில் எங்களை நெருக்கிக்கொண்டிருந்த இளைஞர் ஒருவர் இதைக் கேட்டதும் சிரித்தார். "திருவிழாவுக்குக் கூட்டமாகப் போவதைத் தடுக்க வழி சொன்னீர்கள். திருமணத்திற்கு இப்படிக் கூட்டமாகப் போவதைத் தடுக்க வழி சொல்லுங்கள்" என்று சிரித்தபடியே கேட்டார்.

"திருமணத்திற்கு வருமாறு எல்லோருக்கும் அழைப்பு அனுப்பி வற்புறுத்தும் மூட வழக்கம் தொலைய வேண்டும்" என்றேன் நான்.

உடனே இனியன், "அதுவும் வேண்டாம். இன்ன மாதத்தில் இன்ன இன்ன நாட்கள் மட்டுமே திருமணத்திற்கு உரியவை என்னும் எண்ணம் ஒழிந்து எந்த மாதத்திலும் எந்த நாளிலும் திருமணம் செய்யலாம் என்று ஏற்பட வேண்டும்" என்றான்.

இளைஞர் மறுபடியும் சிரித்து, "சட்டம் வகுத்து வற்புறுத்தினாலும் கீழ்ப்படியாத மக்கள், பொதுநலம் என்று உணர்ந்து இப்படித் தாங்களே திருந்தப் போகிறார்களா? ஒருநாளும் இல்லை. இதற்குச் சட்டமும் செய்ய முடியாதே" என்றார்.

உடனே இனியன் அதற்கு வழி கூறினான். "இன்ன நாளில் இன்ன முகூர்த்தத்தில் செய்தால் தான் நல்லபடி வாழ முடியும் என்ற நம்பிக்கையைத் தகர்த்துவிட வேண்டும். இப்போது நல்ல வருவாயும் தெளிவும் பெற்று நன்முக வாழ்கின்றவர்கள் நூற்றுக்கு ஒருவர் இருவராக உள்ளனர். மற்றத் தொண்ணூற்றெட்டுப் பேர் தத்தளிக்கின்றனர். ஆகையால் வேறு மாதத்தில் வேறு நாளில் செய்தால் வாழ்க்கை சீர்கெடுமோ என்று அஞ்சுகிறார்கள். இந்த அச்சத்தைப் போக்கி நிலைமையை மாற்றிவிட வேண்டும். பிறந்த மக்கள் எல்லோரும் நன்முக வாழ முடியும் என்று நல்லபடி சமுதாயத்தை அமைத்துக் காட்ட வேண்டும். உள்ளத்தில் அன்புகொண்டு உடம்பால் உழைக்க முடிந்த எல்லோருக்கும் தக்க தொழிலும் நல்ல வாழ்வும் உண்டு என்று காட்டினால் போதும். நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதுபேர்க்கு வாழ்க்கையைப் பற்றிய பயம் போய்விடும். எந்த மாதத்தில் எந்த நாளில் திருமணம் செய்தாலும் நன்முக வாழ முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விடும். அடிப்படையைத் திருத்தச் சட்டம் செய்ய வேண்டுமே தவிர, உள்ளே காய்ச்சலுக்கு மருந்து தராமல் மேல் சூட்டைத் தணிப்பதற்குத் தண்ணீர் தடவக் கூடாது" என்றார்.

எங்கள் எதிரே இருந்த கிழவர் ஒருவர் "நல்லா— சொன்னீர்கள். அப்படித்தான் இப்போது கிராமங்களில் கள் சாராயத்துக்குச் சட்டம் போட்டு, கிராமங்களையே பாழ்படுத்துகிறார்கள். மக்களுக்குத் தொழில் கொடுக்காமலே கள் சாராயக் கடைகளை மூடி விட்டார்கள். இப்போது எந்த ஊரில் பார்த்தாலும் நூறு இருநூறுபேர் கள்ளச் சாராயம் காய்ச்சும்

தொழிலில் இறங்கிவிட்டார்கள். கிராமங்களைக் கெடுத்துப் பாழாக்கிவிட்டார்கள்'' என்றார்.

அந்த கிழவரின் முகத்தில் இரக்கமும் உண்மையும் தெளிவாகப் புலப்பட்டன. அவர் ஏதோ பேச வேண்டுமே என்று பேசாமல், உள்ளத்தில் நெடு நாளாக உருகி உணர்ந்த உண்மையையே வாய்ச் சொல்லால் வெளிப்படுத்தினர் என்பதை அறிந்தேன். அவ்வாறு சொன்னவுடனே, நம்பிக்கை இழந்த சோர்வு உடையவராய், வாயால் சப்புக் கொட்டித் தலை குனிந்து எதையோ பார்த்துக்கொண்டிருந்தார். அந்தப் பார்வை கவலை நிறைந்ததாக இருந்தது.

தாம்பர நிலையத்திலும் பலர் நெருக்கிக்கொண்டு எறினர்கள். அவர்களுள் மாணவர்கள் போல் தோன்றிய இளைஞர் சிலர் இந்த நெருக்கடியில் ஓர் இன்பம் காண்பதுபோல் சிரித்துப்பேசி விளையாடினர். வண்டி நிலையத்தை விட்டு நகர்ந்ததும் இனிய குரல் ஒன்று கேட்டுத் திரும்பினேன்.

குடியை நாடாதே மனமே - கள்சாராயக்
குடியை நாடாதே
கள் சாராயத்தாலே
கணக்கற்ற குடும்பங்கள்
கெட்டே போனதாலே –
குடியை நாடாதே மனமே – கள்சாராயக்
குடியை நாடாதே

என்று இருபத்தைந்து வயதுள்ள ஏழைப் பெண் ஒருத்தி முத்து முத்தாகச் சொற்கள் தெளிவாக விளங்க இனிய குரலில் பாடினாள். எல்லோருடைய பார்வையும் அவள்பக்கம் திரும்பின. மூலையில் ஏழெட்டுப் பெண்கள் சிட்டுக்குருவிகள்போல் முணு முணுத்துப் போட்டுக்கொண்ட சில்லறைச் சண்டை

களும் ஓய்ந்து அமைதி நிலவியது. இப்படிப்பட்ட நெருக்கம் மிகுந்த பயணங்களின்போது அமைதி நிலவுதற்காகவாவது, இத்தகைய ஏழை இசைக் கலைஞர்களைப் பெட்டிகளுக்குள் பாடவிடுவது நல்லது போல் தோன்றியது. கிழவர் பாட்டுக்காரியையே உற்றுப் பார்த்துக் கேட்டுக்கொண்டிருந்தார்.

இனிய குரலே மட்டும் அல்லாமல் கவர்ச்சியான அழகையும் கடவுள் அந்த ஏழைக்குப் படைத்திருந்தார். அழுக்குப் படிந்த கந்தல் அணிந்த அவளுடைய முகம் பொலிவு குன்றாமல் இருந்தது. சிற்பி செதுக்கிய பொற்சிலை போல் அவளுடைய கழுத்தும் கையும் விரல்களும் நகங்களும் அழகாக அமைந்திருந்தன. நகரத்துப் பெண்களிடையே காணமுடியாத சிறுத்த இடை அவளுடைய அழகுக்கு ஓர் உயர்வு தந்தது. எல்லாவற்றிலும் மேலானது அவளுடைய குரலில் பிறந்து பெட்டியெல்லாம் பரவி ரயில் வழியில் வீசும் காற்றில் மிதந்து வான வெளியில் கலந்த அந்த இனிய இசையாகும். அந்த இசையில் இருந்த மென்மை அவளுடைய அழகுக்கு மெருகு கொடுத்தாற்போல் இருந்தது.

பாட்டு முடியும் வரையில் ஒருவரும் வாய் திறக்கவில்லை. அழுதுகொண்டிருந்த குழந்தைகளும் அமைதியாயின. வண்டலூர் வந்தது. பாட்டும் முடிந்தது. எல்லோருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளும் வகையில் இசைவிருந்து அளித்த அந்தத் தமிழ்ப் பெண், "அய்யா! சாமி! துரைமார்களே! தாய்மார்களே! ஏழையைக் காப்பாற்றுங்கள். புண்ணியவான்களே!" என்று கைநீட்டிக் காசு வாங்கத் தொடங்கினாள்.

"பாட்டு, பிச்சை யெடுக்கிறது."

"தமிழிசை, தமிழிசை அய்யா!"

"தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்குது."

"தமிழர் என்றோர் இனம் உண்டு. தனியே அவர்க்கொரு குணம் உண்டு."

இவ்வாறு நாலைந்து இளைஞர்கள் பேச்செடுத்தார்கள். அவர்கள் தாம்பரத்தில் ஏறியவர்கள். அவர்களின் பேச்சில் கிண்டலும் கேலியும் இருந்தனவே தவிர, இரக்கமோ ஆத்திரமோ காணோம். அவர்களில் ஒருவன் மிக மட்டமாகவும் பேசத் தலைப்பட்டான். "வியாபாரிகள் சிலர் பல துறையில் இறங்கிக் காசு சேர்க்கவில்லையா, அது போல்தான். ஓய்ந்தபோது உடம்பு, மற்ற வேளையில் குரல், பாட்டு, பேச்சு, சிரிப்பு; எப்படியோ எதையாவது வைத்து வியாபாரம் செய்து வயிறு வளர்க்கிறாள் இந்தக் கற்பரசி" என்றான்.

"கேட்டாயா?" என்று மெல்ல இனியனிடம் சொன்னேன்.

"கேட்டேன். அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். இந்தக் காலத்தில் இளைஞர்கள் கற்கும் கல்வி எழைகளிடம் இரக்கத்தை உண்டாக்குவதும் இல்லை; சமுதாயம் இவர்களை இந்த நிலையில் வைத்திருக்கிறதே என்று ஆத்திரத்தை உண்டாக்குவதும் இல்லை. மற்றவர்கள் என்ன நிலையில் இருந்தாலும், தான் மட்டும் நன்றாக வாழ வேண்டும் என்று தன்னலத்தையே இக்காலத்துக் கல்வி கற்பிக்கிறது என்றான். சிறிது பொறுத்து, "அது எப்படியாவது போகட்டும். ஆங்கிலத்திலேயே பேசும் பழக்கமுடையவர்கள், இப்போது ஆங்கிலத்தோடு தமிழும் கலந்து பேசுகிறார்களே" என்றான்.

"ஒரு படி முன்னேற்றம்தான்" என்றேன்.

அப்போது அந்த ஏழை நங்கை எங்கள் பக்கம் வந்துகொண்டிருந்தாள். ஒரு சிலர் இரக்கம்

கொண்டு காலணு அரையணு கொடுத்துவந்தார்கள். வழுக்கைத் தலையும் அடர்ந்த மீசையுமாக இருந்த ஒருவர் அவளைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்து, "ஏன்'மா! நீ இந்தப் பாட்டை எங்கே கற்றுக் கொண்டாய்? மறைக்காமல் உண்மையைச் சொல்" என்றார்.

"எங்கேயோ சாமி! வயிற்றுப் பிழைப்புக்கு" என்றாள் அந்தப் பிச்சைப் பாட்டுக்காரி.

"சிறையில்தானே கற்றுக்கொடுத்தார்கள்?"

"ஆமாம் போங்க. அது எப்படி உங்களுக்குத் தெரியும்?"

"உன்னைப் போல் சாராயம் காய்ச்சி அகப்பட்டுக் கொண்டு வந்து சிறைக்குப்போய் வந்தவள் எங்கள் ஊரில் ஒருத்தி இருக்கிறாள். அவள் இதே பாட்டைப் பாடுகிறாள். அவளுக்குச் சிறையில் கற்றுக்கொடுத் தார்களாம்."

ஏழையின் முகத்தில் வெறுப்பும் சினமும் தோன்றின. "அவளைப் போல் நான் சாராயம் காய்ச்சி அகப்பட்டுக்கொள்ளவில்லை. சாராயத்தைப் போலீஸ்காரரே கொண்டுவந்து எங்கள் வீட்டில் வைத்துச் சோதனை தேடி என்னைக் குற்றவாளி என்று பிடித்துக்கொண்டு போனார்கள். அவர்களுக்கு இணங்கவில்லை என்று அப்படிச் செய்தார்கள்" என்று சொல்லியபடியே அங்கே நிற்காமல் அங்கிருந்த வர்களிடம் காசும் கேட்காமல் நகர்ந்து வந்துவிட்டாள்.

பிச்சைத் தொழிலுக்குப் புதியவளோ என்ன வோ? இன்னும் மான உணர்ச்சி அவளை விட்டு நீங்க வில்லை. என்ன காரணத்தாலோ சிறைவாழ்க்கையைப் பற்றிக் கேட்டவரைத் திரும்பிப் பார்க்கவும் மனம் இல்லாமல் நகர்ந்துவிட்டாள். அதன் பிறகு அவளுடைய முகத்தில் சிறிதும் தெம்பு இல்லாமல்

போய்விட்டது. அடுத்த நிலையத்தில் வண்டி நின்றதும் அந்தப் பெட்டியை விட்டே இறங்கி அடுத்த பெட்டிக்கோ வேறு எங்கோ போய்விட்டாள்.

என்னைப் போல் இந்தக் காட்சியை வேறு சிலரும் கவனித்துவந்திருக்கிறார்கள். அவள் இறங்கியவுடனே, அந்த வழுக்கைத் தலையார், " பார்த்தீர்களா? உண்மையைக் கேட்டவுடன் சொல்லாமல் நழுவிவிட்டாள் " என்று வெற்றி பெற்றவர்போல் சுற்றியுள்ளவர்களை ஒரு பார்வை பார்த்தார்.

"இவளே கள்ளச் சாராயம் காய்ச்சி அகப்பட்டுக் கொண்டாள் என்று சொல்ல முடியாது " என்றார் அவர்க்கு எதிரில் இருந்தவர்.

" இவள் காய்ச்சாவிட்டால் இவளுடைய கணவர் அண்ணன் தம்பி காய்ச்சி இருக்கலாம். இவள் சாராயத்தை எடுத்து மறைத்து வைத்திருக்கலாம் " என்றார் வழுக்கைத் தலையார்.

பக்கத்தில் இருந்தவர் முன்னுரையோடு பேச்செடுத்தார். " இந்த வகையில் எனக்கும் கொஞ்சம் தெரியும். எனக்கும் கிராமத்தில் வீடு வாசல் உண்டு. கிராமத்து அனுபவம் உண்டு " என்று சொல்லி ஒரு கனைப்புக் கனைத்தார். " மணியகாரர்க்குப் பகை என்ற காரணத்தால், வேண்டுமென்றே சாராயப் புட்டியைக் கொண்டுபோய் ஒரு வீட்டில் வைத்து விட்டு, பிறகு நாலைந்து பேரைச் சேர்த்துக்கொண்டு போய்ப் பிடித்தார்கள் " என்றார்.

" அது எப்படி நடக்க முடியும்? பொய். இது என்ன காட்டுமிராண்டிக் காலமா? அப்படிச் செய்தால் ஊரார்க்குத் தெரியாதா? சட்டம் பேசாதா?" என்றார் வழுக்கைத் தலையார்.

" நேரில் போய்ப் பாருங்கள், தெரியும். நான் சொன்னது முழு உண்மை. ஊரார்க்குத் தெரிந்தால்

என்ன செய்ய முடியும்? மூலைவீட்டில் உட்கார்ந்தபடி அய்யோ பாவம் என்று பேசிக்கொள்வார்கள். அவ்வளவே தவிர, பகையின் காரணத்தால் போலீசாரைத் தூண்டி இவ்வாறு செய்கிறார் என்று வெளிப்படையாகத் தடுக்க முன்வர மாட்டார்கள். நியாயத்துக்குக் காலம் இல்லை, காலம் கெட்டுவிட்டது, நாம் சொன்னால் கேட்பார்களா, ஆண்டவன் எல்லோருக்கும் பொதுவாக இருக்கிறான், பார்த்துக்கொள்வான் என்று மூலையில் பேசிக்கொண்டிருப்பார்கள். சட்டம் மட்டும் என்ன செய்யும்? அது ஏழைகளை எப்படிக் காப்பாற்றும்? செல்வமோ செல்வாக்கோ இருந்தால் தான் சட்டம் வாய்திறக்கும்?" என்றார் முன்னவர்.

வழுக்கைத் தலையார் அப்போதும் விட்டுத்தரவில்லை. "இவ்வளவு கடுமையாக இருக்கும்போதே, ஊர் ஊராக வீடுவீடாகக் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்களே, இப்படிப்பட்டவர்களை எல்லாம் இரக்கம் பார்த்து விட்டுவிட்டால், உலகம் என்ன ஆகும்? எல்லோரும் சாராயத்திலேயே வாய் கொப்புளித்துச் சாராயத்திலேயே முழுகிவிடுவார்கள்" என்றார்.

அவர் சொன்னது சரி என்று எனக்குப் பட்டது.

"உண்மையான குற்றவாளிகளைக் கண்டுபிடித்துத் தண்டித்தால் எப்போதும் குற்றங்கள் குறைந்து போகும். திறமையான குற்றவாளிகளை விட்டுவிட்டு, திக்கற்ற ஏழை எளியவர்களைக் குற்றம் இல்லாத போதே மிரட்டிப் பிடித்துத் தண்டிப்பதால்தான், குற்றங்கள் வளர்கின்றன". என்றார் எதிரில் இருந்தவர்.

நண்பன் இனியன் ஏதோ சொல்ல வாயெடுத்து, "ஆனால்" என்றான்.

அதற்குள் வழுக்கைத் தலையாரே பேசத்தொடங்கி விட்டார். "ஒன்று இரண்டு குற்றங்களில், செய்யா

தவர்களையும் பிடித்துத் தண்டிக்க வேண்டி வரும். அப்படி இல்லாவிட்டால் உலகத்தைக் கட்டி ஆள முடியுமா? அப்படிச் சிலரைப் பிடித்துத் தண்டனை கொடுத்தால்தான் மற்றவர்களுக்குப் பயம் இருக்கும்" என்றார்.

"அதனால் பயம் ஏற்படுவதில்லை. குற்றவாளிகளுக்குத் திறமைதான் ஏற்படுகிறது. சட்டத்தின் பிடிப்புக்கும் போலீசுக்கும் அகப்படாதவகையில் திறமையாகக் குற்றம்செய்யக் கற்றுக்கொள்கிறார்கள். அப்படித்தான் இப்போது நாடு மாறிக்கொண்டு வருகிறது. எத்தனை சான்றுகள் வேண்டுமானாலும் காட்டுவேன்" என்றான் இனியன்.

எதிர்ப்பக்கத்தில் இருந்தவர் அவன் சொன்னதைக் கேட்டு மிக மகிழ்ந்தவராய், "உண்மை, உண்மை, முழு உண்மை. கிராமத்தார்க்கு முன்னெல்லாம் மனச்சாட்சி, நீதிக்கு அஞ்சுதல், உண்மைக்குத் தலைவணங்குதல் எல்லாம் இருந்தன. இப்போது குற்றம் செய்யவும் தயங்குவதில்லை; அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் தயங்குவதில்லை" என்றார்.

"ஆமாம் ஆமாம்" என்று என் வாய் சொல்லிக் கொண்டிருந்தது.

"உண்மையைச் சொல்லி, அமைதியாக நடந்தால் ஏமாளிகள் என்று அதிகாரிகள் எண்ணி அவர்களையே பிடித்து வதைக்கிறார்கள். என்ன செய்வது? அதனால் எல்லோரும் திறமை கற்றுக்கொள்கிறார்கள்" என்றான் இனியன்.

புதிதாக ஒருவர் எங்கள் பேச்சில் கலந்துகொண்டார். "என்ன திறமை வந்தாலும், மிகத் திறமை உள்ளவர்களை விட்டுவிட்டு அடுத்தாற்போல் உள்ளவர்களைப் பிடித்துக்கொள்கிறார்கள். வகுப்பில் உள்ள நாற்பது பேரும் நன்றாகப் படித்தாலும்,

எல்லாரையும் மேல்வகுப்புக்கு அனுப்புகிறார்களா? அவர்களில் நாலைந்து பேரையாவது பிடித்துக் குறைந்த மார்க்குக் கொடுத்து அந்த வகுப்பில் நிறுத்திவைப்ப தில்லையா? அது போல்" என்றார்.

"நீங்கள் என்ன, ஆசிரியரா?" என்றேன்.

"நான் ஆசிரியன் அல்ல. அந்தப் பாவத் தொழில் எனக்கு ஏன்? என் மகன் நன்றாகப் படிக்கிறான். அவனை மேல்வகுப்புக்கு அனுப்பாமல் நிறுத்திவிட் டார்கள். காரணம் என்ன என்றால், கணக்கில் மூன்று மார்க்குக் குறைவு. வேறு பள்ளிக்கூடத்தில் எட்டுக் மார்க்குக் குறைந்தவர்களுக்கும் தேர்ச்சி கொடுத்தார்களே என்று ஆசிரியரிடம் சொல்லி முறையிட்டேன். 'நாற்பது பேரில் இவன் முப்பத் தேழாவது பையனாக இருக்கிறான். வகுப்புக்கு ஐந்து பேரையாவது நிறுத்த வேண்டும். அதனால் நிறுத்தி விட்டார்கள்' என்றார் ஆசிரியர். அந்த அனுபவத் தால் சொல்கிறேன்" என்றார் அந்தப் புதியவர்.

எனக்குத் திடீரென்று வேறொன்று நினைவுக்கு வந்தது. "இது உண்மைதான். இன்னொன்றில் பாருங்கள். மற்ற நாடுகளில் மிக மோசமாக நடக்கும் பெண்ணையே ஒழுக்கம் கெட்டவள் என்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் ஒருமுறை எதிர்பாராத வகை யில் தவறிய பெண்ணையும் சமுதாயம் பழித்துக் கை விடுகிறது. காரணம், தமிழரிடையே கற்புக்கு மதிப்பு மிகுதி. இங்கே ஒரு பெண் கற்பு வாழ்க்கையில் ஒன்று இரண்டு மார்க்குக் குறைந்தாலும் சமுதாயம் தள்ளிவிடத் துணிகிறது" என்றேன்.

இனியன் கண்களை நெறித்துத் தலை அசைத்தான்.

வழுக்கைத் தலையார் பேசாமல் கேட்டுக்கொண் டிருந்தார். வண்டி அடுத்த நிலையத்தில் நின்றது. அங்கே சோடா விற்ற பையனை வழுக்கைத் தலையார்

கூப்பிட்டு ஒரு சோடா உடைத்துத் தரச் சொன்னார். எங்கள்மேல் இருந்த ஆத்திரத்தைத் தணிப்பவர் போல், அதை மடமட என்று குடித்தார். "ஐஸ் போட்டது இங்கே கிடைக்காதா?" என்றார். "இங்கே கிடைக்காது" என்றான் பையன். சோடாவைக் குடித்தவர் எங்களை நோக்கிப் பெருமிதத்தோடு இரண்டு மூன்று ஏப்பம் விட்டார். வண்டி நகர்ந்த போது, புதிய பிச்சைக்காரி ஒருத்தியின் குரல் கேட்டது. அவள் பாடவில்லை. அவளுக்குப் பின் அவளுடைய தோளைப் பிடித்தவாறு நின்றிருந்த குருடன் பாடினான். குதம்பைச் சித்தர் பாட்டைத் தப்பும் தவறுமாகப் பாடினான். செவி கொடுத்துக் கேட்க மனம் இல்லை. அந்தப் பாட்டை மறந்து, அவளுடைய இடுப்பில் இருந்த சின்ன குழந்தையின் கண்களைப் பார்த்துக்கொண் டிருக்கலாம் போல் தோன்றியது. அந்தக் கண்களின் குறுகுறுத்த பார்வையில் உலகத்தை எள்ளி நகையாடும் குறிப்பு இருந்தது. அந்த மாணவ இளைஞர்கள் இருக்கிறார்களா, இப்போது என்ன பேசிக்கொள்கிறார்கள் என்று பார்த்தேன். அவர்கள் முன்னைய நிலையத்தில் இறங்கிப் போய்விட்டிருக்க வேண்டும் என்று எண்ணினேன்.

வழுக்கைத் தலையார்க்கு எதிரில் இருந்தவர் என்னைப் பார்த்து, "அய்யா! நீங்கள் என்னென்னவோ பேசினீர்கள். என்ன பயன்? நீங்களும் நானும் சொன்னால் கேட்பவர் யார்? நீங்கள் சொன்னது போல், திறமை இருந்தால் என்ன குற்றம் செய்தாவது முன்னுக்கு வருகிறார்கள். திறமை என்றால் என்ன? இந்தக் காலத்தில் பணம்தான் திறமை. பணம் இருந்தால் தானே வழி பிறக்கிறது; அதிகாரம் வணங்கிப் பேசுகிறது; சட்டம் வாயை மூடிக்கொள்கிறது. தப்பும் தவறும் மறைந்து போகின்றன"

என்றார். ஒரு பெருமூச்சு விட்டபின், "எங்கள் ஊரில் இன்றைக்குக் கோயில் பூசை அருச்சனை மிகச் சிறப்பாக நடக்கின்றன. புது மண்டபமும் ஒன்று உருவாகியிருக்கிறது. எல்லாம் நல்ல காசு என்று எண்ணுகிறீர்களா? அதுதான் இல்லை. கள்ளச் சாராயக் காசு. அந்தச் சாராயம் கிராமங்களில் காய்ச்சுவது அல்ல. நகரத்தின் நடுவே பெரிய இடத்தில் காய்ச்சுவது. ஸ்பிரிட் வாங்கி அதைச் சாராயமாக மாற்றி மாற்றியே அவர் பெரிய செல்வராகிவிட்டார். அவரிடம் அறுபது எழுபது பேர் வேலை செய்து வயிறு வளர்க்கிறார்கள். அவர்மேல் குற்றம் சொல்வதாக எண்ணம் இல்லை. ஏன் என்றால், இன்றைக்கு அவர் கொடுக்கும் சம்பளமும் தொழிலும் இல்லையானால், அந்த அறுபது எழுபது குடும்பங்கள் பட்டினி கிடந்து வருந்தவேண்டி ஏற்படும். எதற்காகச் சொல்கிறேன் என்றால், கிராமத்தில் அப்படி ஒன்றும் பெரிய குற்றம் நடந்துவிடவில்லை என்பதற்குத்தான். கிராமத்தில் ஒரு வீசை வெல்லமும் ஒரு சீப்பு வாழைப்பழமும் வாங்கி வேலமரப் பட்டை உரித்து மூன்று புட்டிச் சாராயம் காய்ச்சினால் பெரிய குற்றம் என்று சிறையில் தள்ளுகிறார்கள். ஆனால், நகரத்தார் திறமையோடு மூந்நூறு நானூறு காலன் சாராயம் காய்ச்சி விற்றுப் பணம் சேர்த்துவிட்டால், அவர் வைக்கும் விருந்து முதலான ஆடம்பரங்களுக்குப் பெரிய பெரிய அதிகாரிகளும் பெரிய பெரிய தலைவர்களும் வந்து சாப்பிட்டு முகமலர்ந்து வெற்றிலைபாக்குப் போட்டுக் கொண்டு வணக்கம் சொல்லிவிட்டுப் போகிறார்கள். போன தேர்தலின்போது இரண்டு எம். எல். ஏ.க்களுக்கும் ஒரு பாராளுமன்றத்து எம். பி.க்கும் தேர்தலில் துணையாக நின்று அவரே பணமும் செலவு செய்தார். கார்களும் கொடுத்தார். கார் மட்டும்

நான்கு வைத்திருக்கிறார். ஆனால் கிராமங்களில் சிறு குற்றம் செய்து அகப்பட்டுக்கொண்டாலும் குடும்பமே நசுங்கிப்போகிறது ?'' என்றார்.

இது வரையில் தலைகுனிந்து வருந்திக்கொண்டிருந்த கிழவர் இப்போது தலைநிமிர்ந்து உட்கார்ந்து ஆர்வத்தோடு கேட்டுக்கொண்டிருந்தார். அவர் முகத்தில் அவ்வளவு சோர்வு இருந்த காரணம் என்ன, இந்தப் பேச்சைக் கேட்டதும் சோர்வு நீங்கக் காரணம் என்ன என்று எனக்குள் எண்ணினேன். அவருக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்து கேட்கவேண்டும் என்று மனம் துண்டியது. பக்கத்தில் இருந்தவரும் மூட்டை முடிச்சுக்களை எடுத்துவைக்கத் தொடங்கினர். அவர் அடுத்த நிலையத்தில் இறங்கப் போகிறார் என்பதை அறிந்ததும், அந்த இடத்தை நோக்கிச் சென்றேன்.

மெல்லப் பக்கத்தில் உட்கார முயன்றேன். அவரும் சிறிது நகர்ந்து இடம்கொடுத்தார். ''பெரியவரே ! எந்த ஊர் '' என்றேன்.

'' செங்கல்பட்டுப் பக்கத்தில் கிராமம் '' என்றார்.

'' முன்னே யிருந்து பார்க்கிறேன். ஒரே கவலையாக முகத்தைச் சோரவிட்டு உட்கார்ந்திருக்கிறீரே?''

'' என் கவலை எனக்கு. சொன்னால் தீரப் போகிறதா ?''

'' சொன்னால் தீராது. ஆனால் பாதியாய்க் குறையும் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள்.''

'' இருக்கலாம்.''

'' இந்தத் தள்ளாத வயதில், பாவம் ! இவ்வளவு கவலைப்படவேண்டியிருக்கிறதே !''

'' நான் கேட்டு வந்தவழி, என்ன செய்வது ?''

'' அது ஒரு பக்கம் இருக்கட்டும். உனக்குப் பிள்ளைகள் இல்லையா ? சம்பாதித்துக் காப்பாற்றுவதில்லையா ?''

"ஒரே பிள்ளைதான். அவனோடுதான் இருக்கிறேன். ஆனால் நான் இருக்கிற ஊர் அடியோடு கெட்டுப்போச்சு."

"ஒவ்வொருவரும் அவரவர்களின் ஊரைப் பற்றி அப்படித்தான் சொல்கிறார்கள். ஊர் கெட்டுப் போச்சு, ஊர் கெட்டுப் போச்சு என்று எல்லோரும் சொல்கிறார்கள். முடிவில் எல்லோருமாகச் சேர்ந்து, உலகம் கெட்டுப்போச்சு, காலம் கெட்டுப்போச்சு என்கிறோம். இந்தப் பேச்சுக்கு முடிவே காணோமே."

"ஆனாலும் எங்கள் ஊர் கெட்டுப்போனது போல் வேறு எதுவும் இல்லை. மனிதன் ஏதோ தொழில் செய்து வயிறு வளர்த்து மானத்தோடு வாழ்வதற்கு ஊர் அல்ல அது."

"அப்படி என்ன? ஊரில் போக்கிரிகள் கணக்கில்லாமல் பெருகிவிட்டார்களா? ஊரில் பெரிய மனிதர்கள் இல்லையா? ஊர்ப் பஞ்சாயத்து இல்லையா? மணியம், போலீஸ் இல்லையா? நீங்கள் சொல்வது எல்லாம் வேடிக்கையாக இருக்கிறதே."

"வேலி வேலியாக இருந்தால் நீங்கள் சொல்வது சரிதான். வேலியே பயிரை மேய்ந்தால்—?"

முதியவர் இவ்வளவு அழகாக, பொருத்தமான உவமையோடு, திறமையாகப் பேசுகிறாரே என்று எனக்குள் வியந்தேன். "இருக்கலாம். ஆனால் நம் கடமையைச் செய்துவிட்டு ஊர்வம்புக்குப் போகாமல் நம் வீட்டோடு இருந்தால் யார் என்ன செய்ய முடியும்?" என்று கேட்டு அவருடைய வாயைக் கிளறினேன்.

"அது அந்தக்காலம். இந்தக்காலத்தில் பட்டணங்களில் அப்படி இருக்கலாம். அதோ, கீழ்ப்பாக்கத்தில் என் மாமன்பிள்ளைகள் இருக்கிறார்கள். காலையில் வீட்டைவிட்டுக் கிளம்பி வேலை செய்துவிட்டு விளக்கு

வைத்தபிறகு திரும்பி வருகிறார்கள். வீடு உண்டு. தொழில் உண்டு என்று வாழ்க்கை நடத்துகிறார்கள். கவலையே இல்லை. அவர்கள் ஒரு வம்புக்கும் போக வில்லை ; போக வேண்டியதும் இல்லை. ஆனால் கிராமங் களில் நீ சும்மா இருந்தாலும் உன்னை விடுவதில்லை. தெருவம்பு ஊர்வம்பு ஏதாவது ஒன்றில் உன்னைச் சிக்கவைத்துப் பாழ்படுத்துகிறார்கள். என் குடும்பத் தின் கதையும் அப்படித்தான் ஆயிற்று'' என்றார்.

'' அதனால்தான் இவ்வளவு கவலையாக இருக் கிறாய், பாவம் '' என்றேன்.

'' கவலையைப் பற்றிச் சொல்லவே முடியாது. எங்காவது போய் ரயிலில் தலைகொடுத்தாவது சாகலாமா என்று இருக்கிறது. எனக்குச் சாவும் வரவில்லை. அண்ணன் தம்பி அக்கா எல்லாரும் செத்துப் போய்விட்டார்கள். எனக்குச் சாவு வரவில்லை.''

'' வீட்டிலே மனைவி மக்கள் ஏதாவது தொல்லை கொடுக்கிறார்களா ?''

'' மனைவி இறந்துபோய் இருபத்தைந்து பொங்கல் வந்துவிட்டது. அவள் இருந்திருந்தால் எனக்கு இவ் வளவு துன்பம் வந்திருக்காது. அவள் இறந்தபோது என் பையனுக்கு மூன்று வயது. ஒரு கைக்குழந்தை அவளோடே செத்துவிட்டது. அந்தப் பையனை வளர்க்க நான் பட்ட பாடு சொல்ல முடியாது.''

'' இரண்டாவது திருமணம் செய்துகொள்ள வில்லையா ?''

'' எல்லாரும் சொன்னார்கள். ஆனால் நான் ஏழை. ஒன்றரைக்காணி நிலத்தை வைத்துவிட்டுப் போனார் கள் பெரியவர்கள். அண்ணன் தம்பிகள் பங்குபோட்டு, எனக்கு அரைக்காணி வந்தது. அதுவும் மேட்டு நிலம். சரியான நீர்ப்பாய்ச்சல் இல்லை. குத்தகைக்குப் பயிரிடவேண்டும், அல்லது கூலிவேலை செய்து வயிறு

வளர்க்க வேண்டும். இந்த நிலையில் திருமணம் செய்து கொண்டு அவளே வேறே வைத்துக்கொண்டு காப்பாற்றுவது எப்படி? திருமணம் செய்துகொண்டிருப்பேன். எங்கள் ஊருக்கு வந்த பெரியவர் படித்தவர் ஒருவர் வேண்டாம் என்று புத்தி சொல்லிவிட்டுப் போனார். அவர் சொல்லைக் கேட்டு நடந்ததற்காக ஊரார் என்னைப் பைத்தியக்காரன் என்று கேலி செய்தார்கள். நான் உறுதியாக இருந்துவிட்டேன். இரண்டொரு முறை நப்பாசை தோன்றியது உண்டு. எப்படியோ தட்டுத் தடுமாறித் தனியாகவே காலம் கழித்து விட்டேன். பையனே மூன்றுவயது முதல் நானே வளர்த்துவந்தேன். நானே பொங்கி நானே ஊட்டி வளர்த்தேன். பையனும் நல்லபடியே வளர்ந்தான். நல்ல பெயரே எடுத்தான். என் சொல்லைத் தட்டாமல் தான் இருந்தான். நல்ல இடத்தில், என் அத்தையைக் கொடுத்த வீட்டிலிருந்து பெண் பார்த்துக் கட்டினேன். அவளும் நல்ல பெண்ணாகவே இருந்தாள். குடும்பத்தை நல்லபடியே கவனித்துக்கொண்டுவந்தாள். தலைவிதி வேறு வகையாக மாற்றிவிட்டது!"

"இப்போது எங்கே இருக்கிறார்கள்? உனக்குச் சோறு போடுவதில்லையா?"

"மெல்லப் பேசுங்கள்" என்று அந்த முதியவர் எனக்குச் சைகை செய்தார்.

அவருடைய விருப்பம் போலவே மெல்லப் பேசினேன். "இந்தக் காலத்தில் பிள்ளைகள் பெற்றோர்களுக்குச் சோறு போட்டுக் காப்பாற்றுவது அரிதாகவே இருக்கிறது" என்றேன்.

"சோறு இருந்தால்தானே போடுவதற்கு? பிழைப்பையே கெடுத்துக்கொண்டான்; பெயரைக் கெடுத்துக்கொண்டான். வேறே ஒன்றும் இல்லை.

இந்நேரம் அங்கே பேசிக்கொண் டிருந்தீர்களே, அந்தச் சாராயத் தொழிலில் இறங்கிவிட்டான்."

"அடடா! கடைசியில் உங்கள் குடும்பமும் இந்தப் பாழும் தொழிலில் அழிந்துவிட்டதா?"

"அதில் ஈடுபடாமலே இருந்தான். அப்போது எல்லா வேலைக்கும் போய்ப் பாடுபட்டு உழைத்துக் கூலி கொண்டுவருவான். நானும் போவேன்; கூலி கொண்டுவருவேன். கிணறு வெட்டுதல், கூரை போர்த்தல், கூலிஎர், கூலிக்கு இறைப்பு, எரிக்கரை வேலை, மரம் வெட்டுதல் முதலான எல்லா வேலைக்கும் நாங்கள் இரண்டுபேரும் போவோம். 'குப்பனுக்கு என்ன குறைச்சல்; அப்பனும் பிள்ளையும் போய்ப் பாடுபட்டு உழைக்கிறார்கள்; நல்ல சாப்பாடு; நல்ல வாழ்க்கை' என்று ஊராரும் பேசிக்கொள்வார்கள். இப்படி இருந்த வாழ்க்கையில் சாராயம் புகுந்தது; பாழ்படுத்தியது."

"அந்தப் பாழும் தொழிலில் எப்படிப் போய்ச் சேர்ந்தான்?"

"போய்ச் சேரவேண்டுமா? அதுதான் ஊரில் மூலை முடுக்கெல்லாம் இருக்கிறதே. ஊரில் பலபேர் காய்ச்சக் கற்றுக்கொண்டார்கள். காய்ச்சித் தாங் களும் குடித்தார்கள்; மற்றவர்களுக்கும் விற்றார்கள்; விற்றுப் பணமாக்கினர்கள். சாராயம் காய்ச்சினவர் களின் கையில் எந்நேரமும் காசு நடமாடியதைப் பார்த்தான் பையன். அவர்கள் எந்நேரமும் டீ காப்பி குடித்தபடி மகிழ்ச்சியாக இருப்பதையும், அடிக்கடி சினிமாவுக்குப் போவதையும் பார்த்தான். நல்லபடி வெள்ளையாக உடுத்துக்கொண்டு உல்லாசமாகத் திரி வதைப் பார்த்தான். இவர்கள் இப்படிச் சந்தோசமாக இப்பதற்குக் காரணம் சாராயக் காசுதான் என் பதை உணர்ந்தான். தான் என்ன பாடுபட்டு உழைத்

காலும் இப்படி லாழ முடியவில்லையே என்று ஏங்கினன். அவ்வளவுதான். அன்று முதல் புத்தி கெட்டுவிட்டது.''

''அதற்கு முன்னமே அவனுக்குக் குடிக்கும் பழக்கம் உண்டா?''

''அய்யய்யோ! கிடையவே கிடையாது. குடிப்பவர்களைக் கண்டால் அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது.''

''அப்படிப்பட்டவன் இதில் எப்படி ஈடுபட்டான்?''

''அதுதான் சொன்னேனே! எல்லாம் காசு, காசு செய்த வேலைதான். உப்பிட்ட கூழ் குடிப்பதை விட, இட்டளி தோசை வடை சாப்பிட்டுக் காப்பி குடிக்க ஆசை இருக்காதா? எனக்கே ஒவ்வொரு நாள் அந்த ஆசை வருகிறதே, அவனுக்கு இருக்காதா? பகலெல்லாம் மாடு போல உழைத்துவிட்டு ஓய்ந்து கிடப்பதைவிட, சினிமாவுக்குப் போய் வேடிக்கையாய்க் கதை பார்க்க ஆசை இருக்காதா? உழைப்பிலில் அந்தச் சுகம் வராது, வேறு காசு வந்தால்தான் முடியும் என்று தெரிந்துகொண்டான். முதலில் சாராயம் காய்ச்சுகிற பிள்ளைகளைக் கண்டாலே பிடிக்காமல் இருந்தவன், அவர்களோடு சேர்ந்து பழகத் தொடங்கினன். பிறகு சிலநாள் கூலிவேலைக்குப் போகாமல், பயிர் வேலையும் கவனிக்காமல், அந்தப் பிள்ளைகளோடு சேர்ந்து திரிந்தான். நான் கண்டித்தேன். கண்டித்ததால் ஒரு பயனும் இல்லை. அவன் இரவில் அவர்களோடு சேர்ந்துகொண்டு எங்கெங்கோ போய் அந்த வித்தையைக் கற்றுக்கொண்டான். அப்போதும் அவன் நெடுங்காலம் குடிக்காமலே இருந்திருக்கிறான். உடனிருந்த பிள்ளைகள் எவ்வளவோ கட்டாயப்படுத்திப் பார்த்தும் அவன் குடிக்காமலே இருந்திருக்கிறான். ஆனால் முன்போல் வேலைக்குப்

போவது குறைந்து விட்டது. கையில் காசு வைத்துக் கொண்டு சிற்றுண்டிக்கடைக்குப் போய்ச் சாப்பிடுவ தாகக் கேள்விப்பட்டேன். அவனுடைய மனைவிக்கும் அடிக்கடி இட்டளி தோசை வடை வாங்கிக் கொடுத்த தாகவும் காதுக்கு வந்தது. என் மனத்தில் ஒரு திகில் ஏற்பட்டது. போலீஸ்காரரிடத்தில் தப்பித் தவறி அகப்பட்டுக்கொண்டால் என்ன செய்வது என்று கலங்கினேன். வீட்டில் எங்காவது கொண்டுவந்து மறைத்து வைக்கிறானு, வைத்து வியாபாரம் செய் கிறானு என்று இங்கும் அங்கும் தேடிப் பார்த்தேன். எங்கும் எதுவும் கிடைக்கவில்லை. இருந்தபோதிலும், கெட்ட தொழில் என்றைக்காவது பெயரைக் கெடுத்து விடும் என்று பயந்தேன். பல நாள் திருடன் ஒருநாள் அகப்படுவான் என்று எண்ணி எண்ணி வருத்தப் பட்டேன். ஒருநாள் அவனுக்கு நேரில் சொன்னேன். 'அப்பா! இந்தக் காசு நல்ல காசு அல்ல. நம்மிடம் அது சேர்ந்தாலும் கெடுதிதான் உண்டாகும். கடவுள் நமக்குக் கைகால் கொடுத்தார். உழைத்துக் கூழ் சாப்பிடுவதே ருசியானது. வேறே எதற்கும் ஆசைப்படாதே' என்று மெல்லச் சொன்னேன். 'நீ என்ன நினைத்துக்கொண்டு பேசுகிறாய் அப்பா! நான் என்ன திருடினேனு? கொள்ளை அடித்தேனு? சும்மா என்னென்னவோ பேசுகிறாயே' என்றான். இரண்டொரு நாள் கழித்து, 'சாராயம் காய்ச்சுகிற பிள்ளைகளோடு சேராதே அப்பா, பின்னால் அது வினையாய் விளையும்' என்றேன். அன்றைக்கு அவன் பேசிய பேச்சிலே பெரிய மாறுதல் இருந்தது. இத்தனை நாள் என்னை எதிர்த்துப் பேசாதவன், அன்றைக்கு எதிர்த்துப் பேசினான். 'உன் பெயர் கெடாமல் பார்த்துக்கொள். ஊரில் யாரோடுதான் சேருவது? அப்படிப் பார்த்தால் எல்லாரும்தான் சாராயம்

காய்ச்சுகிறார்கள். ஒருத்தரோடும் சேராமல் மூலை வீட்டிலேயே உட்கார்ந்திரு என்கிறாயா?' என்று சொல்லிவிட்டு எதிரில் நிற்காமல் போய்விட்டான். ஓஹ, கடிந்து அறிவுரை சொன்னாலும் தப்பாக இருக்கிறதே. அப்படிச் சொல்லச் சொல்ல நம்முடைய மதிப்புக் குறைகிறது, எதிர்ப்பும் வளர்கிறது என்று எண்ணி வருத்தப்பட்டேன். மருமகளும் முன்போல் இல்லை என்பதைக் கவனித்தேன். முன்போல் நாற்று நடுவதற்கும் களை பறிப்பதற்கும் அறுவடைக்கும் மற்றக் கூலிவேலைக்கும் போகாமலே அவள் பக்கத்து வீடுகளில் மிகுதியாகப் பழகிப் பேசிப் பொழுது போக்கத் தொடங்கினாள். என் போகவில்லை என்று எப்போதாவது கேட்டால் உடம்பு நன்றாக இல்லை என்று சாக்குச் சொல்லிவந்தாள். வெயில் உடம்புக்கு ஆகவில்லை என்றும் சேற்று ஈரம் ஒத்துக்கொள்ள வில்லை என்றும் காரணம் சொல்லிவந்தாள். அவன் அடிக்கடி காசு கொடுக்க, அதை வைத்துக்கொண்டு வடையும் தோசையும் வாங்கித் தின்றுகொண்டிருந்தாள். சமையலும் முன்போல் பாடுபட்டுச் செய்வதில்லை. புதுப்புடைவைகள், அழகான ரவிக்கைகள் இவைகள் வீட்டுக்கு வந்து சேர்ந்தன. இந்தப் போக்கு எங்கே போய் முடியுமோ என்று பயந்தேன். எப்படித் திருத்துவது என்று தெரியவில்லை. ஊரெல்லாம் கெட்டிருக்கும்போது, வீட்டை மட்டும் எப்படித் திருத்துவது என்று கவலையாயிற்று. ஊரில் போலீஸ்காரர் நுழைந்தபோதெல்லாம் என் மனம் திடுக்கிட்டுப் பயந்தது. என் பயம் ஒருநாள் உண்மையாய்ப் போயிற்று '' என்றார் கிழவர்.

அதற்குள் ஒரு நிலையத்தில் வண்டி சிறிது நேரம் நின்றது ; புறப்பட்டுவிட்டது. கிழவரும் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். நானும் கூர்ந்து கேட்ட

படி இருந்தேன். யாரோ ஒருவர் அந்த நிலையத்தில் ஏறி நேரே என்பக்கமாக வந்து என்னை நகரச் சொல்லி உட்கார்ந்தார். அதையும் கவனிக்காமல் கிழவர் பேசிக் கொண்டிருந்தார்.

" என் பயம் எல்லாம் ஒருநாள் உண்மை என்றே ஏற்பட்டுவிட்டது. மாட்டுக்கு வைக்கோல் எடுக்க லாம் என்று ஒருநாள் போரின் அருகே போய் எடுத்த போது, அதனுள் இரண்டு சாராயப் புட்டியைப் பார்த்தேன். எனக்குக் கடுங்கோபம் வந்தது. நேரே வீட்டிற்குள் சென்று மருமகளைக் கூப்பிட்டேன். அவளை அழைத்துக்கொண்டு போய் அந்தப் புட்டி களைக் காட்டினேன். ' பார்த்தாயா ? உன் வீட்டுக் காரனுடைய வேலையை ! நம் தலைக்கே தீம்பாக முடியுமே ! நமக்கு அடுக்குமா இது ? இந்தக் காசு உங்களை எத்தனை நாள் காப்பாற்றும் ? இந்தக் காசை வைத்துக் கொண்டு கண்டபடி செலவு செய் கிறீர்கள். வேலைக்கும் சரிவரப் போவதில்லை. சொந்தப் பயிரையும் கவனிப்பதில்லை. குடும்பமா இது ?' என்று கண்டித்துப் பேசினேன். ' யாரோ கொண்டுவந்து இங்கே நம்முடைய போரில் மறைத்து வைத்தால் அதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் ? சும்மா நீ எதை எதையோ பேசுகிறாயே!' என்றாள். எனக்கோ வயிறு எரிந்தது. அழிவு இப்படி வந்து சேர வேண்டுமா என்று கலங்கினேன். அன்று இரவு சாப்பிட மனம் இல்லை. வெளியே போய்ச் சத்திரத் தில் படுத்தேன். சத்திரத்தில் இளம் பிள்ளைகள் குடித்துவிட்டுச் செய்த அலங்கோலத்தைப் பார்க்க மனம் இல்லாமல், அதையும் விட்டுத் தொலைவில் ஓர் ஆலமரத்தின் அடியில் போய்ப்படுத்துக்கொண்டேன். திடீரென்று விழித்துக்கொண்டு, நல்ல பிள்ளையாக வளர்ந்தவன் இப்படி மாறிவிட்டானே என்று எண்ணி

எண்ணி மனவேதனை அடைந்தேன். வந்த மருமகளும் குடும்பத்தின் பெயரைப் பற்றிக் கவலைப்படாமல், தின்பண்டத்திற்கு வேண்டிய காசு பெரிதாக எண்ணி இப்படி அவனுக்குத் துணையாக இருக்கிறாளே என்று கவலைப்பட்டேன். விடியற்காலையில் எழுந்து வீட்டிற்குத் திரும்ப மனம் இல்லாமல் தயங்கித் தயங்கி நின்றேன். கடைசியில் பெற்று வளர்த்த பாசம் கேட்கவில்லை. மகனை விட்டுவிட்டு எங்கே போய் என்ன செய்வது என்று சோர்வோடு திரும்பினேன்" என்று நிறுத்தினர்.

அதுவரையில் விடாமல் பேசிக்கொண்டிருந்த அவர், ஏன் இப்போது நிறுத்தினர் என்று திரும்பிப் பார்த்தேன். இனியன் எங்கள் எதிரில் நின்று பேச்சைக் கவனித்தான். அப்போது அடுத்த நிலையத்தில் இறங்குவதற்காகச் சிலர் எழுந்து நின்று சாமான்களை எடுத்து ஒருசேர வைத்துக்கொண் டிருந்தமையால், உட்காருமிடம் கொஞ்சம் காலியாயிற்று. உடனே பக்கத்தில் இருந்தவரை நகரச் சொல்லி, என் பக்கத்தில் இனியனுக்கு இடம் கொடுத்தேன்.

"அப்புறம்?" என்று முதியவரைப் பார்த்தேன். அவர் பேசாமல் இருந்தார்.

"இவர் என்னுடன் வந்தவரே. என் நண்பர். இருவரும் ஒரே திருமணத்துக்குப் போகிறோம். சொல்லுங்கள்" என்றேன்.

பெருமூச்சு விட்டபடியே முதியவர் தொடங்கினர். "அன்று முழுதும் நான் யாருடனும் பேசவில்லை. பையனும் என்னுடன் பேசவில்லை. இப்படியே சில நாட்கள் கழிந்தன. ஒருநாள் ஒருவன் காலிப்புட்டியுடன் வீட்டிற்குள் நுழைந்து, நான் இருப்பது தெரியாமல், அரைப்புட்டிச் சாராயம் அவசரமாக வேண்டும் என்று மருமகளைக் கேட்டான். அவள்

ஏதோ மெல்லப் பேசி அவனை அனுப்பிவிட்டாள். அன்று மாலையே பையன் வீட்டிற்குள் நுழையும் போது கடுமையாகக் கேட்டுவிட வேண்டும் என்று எண்ணியிருந்தேன். ஆனால் நிலைமை எல்லை மீறிப் போய்விட்டது என்பதை அன்று மாலை அவன் வீட்டிற்குத் திரும்பியபோதுதான் தெரிந்துகொண் டேன். அவனுடைய நடையில் தள்ளாட்டம் இருந்தது. நான் இருப்பது தெரியாமல், வாயில் வந்ததைப் பேசிக்கொண்டு வந்தான். சாராய நாற்ற மும் வீசியது. மருமகள் அவனிடம் போய் ஏதோ மெல்லச் சொன்னாள். உடனே நாக்குக்குழறியபடியே 'இருந்தால் இருந்து போகட்டுமே. பயமா? பயமா என்று கேட்கிறேன்' என்றான். என் வயிறு எரிந்தது. மனமெல்லாம் கொதித்தது. 'டே பையா! பேரைக் கெடுத்துக்கொண்டாயே! கடைசியில் உன்னை வளர்த் தும் பயன் இல்லாமல் போச்சே'டா' என்று அழு தேன். குடிவெறியில் என்னுடைய மனவேதனை தெரியாமல், 'அழு அழு; யார் அழச் சொன்னார்கள்?' என்று வாய்பிதற்றிக்கொண் டிருந்தான். அதற்குள் எதிர்வீட்டார் பக்கத்து வீட்டார் சிலர் எட்டி எட்டிப் பார்க்கவே, ஒரு மூலையில் போய்ப் படுத்து என் வருத்தத்தை அடக்கிக்கொண்டேன்."

சிறிது நேரம் யாரும் ஒன்றும் பேசாமல் இருந் தோம். கிழவர்க்குப் பழைய நினைவு துயரத்தைக் கிளறிவிட்டது என்பதை அறிந்துகொண்டேன். மூற்றி லும் கேட்டறியாதவனைகையால், அவருடைய மனநிலை அறியாமல் இனியன் ஒரு கேள்வி கேட்டுவிட்டான். "ஆமாம், பெரியவரே! உனக்கு இந்தப் பழக்கம் உண்டா?" என்றான்.

"எனக்கா? சாராயக்கடை கூடாது என்று என்றைக்கு மூடினார்களோ அன்றைக்கே விட்டு

விட்டேன். அதற்கு முன்னும், நான் அடிக்கடி குடித்ததில்லை. போகி, மாட்டுப் பொங்கல், தீபாவளி முதலான பண்டிகை நாட்களில் கள் குடித்திருக்கிறேன். உடம்பு ஈரமாகிச் சளி காய்ச்சல் ஏதாவது வந்தால் அப்போது சாராயம் குடித்திருக்கிறேன். அப்போதும் பயந்து பயந்துதான் குடிப்பேன். விலை அதிகம், கையில் காசு குறைவு ; ஆகையால் கொஞ்சமாகக் குடித்துவிட்டு வந்து மூலைவிட்டில் பேசாமல் படுத்துக்கொள்வேன். இப்போது தண்ணீரைப் போல் குடிக்கிறார்கள். உடம்பைக் கெடுத்துக்கொள்கிறார்கள். காய்ச்சத் தெரியாமல் கண்டதெல்லாம் போட்டுத் தப்பும்தவறுமாகக் காய்ச்சிய மட்டச்சரக்கு ஆகையால் குடல் வெந்து நோய்க்கு ஆளாகிச் சாகிறார்கள். இதை எல்லாம் பார்க்கும்போது, பழையபடி சாராயக்கடை கள்ளுக்கடைகளைத் திறந்து நடத்துவதே நல்லது என்று தெரிகிறது. தெரியாமலா வெள்ளைக்காரன் அப்படிச் செய்தான் ?'' என்றார் கிழவர்.

'' ஓ ஓ ! இவரும் செத்த நாய் கெட்டிநாய் என்று சொல்கிற ஆள்தான் '' என்று இனியன் என் காதில் முணுமுணுத்துவிட்டு, '' பெரியவரே ! போன வெள்ளைக்காரன் இனிமேல் திரும்பமாட்டான். நாம் என்ன தவம் பண்ணினாலும், இனிமேல் வெள்ளைக்காரனும் வந்து ஆள முடியாது ; கள் சாராயக் கடைகளைச் சர்க்கார் நடத்தவும் முடியாது. ஆகாததைப் பேசிப் பயன் என்ன ? இனிமேல் நடக்க வேண்டியதைப் பேசு '' என்றான்.

'' அப்புறம் ? உன் பிள்ளை இப்பொழுது எப்படி இருக்கிறான் ?'' என்று நான் கேட்டேன்.

'' அவனை திருந்தப் போகிறான் ? இப்போதுதான் சிறையில் இருந்துவிட்டு வெளியே வந்தான். என்னுடைய தலைவிதி ! எவ்வளவோ சொல்லிப் பார்த்

தேன். மறுபடியும் பழையபடி கூலிவேலை செய்தும் பயிர்த் தொழிலை நன்முகக் கவனித்தும் பிழைக்கலாம். அரைவயிற்றுக் கூழாக இருந்தாலும் யாருக்கும் பயம் இல்லாமல் அமைதியாகக் குடித்துவிட்டுச் சந்தோச மாய்ச் சாகலாம் என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்கவில்லை. வந்த மூன்றும் நாளே பழையபடி காய்ச்சத் தொடங்கிவிட்டான். வீட்டில் புட்டிகள் இருக்கின்றன. இரவில் மட்டும் அல்லாமல் பகலிலும் அவனுடைய வாய் நாறுகின்றது. இனிமேல் அந்த ஊரில் இருந்தால் அவன் சீர்ப்பட முடியாது. அதற்காகத்தான் பட்டணத்தில் கீழ்ப் பாக்கத்திற்குப் போய் என் மாமன்பிள்ளைகளைப் பார்த்துக் கேட்டுவந்தேன். அங்கே ஏதாவது வேலை பார்த்துப் பையனை அங்கே அழைத்துக்கொண்டு போய்ப் பிழைக்கச் சொல்லலாம் என்று போய்ப் பார்த்தேன். அங்கே இப்போதுஎந்தக் கம்பெனியிலும் வேலை கிடைக்காது என்கிறார்கள். கூலிவேலையும் கிடைப்பது அரிது என்றும், வேலை இல்லாமல் பலபேர் திரிகிறார்கள் என்றும் மாமன்பிள்ளைகள் சொன்னார் கள். அவர்கள் சொன்னது மெய்தான். நானும் நேரில் பார்த்தேன் ; பல பேர் தொழில் இல்லாமல், கூலிவேலை இல்லாமல் திரிகிறார்கள் " என்றார்.

இனியன் குறுக்கிட்டு, " பி. ஏ., எம். ஏ. படித் தவர்கள் எல்லாரும் வேலை இல்லாமல் சிற்றுண்டிச் செலவுக்கும் காசு இல்லாமல் அலைகிறார்கள். கிராமத் திலாவது, நினைத்தபோது ஒரு மரத்தடியில் போய் உட்கார்ந்து சாராயம் காய்ச்சி விற்றுப் பிழைக்கலாம். சர்க்கார் பிடித்தால் சிறைக்குப் போய்க் கவலை இல் லாமல் சாப்பிட்டுக்கொண் டிருக்கலாம். நகரத்தில் உள்ள பிள்ளைகளுக்கு இரண்டும் இல்லை. குற்றம்

செய்து பிழைக்கவும் இடம் இல்லை; சிறைக்குப் போய்ச் சாப்பிடவும் வழி இல்லை" என்றான்.

"என் பையனும் இப்போது ஊரெல்லாம் அப்படித்தான் சொல்லிக்கொண்டு திரிகின்றானும். போலீஸ் பிடிக்கிறவரையிலும் சாராயம் காய்ச்சும் தொழில் செய்து பிழைப்பது என்றும், பிடித்துக் கொண்டு போனபிறகு சிறையில் மணி தவறாமல் காய் கறிக் குழம்பும் சோறுமாக நல்ல சாப்பாடு சாப்பிடுவது என்றும் ஊரெல்லாம் சொல்கிறானும். சிறைக்குப் போன பிறகு அவனுடைய குணமும் அறிவும் அடியோடு மாறிவிட்டன. இப்படி மாறிவிடுவான் என்று நான் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. அவன் கொஞ்சமும் மான அவமானத்தைப் பொருட்படுத்த வில்லை. நல்லவர்களிடம் பெரியவர்களிடம் மதிப்பு இல்லை. காசு சாராயம் இவைகளையே துணையாக நம்பிவிட்டான். எனக்கு இவ்வளவு வயது ஆன பிறகும் யாராவது என்னவாவது சொல்வது என்றால், உயிர் போவதாக இருக்கிறது" என்றார்.

"ஊரில் ஒருவர் இருவர் குற்றவாளிகளாக இருந்தால்தான் மானம் அவமானம் என்ற கவலை இருக்கும். குற்றவாளிகளே முக்கால்பங்கு ஆகி விட்டால் அப்புறம் ஒன்றும் அவமானத்தைப் பற்றிய கவலை இருக்காது" என்றான் இனியன்.

எங்கள் ஊரில் அப்படித்தான் ஆகிவிட்டது. போலீசில் அகப்பட்டுச் சிறைக்குப் போவது என்றால், வெளியூர்க்கு வேலைக்குப் போவது போல் கவலை இல்லாமல் போய்வருகிறார்கள். சில பிள்ளைகள் நாலைந்து முறை போயிருக்கிறார்கள். வீட்டுச் சாப்பாட்டை விடச் சிறையில் உள்ள சாப்பாடு மேல் என்கிறார்கள். சிறையில் உள்ளது போல் நாள்தோறும் பருப்புக் குழம்பும் மணி தவறாத சாப்பாடும் எந்த வீட்டில்

உண்டு என்று என்னையே கேட்கிறார்கள்" என்றார் முதியவர்.

மறுபடியும் இனியனே பேசலானான். "குளத்தில் இறங்கித் தண்ணீரில் குளிப்பதானால், முதல் முறை குளிக்கும்போதுதான் குளிராகத் தெரியும்; தயக்கம் ஏற்படும். ஒரு முழுக்குப் போட்ட பிறகு குளிர் விட்டுவிடும். சிறைவாழ்க்கையும் அப்படித்தான். மானம் என்பது முதல் முறைதான்" என்றான்.

முதியவரின் முகத்தில் ஆத்திரம் கண்டேன். "யாருக்கு அப்படி? மானம் கெட்டவர்களுக்குத்தான். மானம் உடையவர்களுக்குக் குற்றம் எப்போதும் குற்றம்தான். நானும் ஒரு முறை சிறைக்குப் போய் வந்தேன். அதனால் மானம் கெட்டவனாக மாறி விட்டேனா?" என்றார்.

இதைக் கேட்டதும் எனக்குத் திடுக்கிட்டாற் போல் இருந்தது. "நீயுமா சிறைக்குப் போய் வந்தாய்?" என்று கேட்டேன்.

அதைச் சொல்லவில்லையா உங்களுக்கு? முதல் முறை மதுவிலக்கு அதிகாரிகளும் போலீஸ்காரரும் வீட்டுக்குள் நுழைந்தபோது பையன் திரு திரு என்று விழித்து வாய்குழறினான். உள்ளதைச் சொல்லிவிட்டு அகப்பட்டுக் கொண்டான். அப்போது கழனியில் கவலை கட்டி இறைத்துக்கொண் டிருந்தேன். யாரோ வந்து சொல்லவே, வீட்டிற்கு ஓடோடிவந்தேன். மணியகாரரைப் பார்த்து முறையிட்டு அழுதேன். ஒன்றும் பேசக்கூடாது, சிறைக்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்றார் மணியகாரர். 'அய்யோ! அப்படியானால் என் மகனை விட்டுவிடும்படியாக ஏற்பாடு செய்யுங்கள். நான் அதற்குப் பதிலாகப் போய் வருகிறேன்' என்று காலில் விழுந்து கேட்டுக் கொண்டேன். 'இது என்ன தோரா? திருவிழாவா?

உன் மகனுக்குப் பதில் உன்னை அனுப்புவது எப்படி?" என்றார். மறுபடியும் முறையிட்டுக் கேட்டுக்கொண் டேன். ஏதாவது கொடுப்பதாகக் சொன்னேன். கையில் ஐந்து ரூபாய் இருந்ததென்று மகன் கொடுத் தான். அதை மணியகாரர் வாங்கி அதிகாரிகளுக்குக் கொடுப்பதாகச் சொன்னார். தமக்கு ஏதாவது கொடுக் கும்படி கேட்டார். வீட்டில் ஆறு மரக்கால் நெல் இருந்தது. அதைக் கொடுத்துவிடுவதாகச் சொன் னேன். அதன்பிறகு அதிகாரிகள் மகனை விட்டுவிட்டு என்னைப் பிடித்துக்கொண்டு போனார்கள். கோர்ட் டில் வழக்கு நடந்தபோது, நானே சாராயம் காய்ச்சி விற்றதாகவும், குடிக்கிற வழக்கம் உண்டு என்றும் ஒத்துக்கொண்டேன். தடை சொல்லாமல் ஒத்துக் கொண்டால் தண்டனை குறையும் என்று போலீஸ் காரர் கற்றுக்கொடுத்தார்கள். அதனால் மானத்தை விட்டுப் பொய் சொல்லிக் குற்றத்தை ஒத்துக்கொண் டேன். பெற்று வளர்த்த மனம் கேட்கவில்லை. அதற் காக இப்படி இந்த வயதில் ஒத்துக்கொண்டு சிறைக் குப் போகவேண்டியதாயிற்று. என் தலைவிதி! போய் வந்தேன்" என்றார்.

"உன் மகன் சிறைக்குப் போனதாகச் சொன் னையே" என்றேன்.

"நான் போன பிறகும் அவன் அந்தத் தொழிலைக் கைவிடவில்லை. பயம் தெளிந்துவிட்டது. பழைய படியே காசு தேவை ஆயிற்று. உடனே சாராயம் காய்ச்சத் தலைப்பட்டான். காய்ச்சும் இடத்திற்கே போய் அதிகாரிகள் கைப் பிடியாய்ப் பிடித்துவிட்டார் களாம். நான் சிறையில் இருந்தபோதே அவனும் அங்கே வந்து சேர்ந்தான். ஊர் சிரிக்கிற கதையாய் முடிந்தது" என்றார்.

இனியன் குறுக்கிட்டு, "ஊரெல்லாம் இதே வழக்கமாக இருக்கும்போது ஊர் என் சிரிக்கிறது?" என்றான்.

"இருந்தாலும், இப்படிக் குடும்பத்தோடு குற்ற வாளியாகிச் சிறைக்குப் போனது எனக்கு அவமான மாக இருக்கிறது" என்று வருத்தத்துடன் கூறினர் மூதியவர்.

வண்டி மெல்ல நின்று கூவியது. எதிரே பெரிய நீர்ப்பரப்பு கண்ணுக்குத் தெரிந்தது. நிறமுள்ள பூக்கள் பூத்து அந்தக் குளம் அழகாக விளங்கியது. செங்கல்பட்டுக்கு வந்துவிட்டோம் என்பதை உணர்ந்து கொண்டேன். பெட்டியிலிருந்த பலர் தங்கள் சாமான் களை எடுத்து வைக்கத் தலைப்பட்டார்கள்.

"ஒன்றுதான் என் மனம் பொறுக்கவில்லை" என்றார் மூதியவர்.

"என்ன?" என்றேன்.

"குற்றம் செய்த எல்லோரையும் பிடித்துக் கொண்டுபோய்த் தண்டித்தால் கவலை இல்லை. செல் வாக்கு உள்ளவர்களை ஒன்றும் செய்வதில்லை. அவர் களிடம் காசு வாங்கிக்கொண்டோ வாங்காமலோ விட்டுவிடுகிறார்கள். அதையும் கடந்து நிலைமை மீறி விட்டால், கோர்ட்டில் பணம் செலவு செய்து வக்கீல் வைத்துப் பேசினால் விட்டுவிடுகிறார்கள். அகப்பட்டுக் கொண்டு துன்பப்படுகிறவர்கள் எல்லாரும் ஏழைகள்; வயிற்றுக் கஞ்சிக்குப் போதாமல் வாடுகிற ஏழைகள். அதிகாரிகள் எங்களைத்தான் மிரட்டுகிறார்கள்; அடிக் கிறார்கள்; உதைக்கிறார்கள்" என்றார்.

இனியனுக்குப் பக்கத்தில் இருந்தவர் – கண்ணை மூடித் தூங்குகிறவர்போல் இருந்தவர் – இப்போது திடீரென்று கண் திறந்து, "உங்கள் ஊரில் அந்தக் கவலை. அதுவே மேல் என்று தோன்றுகிறது. எப்

படியோ போலீஸ்காரர் வந்து பயப்படுத்துகிறார்களே, அது நல்லதுதான். எங்கள் ஊரில் நாலைந்துபேர் காய்ச்சுகிறார்கள். கேள்வி முறையே இல்லை. அதிகாரிகளும் மற்றவர்களும் வருவதே இல்லை. தப்பித் தவறி வந்தால், அவர்களும் இவர்களோடு கூடிக் குடித்துவிட்டுப் போகிறார்கள் என்று ஊரார் பேசிக் கொள்கிறார்கள். உண்மை என்னவோ தெரியாது" என்றார்.

"ஊரில் யாராவது செல்வாக்கானவர்கள் இருப்பார்கள். அவர்களுக்காக அதிகாரிகள் விட்டுக் கொடுப்பதாக இருக்கலாம்" என்றேன்.

"இருந்தாலும் அது தப்பு; அடி உதை கொடுத்தாவது ஊரைப் பயப்படுத்தி வைத்திருக்கவேண்டும்" என்றார் அவர்.

"அப்படிச் செய்தும், என்ன பயப்படுத்தியும், சிறையில் தள்ளியும் எந்த ஊரும் சீர்ப்பட வில்லையே" என்றான் இனியன்.

மறுபடியும் பெருமூச்சு விட்டபடியே கிழவர் பேசத் தொடங்கினர். நின்ற வண்டியும் செங்கல் பட்டு நிலையத்திற்கு நகரத் தொடங்கியது. "அடிக்கட்டும், உதைக்கட்டும், அபராதம் போடட்டும், சிறையில் தள்ளட்டும். எல்லாம் ஆண்களோடு வைத்துக்கொள்ளட்டும். ஆனால் பெண்களைத் தண்டிக்கக் கூடாது. நடு இராத்திரியில் வீட்டுக்குள் புகுந்து பயப்படுத்தக் கூடாது. கையைக் பிடித்து இழுக்கக் கூடாது. இவர்கள் எல்லாரும் பெண் வயிற்றில் பிறந்தவர்கள்தானே? அக்கா தங்கை இல்லையா? அவர்களும் பெண்கள்தானே? இவர்கள் பெண்களுடன் பிறந்தவர்கள்தானே? பெண்களிடத்தில் கொடுமை செய்யலாமா? ஓர் ஏழை வீட்டில் ஆண் இல்லாத வேளையில் நுழைந்து அவளைப் பயப்படுத்தி

மிரட்டினர்கள். அவள் உண்மையைச் சொல்லவில்லை என்று ஒருவன் தன் கையில் இருந்த தடியினால் மார்பைப் பார்த்து இடித்தான். இன்னும் வாயால் சொல்ல முடியாத கொடுமைகள் எல்லாம் செய்ததாக ஊரார் சொன்னார்கள். இந்தப் பெண்களில் எவளாவது மானம் கெட்டு அவர்களுடைய இச்சைக்கு ஒத்துக்கொண்டால், அவளை ஒன்றும் செய்யாமல் விட்டுவிடுகிறார்கள். ஊர்க்கு வரும்போது போகும் போதெல்லாம், அவளுடைய வீடு தங்குமிடமாகி விடுகிறது. அவள் யாருக்கும் அஞ்சாமல் சாராயம் விற்கப் புறப்பட்டுவிடுகிறாள். காசும் நிறையச் சேர்கிறது. சிறைக்குள் நுழையாமலே, அபராதம் கட்டாமலே, அஞ்சாமல் விற்கிறாள். அவளைப் பார்த்து மற்றப் பெண்களில் ஒருவர் இருவர் இப்படி மானத்தை விட்டுக் காசு சேர்க்கக் கற்றுக்கொள்கிறார்கள். கடைசியில் மானம் கெட்டவர் ஊருக்குப் பெரியவர் என்று முடிகிறது. போச்சு, போச்சு, கிராமங்களே அழிந்துபோச்சு" என்று மனம் நொந்து கூறினர்.

பெட்டியில் இறங்குவதும் ஏறுவதுமாக ஆரவாரம் நிறைந்திருந்தது. அந்த வழுக்கைத் தலையார் எப்படியோ இடம் பிடித்து ஒரு மூலையில் உட்கார்ந்து குறட்டை விட்டுக்கொண்டிருந்தார். ஒரு பெரிய நிலையத்தில் வண்டி நின்ற பிறகும் இவ்வளவு ஆரவாரத்திற்கிடையிலும் அவருடைய குறட்டைத் தூக்கம் கலையவில்லையே என்று வியப்படைந்தேன். அதை இனியனுக்குச் சுட்டிக் காட்டினேன். "கவலையற்ற வாழ்க்கை, கவலையற்ற உறக்கம்" என்றான் அவன். அவன் சொல்லி முடிப்பதற்குள் அவர் திடீரென்று எழுந்து கண்ணைத் துடைத்துக்கொண்டு இங்கும் அங்கும் பார்த்தார். பக்கத்தில் இருந்த

வர்களை என்னவோ கேட்டார். எழுந்து வந்து வாயிலில் நின்று வருவார் போவாரைப் பார்த்துக் கொண்டிருந்தார். சோடா விற்பவனைக் கூப்பிட்டு, "ஸ்பென்ஸர் உண்டா?" என்றார். "கையில் இல்லை; வேண்டுமானால் போய்க் கொண்டுவருவேன்" என்று அவன் ஓடினான்.

பக்கத்தில் இருந்த கிழவர், வடை விற்பவனைக் கூப்பிட்டு, இடுப்பு முடிச்சை அவிழ்த்து இரண்டணா கொடுத்து நான்கு வடை வாங்கினார். அவற்றில் இரண்டை எடுத்துக்கொண்டு, மற்ற இரண்டை அதே இலையில் சுருட்டி மடியில் வைத்துக் கொண்டார்.

"அந்த இரண்டு யாருக்கு?" என்றேன்.

"வெட்கக் கேடு! பாசம் விடவில்லைங்க. பையனுக்குத்தான்" என்றார்.

"பேரன் பேர்த்திக்கோ என்று பார்த்தேன்."

"பேரன் இல்லை. பேர்த்தி—குழந்தை—இருக்கிறது. அதுவும் வீட்டில் இல்லை. நானும் பையனும் சிறைக்குப் போனபோது வீட்டைவிட்டுப் போன மருமகள் அப்புறம் வரவே இல்லை."

"எங்கே? தாய்வீட்டுக்கா?"

"தாய்வீட்டிலும் இல்லையாம். அதை என் சொல்வது? நான் வந்த வழி! நல்ல பெண் என்று பார்த்துக் கட்டினேன். அவளும் குடும்பத்துப் பேரைக் கெடுத்துவிட்டாள். எல்லாம் சாராயத்தால் வந்த புத்திதான்."

"அவளும் குடிப்பாளா?"

"குடிப்பாளோ, என்னவோ, தெரியாது. என் பையனல் வந்த தீம்புதான். சாராயம் காய்ச்சுவதற்காக இவன் யார் யாருடனோ பழகினான்.

அவளும் அந்தப் போக்கிரிகளோடு பழகினாள். கெட்டொழிந்தாள்.''

இப்போதுதான் கிழவரின் உள்ளத்தில் இருந்த கவலையின் எல்லை தெரிந்தது. என் நெஞ்சு வருந்தியது; கள்ளம் கரவு அற்ற கிராம மக்களின் வாழ்க்கை – உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யும் ஏழை மக்களின் வாழ்க்கை - இப்படி ஆக வேண்டுமா என்று நொந்தேன்.

அதற்குள் இனியன் சொல்லி அனுப்பி, மூன்று குவளைக் காப்பி வந்தது. அவனே அவற்றில் இரண்டை எடுத்து ஒன்றை அந்த முதியவரின் கையிலும் மற்றொன்றை என் கையிலும் கொடுத்தான்.

'' வேண்டா'ங்க. நீங்கள் சாப்பிடுங்கள் '' என்று கிழவர் மறுத்தார்.

'' சும்மா சாப்பிடு '' என்றேன்.

'' இதற்கெல்லாம் காலணு செலவு செய்யாமல் கூழும் கந்தையுமாக வாழ்ந்த காலத்தில் மானத்தோடு மதிப்போடு வாழ்ந்தோம். காப்பி இட்டளி என்று ஆசை வந்த பிறகுதான் பையன் கெட்டுவிட்டான். எனக்கு எந்தக் காலத்திலும் இந்தப் பழக்கமே இல்லை. எதையாவது வயிற்றில் போட்டுவிட்டு, பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டுக் கம்மென்று இருப்பேன். நன்றாக விளைந்து கையில் காசு இருந்த காலத்திலும் காப்பி வாங்கமாட்டேன். இப்படி இரண்டணா ஓரணா கொடுத்து இவ்வளவு கொஞ்சமாக வெல்லத் தண்ணீரை என் வாங்க வேண்டும் என்று வெறுந் தண்ணீரைத் தேடி இரண்டு கை குடிப்பேன். நாகரிகம் முற்றிப்போச்சு. எங்கள் ஊரில் இப்போது எந்தப் பையனும் காப்பி, டீ குடிக்காமல் இருப்பதில்லை. ஆனாலும் சுகம் இல்லை. ஆசையும் வளர்ந்து விட்டது. துன்பமும் வளர்ந்துவிட்டது '' என்று

சொல்லிக்கொண்டே குடிக்கத் தொடங்கினர். "அப்பாடா" என்று சூடு பொறுக்க முடியாமல் நிறுத்தினர். காப்பியை ஆற்றிக் குடித்துப் பழக்கம் இல்லாத எளிய வாழ்க்கை வாழ்ந்தவர் என்று என் மனம் இரங்கியது.

இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்தபோது வழுக்கைத் தலையார் ஒரு போலீஸ்காரரோடு சிரித்து விளையாடிப் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டேன். இருவரும் நண்பர்கள் போல் பேசியதைக் கண்டு, உறவினராக இருக்கலாம், அல்லது ஒரே ஊராராக இருக்கலாம் என எண்ணினேன்.

பக்கத்துக் கிழவர் சன்னலை விட்டுக் கொஞ்சம் நகர்ந்து உடம்பு ஒடுங்கி உட்கார்ந்தார். "ஏன் இப்படி?" என்றேன்.

"அந்தப் போலீஸ்காரர்களின் கண்ணில் படாமல் இருப்பதே நல்லது. ஒருகுற்றமும் செய்யாவிட்டாலும் அவர்களுடைய முகத்தில் விழித்தால் தீம்பு வந்து சேரும்" என்று மெல்லச் சொன்னார்.

"அவர்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள். உண்மைக்குப் பாடுபட்டு ஏழைகள்மேல் இரக்கம் உள்ளவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்" என்றேன்.

"இருக்கலாம். ஆனால் இப்போது எதையும் சொல்வதற்கில்லை. என் காலத்தைத் தள்ளிவிட்டேன். எமன் வருகிற வரைக்கும் இன்னும் சில வருசம் எப்படிக் காலம் தள்ளுவது என்று தெரியவில்லை. ஒரு தொல்லையும் இல்லாமல், நிலத்தை விற்றுவிட்டுப் பட்டணம் போய்விடலாம் என்று பார்த்தால், அதற்கும் தெய்வத்துக்கு மனம் இல்லை. பட்டணத்திலேயே பலபேருக்கு வேலை இல்லையாம். நான் மட்டும் தனியே போய் மாமன்பிள்ளைகளோடு இருந்துவிட

லாம். அங்கேயே இருந்து அவர்களின் வீட்டில் செத்து விடலாம் என்று பார்த்தால், ஊர் என்ன சொல்லும்? பெற்ற ஒரு பையனை வளர்த்தெடுத்து இப்படி விட்டு விட்டுப் போய்விட்டான் என்று பழிக்கும். அவனுடைய பொண்டாட்டியும் விட்டுவிட்டுப் போய்விட்டாள். நானும் போய்விட்டால் எப்படி என்று மனம் துன்பப்படுகிறது. இரவும் பகலும் இதே கவலையாய்ப் போச்சு" என்றார்.

வண்டி நகர்ந்து வந்த திசையே திரும்பிச் சென்றது. என் மனம் அந்தக் கிழவர் சொன்னவற்றையே திரும்பி எண்ணியது. இனியன் எதையோ உற்றுப் பார்த்தபடி இருந்தான். நல்ல குடும்பம் – தாயற்ற பிள்ளை - தந்தையின் அன்பான வளர்ப்பு - உழைத்துக் களைத்து குடித்தல் - நல்ல மருமகள் - அமைதியான வாழ்க்கை - கிராமத்துச் சூழ்நிலை - கள்ளச் சாராயம் காய்ச்சுதல் - காசு சேர்த்தல் - வாய்க்குச் சுவையான சிற்றுண்டியும் சினிமா முதலிய பொழுதுபோக்கும் - படிப்படியே வாழ்க்கை கெடுதல் - தந்தையிடம் அன்பு குறைதல் - கணவனிடம் மனைவிக்கு அன்பு குறைதல் - சிறை - சீர்கேடு - என்று இப்படியே பலவற்றையும் எண்ணிப் பார்த்து வருந்தினேன்.

வண்டி மேற்கு நோக்கித் திரும்பிச் சென்றது. பெட்டியில் கூட்டம் மிகுதியாக இல்லாமையால் எல்லோரும் உட்கார்ந்திருந்தார்கள். ஒருவர்க்கும் நிற்க வேண்டிய தொல்லை இல்லை. எதிரே புதிதாக வந்து உட்கார்ந்தவர்களின் முகத்தில் ஏதோ குழப்பம் இருந்தது. இனியன் அவர்களை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவர்களிடையில் இருந்த ஒருத்தியின் முகத்தில் கவலையும் சோர்வும் மிகுதியாக இருந்தன. அவள் திடீரென்று பக்கத்தில் இருந்தவரைப் பார்த்து, "நான் அன்றைக்கே சொன்னேன். 'கையில்

இருந்ததைக் கொடுத்துவிடு, மன்னித்து விட்டுவிடுவார்' என்று எவ்வளவோ சொன்னேன். பணத்துக்குப் பணமும் போச்சு. பையனும் அகப்பட்டுத் துன்பப் படுகிறானே" என்று உள்ளம் நொந்து கூறினாள்.

"எல்லாம் நம் கெட்ட வேளை. என்ன செய்ய லாம்? இப்படி வரும் என்று தெரியுமா?" என்றார் பக்கத்தில் இருந்தவர்.

"ஏதாவது சொன்னால், பெண்புத்தி நீ எனக்குச் சொல்ல வந்துவிட்டாயா என்று என் வாயை அடக்கி விடுகிறாய். கடவுள் இப்படி நம்மை ஆட்டிவைக் கிறார்" என்றாள் அந்த அம்மா.

இருவர்க்கும் வயது முப்பத்தைந்தும் நாற்பதுமாக இருக்கலாம். ஏழைகள் என்பது தோற்றத்திலேயே தெரிந்தது. அந்த ஆள் சிறிது அழுக்கான ஆடை களையே உடுத்திருந்தார். அவள் உடுத்திருந்த சிகப்புப் புடைவை அவருடைய ஆடைகளைவிட நன்றாகவே இருந்தது. ஆயினும் காதிலோ கழுத்திலோ நகை ஒன்றும் இல்லை. மூக்கில்மட்டும் மூக்குத்தி ஒன்று இருந்தது. அதிலிருந்த வெள்ளைக்கல் அழுக்குப் படிந்து ஒளியிழந்திருந்தது.

இனியனுக்கு அவர்களிடம் எப்படியோ இரக்கம் பிறந்துள்ளது என்பதைத் தெரிந்துகொண்டேன். அவன் நேராக உட்கார்ந்து, அந்த ஆளைப் பார்த்து, "பையன் ஏதாவது தொல்லையில் அகப்பட்டுக்கொண் டானா?" என்றான்.

"ஆமாம் அய்யா! பெரிய பையன், பத்தாவது வரையில் படிக்கவைத்தோம். வேலை கிடைக்கவில்லை. ஊரிலே சுற்றிக்கொண்டிருந்தான். தென்னந்தோப் புக்கு அடிக்கடி போய்வருகிற பழக்கம்."

இவ்வாறு அந்த ஆள் சொல்லி முடிப்பதற்குள், என் பக்கத்துக் கிழவர் குறுக்கிட்டு, "அங்கே பதநீர்

இறக்குவதற்கு லஞ்சென்ஸ் வாங்கியிருக்கிறார்களா ?'' என்று பரபரப்போடு கேட்டார்.

எனக்கு வியப்பாக இருந்தது.

'' ஆமாம். உங்களுக்கு எப்படி இது தெரியும் ?'' என்றார் அந்த ஆள்.

'' எனக்குத் தெரியும். பதநீர் லஞ்சென்ஸ் வாங்கி உண்மையாக உழைத்துப் பிழைக்கலாம் என்று பாடு படுகிறார்கள். அதிகாரிகள் அடிக்கடி வந்து கள் இறக்குகிறார்கள் என்று குற்றம் சொல்லிப் பிடித்துக் கொண்டு போகிறார்கள். மாதந் தோறும் அவர்களுக்கு மாமூல் கட்டிவிட்டால் விட்டுவிடுகிறார்கள். இல்லையானால், உடனே ஏதாவது ஒரு காரணம் சொல்லி, பதநீரையே புளிக்கவைத்தோ எப்படியோ கள் என்று சொல்லிச் சிறையில் தள்ளுகிறார்கள் '' என்றார் கிழவர்.

'' பெரியவர் இவ்வளவு தெரிந்துவைத்துக்கொண்டிருக்கிறீரே '' என்றான் இனியன்.

'' சும்மா சொல்கிறார். கள் இறக்காமலிருந்தால் போலீஸ்காரர் பிடிக்க மாட்டார்கள் '' என்றேன்.

'' எல்லாம் சிறைக்குப் போய்த் துன்பப்பட்டவர்கள் சொன்னதுதான் '' என்றார் கிழவர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அந்தத் தாய், '' எங்கள் பையன் அந்த வேலைக்கே போகமாட்டான். சத்தியமாய்ச் சொல்கிறேன். அங்கே லஞ்சென்ஸ் வாங்கியவரின் பிள்ளையோடு சேர்ந்து தோப்பில் பொழுதுபோக்காய் இருந்துவிட்டு வருவான். வேறே ஒரு குற்றமும் அறியான் '' என்றாள்.

'' கோர்ட்டில் விசாரணை நடந்திருக்குமே. அங்கே இப்படிச் சொல்வதுதானே '' என்றான் இனியன்.

'' நாங்கள் இரண்டுபேரும் அழுது முறையிட்டுச் சொன்னோமே. எல்லாவற்றையும் அந்த மாஜிஸ்ட்ரேட்

கேட்டுவிட்டுப் போலீசார் சொல்வது உண்மை என்று எடுத்துக்கொண்டார்" என்றாள்.

உடனே அவளுடைய கணவன், "கோர்ட்டு எறிய பிறகு நாம் என்ன சொன்னாலும் நம்பகம் ஆகாது என்று தெரியும். அதற்காக ஏற்படும் அபராதத்தைக் கட்டிவிட்டுப் பையனை மீட்டு வரலாம் என்று இருந்த கம்மலைக் கொண்டுபோய்க் கடையில் விற்றுவிட்டு, ஐம்பது ரூபாய் எடுத்துக்கொண்டு போய்க் கோர்ட்டில் தயாராக நின்றோம். அந்தப் புண்ணியவான் அபராதம் ஐம்பது ரூபாய் என்று சொல்லியிருந்தால் அன்றைக்கே பையனை அழைத்துக்கொண்டு வந்திருப்போம். ஆனால் எழுபத்தைந்து ரூபாய் அபராதம் அல்லது ஒரு மாதம் கடுங்காவல் என்று சொல்லிவிட்டார். அப்படியும் கையில் இருந்த ஐம்பதைக் கட்டிவிடுவது என்று கொடுப்பதற்கு எடுத்தேன். கோர்ட்டில் இருந்த ஆள் ஒருவன் என்னைச் சைகை காட்டித் தனியே அழைத்துக்கொண்டு போய், 'இந்த வழக்குக்குப் போதுமான ஆதாரம் இல்லை. போலீஸ் சாட்சி பலமாக இல்லை. அதனால் ஒரு மனு எழுதிப் போட்டால் மறு விசாரணைக்கு வரும். தள்ளி விடுவார்கள்' என்றான். அவன் சொன்னது உண்மை என்று நம்பிவிட்டேன். 'மனு எழுதுவது எப்படி சாமி? நீங்களே ஏற்பாடு செய்யணும்' என்று கேட்டுக்கொண்டேன். ஸ்டாம்புக்குப் பத்து ரூபாயும் எழுத்துக்கூலி இரண்டு ரூபாயும் வேண்டும் என்று கேட்டுப் பன்னிரண்டு ரூபாய் வாங்கிக்கொண்டு, தானே உட்கார்ந்து எழுதிக் கொடுத்தான். உத்தரவு பிறகு வரும் என்று எங்களை அன்று அனுப்பிவிட்டார்கள். இவள் மட்டும் மனு வேண்டாம் வேண்டாம் என்று பலமுறை எனக்குச் சொன்னாள். நாம் என்ன செய்வது? படித்

தவர்கள் சொல்கிறார்களே என்று நம்பிவிட்டேன். அடுத்த வாரம் உத்தரவும் வந்தது. கோர்ட்டுக்குப் போனேம். அங்கே இருந்தவர்கள், வக்கீல் வைத்துப் பேசினால்தான் விடுதலை ஆகும் என்று சொன்னார்கள். வக்கீலிடம் போனேம். விடுதலை வாங்கித் தந்தால் எழுபத்தைந்து ரூபாய் தர வேண்டும் என்று அவர் கேட்டார். அய்யோ, இந்தப் பணத்தை அன்றைக்குக் கோர்ட்டிலேயே கட்டிவிட்டிருக்கலாமே என்று எண்ணி வருத்தப்பட்டேன். வேறு வழியில்லை என்று சொல்லி வக்கீலிடம் ஒத்துக்கொண்டேன். அந்த வக்கீல் என் கையில் இருந்த மூப்பத்தைந்து ரூபாயும் அப்போதே வாங்கிக்கொண்டு மீதி நாற்பது ரூபாயும் அடுத்த வாரத்தில் தரும்படி சொன்னார். இன்றைக்குத்தான் வழக்கு விசாரணைக்கு வந்தது. வக்கீல் வாயைத் திறந்து பேசவே இல்லை. அடுத்த வாரத்திற்கு ஒத்திவைத்துவிட்டார்களாம். பையன் சிறைக்குப்போய் மூன்றுவாரம் ஆகிவிட்டன. வக்கீலே வைக்காமல் இருந்திருந்தாலும் இன்னும் பத்து நாளில் விட்டுவிடுவார்கள். அதனால்தான், பணத்துக்குப் பணமும் போச்சே, பையனும் வரவில்லையே என்று இவள் கவலைப்படுகிறாள்" என்றார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த கிழவர், "நாம்தான் ஏழையாச்சே. மனு என்? வக்கீல் என்? போலீஸ், கோர்ட் இவற்றின் வாயில் அகப்பட்டுக் கொண்டால், எமன்வாயில் அகப்பட்டதுபோல்தான். பையன் பத்தாவது படித்தவன் என்று சொல்கிறீர்கள். படித்த பையன் இப்படித் தோப்புப் பக்கமாகப் போகலாமா? படிக்காத போக்கிரிப் பயல்களுக்கு இந்த வேலை தகும்" என்றார்.

"என்னவோ அவன் தலைவிதி! ஆனால் சத்திய மாக, அவனுக்கு ஒரு பாவமும் தெரியாது. ஊர் எல்லாம் சொல்லும்" என்றாள் தாய்.

"அப்படியானால் ஊரார் சாட்சி சொல்வது தானே?" என்றேன்.

"யாராவது சொல்ல முன்வந்தால், அவர்களையும் பிடித்துக்கொண்டு போய்த் தள்ளுகிறார்கள். அதற் குத்தான் எல்லாரும் பயப்படுகிறார்கள்" என்றார் தந்தை.

எதிர் வரிசையில் மூலையில் இருந்த ஒருவர், "நடக்கட்டும், நடக்கட்டும் அய்யா. கள் சாராயத்தை ஒழித்துவிட்டோம் என்று மார் தட்டிப் பேசினர் களே. பார்த்தீர்களா? என்ன ஒழித்துவிட்டார்கள்? மானத்தையும் நியாயத்தையும் ஒழித்துவிட்டார்கள்" என்றார்.

உடனே அவர்க்கு நேர் எதிரில் இருந்த ஒருவர், "ஒரே அடியாக அப்படிச் சர்க்கார்மேல் குற்றம் சொல்லக் கூடாதுங்க. எதையும் இரண்டு பக்கமும் எண்ணிப் பார்த்து நடுநிலையாகப் பேச வேண்டும்" என்று சிறிது கடுமையான முகத்தோடு கூறினர்.

"அதோ பாருங்கள்! பதநீர் இறக்க லைசென்ஸ் கொடுத்துவிட்டுக் கிராம மக்களை வேட்டை ஆடு கிறார்கள்!" என்றார் மானத்தையும் நியாயத்தையும் பற்றிப் பேசியவர்.

"இருக்கலாம்! ஆனால் பதநீர் என்று சொல்லி எத்தனையோ இடங்களில் கள் இறக்கி வியாபாரம் செய்கிறார்கள், தெரியுமா? நானே பல ஊர்களில் கேள்விப்பட் டிருக்கிறேன்."

"அப்படி உண்மையான குற்றம் குறைவாக இருக்கலாம் அய்யா! அதிகாரிகளில் சில பேர் குடி காரர் இல்லையா? அவர்களே அப்படிச் செய்யும்படி

தூண்டிக் கற்றுக்கொடுக்கிறார்கள். பிறகு, தங்கள் புத்தகத்தில் அந்த மாதத்துக்குக் குற்றம் குறைந்து விட்டால், யாரையாவது ஏமாந்தவனைப் பார்த்துப் பிடித்துக் குற்றவாளி ஆக்கிச் சிறையில் தள்ளுகிறார்கள். எங்கள் ஊர் ரயில் நிலையத்தில் இரண்டு பக்கமும் வேலிக்கம்பி சரியாக இல்லை. மக்கள் இரண்டு பக்கமும் ஏறி இறங்கி ரயில் நிலையத்துக்குப் போவார்கள். போலீசார் சும்மாவே இருப்பார்கள். மாதக் கடைசியில் 28, 29 தேதி ஆனால், புத்தகத்தில் குறிப்பதற்காக யாராவது இரண்டு மூன்று பேரைப் பிடித்து ரயில்வழியைக் குறுக்கே கடந்து சட்டம் மீறியதாகக் குற்றம் சாட்டி அபராதம் வாங்கிவைக்கிறார்கள். நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். நானும் அனுபவப் பட்டுத்தான் சொல்கிறேன், தெரியுமா ?'' என்றார்.

இப்படியே இருவரும் மாறி மாறிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இனியன் பையனுடைய தந்தையைப் பார்த்து, '' அடுத்த வாரத்தில் வக்கீலுக்கு இன்னும் நாற்பது ரூபாய் தர வேண்டுமா ?'' என்று கேட்டான்.

'' ஆமாம்; ரூபாய் பிறக்கவில்லை. இருந்த நகையை விற்று ஆச்சு. தாலிதான் இருக்கிறது. கடன் கேட்டால் கிராமத்தில் கொடுப்பார் இல்லை. இந்தக் கடன்சட்டம் வந்த பிறகு பாண்டு எழுதிக்கொடுத்துக் கடன் வாங்கவே வழி இல்லை. யாரைக் கேட்டாலும் நிலத்தை விக்கிரயம் எழுதிக் கொடுத்துப் பத்திரத்தைப் பதிவு செய்தால் கடன் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். கடன் திருப்பிக் கொடுத்த பிறகு நிலத்தைத் திரும்பிக் கொடுப்பார்களாம். எப்படி நம்புவது ?, படித்தவர்களை நம்பினாலே இந்தப் பாடாக இருக்கிறது !'' என்றார்.

அப்போது எதிர்வரிசை மூலையில் நடந்துகொண்டிருந்த பேச்சு வலுத்துவிட்டது. "கள்ளச் சாராயத்துக்குப் போலீசார் பலபேர் உடந்தை. எனக்கு நன்முகத் தெரியும். சின்ன கான்ஸ்டேபில் முதல் பெரிய மாஜிஸ்ட்ரேட் வரையில் மாதந்தோறும் இவ்வளவு பணம் மாமூல் என்று போய்ச் சேர்கிறது" என்முர் ஒருவர்.

"பொய் பொய். சுத்தப் பொய். நம்மவர்கள் என்ன வேண்டுமானலும் புளுகுவார்கள். இல்லாத குற்றத்தை எல்லாம் சுமத்துவார்கள். அதிலும் அரசாங்கத்தின் மேல் அதிகாரிகளின்மேல் வேண்டுமென்றே பழிசுமத்திக் குறை கூறுவதில் நம்மவர்கள் புலிகள்" என்முர் மற்றவர்.

அதற்குப் பக்கத்து வரிசையில் இருந்த ஒருவர் எழுந்து போய், "அய்யா! அவர் சொல்வது எல்லாம் முழுதும் உண்மை! கொஞ்சமும் பொய் அல்ல. நான் அடிக்கடி கிராமத்துக்குப் போகிறவன். கண்ணுரப் பார்த்திருக்கிறேன். காதாரக் கேட்டிருக்கிறேன். கள் சாராயக் கடைகளை மூடிய அன்றைக்கே கிராமங்களைச் சனியன் பிடித்துவிட்டது. மானம் மதிப்புப் போச்சு. நியாயம் நேர்மை போச்சு. ஒருவரை ஒருவர் மதிப்பதில்லை. இனிமேல் எவ்வளவு கொலைகள் நடக்கப் போகின்றனவோ, என்னென்னவோ! போகப் போகப் பாருங்கள்" என்முர்.

"இப்போதே ஒவ்வொரு கிராமத்திலும் அடிதடி குத்து கொலை எல்லாம் நடந்தபடியே இருக்கின்றன. அதிகாரிகளுக்கு இரண்டு வகையிலும் கொண்டாட்டம். கள்ளச் சாராயத்தாலும் வரும்படி. குத்து கொலை வழக்குகளாலும் வரும்படி. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்" என்முர் முன்னவர்.

இவ்வாறு பேச்சு நடந்துகொண் டிருந்தபோது, வண்டி ரெட்டிப்பாளையம் நிலையத்தில் நின்றது. போலீஸ் உடை அணிந்த இருவர் எங்கள் பெட்டியில் ஏறினர்கள். அவர்களின் சிவப்புத் தலைகளைக் கண்டதும், மதுவிலக்குப் பேச்சு ஒரே அமைதி ஆயிற்று. சர்க்காரை ஆதரித்தவர் மட்டும் தொடர்ந்து பேசுவார் என்று எதிர்பார்த்தேன். அவரும் வாய்மூடி மவுனியாக இருந்தார்.

வண்டியின் மற்றொரு மூலையில் மட்டும் ஏதோ பேச்சு நடந்துகொண்டிருந்தது. வெளியே நிலவு அழகாக ஒளிவீசிக்கொண் டிருந்தது. வண்டியில் அமைதியாகப் போய்க்கொண்டிருந்த பயணம், நிலவிலே மெல்ல நீந்துவது போல இருந்தது. இந்த மண்ணுலகத்துத் துன்பங்களும் தொல்லைகளும் நினைவில் இல்லாமல் மறைந்திருந்தால், பறப்பது போன்ற அனுபவமே பெற்றிருக்கலாம். அது முடிய வில்லை. என் மனம் எதை எதையோ எண்ணிக் கொண்டிருந்தது. மூளையே ஒரு ரயில்வண்டி போல வும், அதில் பயணம் செய்யும் எண்ணங்கள் நெருக் குண்டு கிடப்பது போலவும் ஒரு கற்பனை தோன்றியது. அந்தப் பெரியவர் விட்ட பெருமூச்சால் என் கற்பனை கலைந்தது. அவருடைய கண்கள் போலீசார் இரு வரையும் பார்த்த நிலையிலேயே பதிந்து நின்றன.

ஏதோ ஒரு நிலையம் வருவது போல் தெரிந்தது. வண்டி மெல்லச் சென்று நின்றது. நிலையத்தின் பெயரைத் தெரிந்துகொள்ள எட்டிப் பார்த்தேன். இந்தி எழுத்துக்களுக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கும் கீழே 'பாலூர்' என்ற தமிழ் எழுத்துக்கள் தெரிந்தன. இங்கும் அங்கும் அந்தப் பலகையில் தார் ஒழுகியதும் தெரிந்தது; அதை மறைப்பதற்காகப் பூசப்பட்ட வர்ணமும் தெரிந்தது. அந்தப் பக்கமாக வழுக்கைத்

தலை ஒன்று தெரிந்தது. அவர்தானு என்று பார்த்தேன். அவருடைய முகத்தைப் பரர்த்த பிறகு ஐயம் தீர்ந்தது. அவருடன் பேசிக்கொண்டுவந்த இளைஞன் என் நண்பன் பாலசுந்தரமாக இருந்தது கண்டு வியப்புற்றேன். 'பாலு!' என்று அழைத்தேன். அவன் திரும்பிப் பார்த்துக் கையால் சைகை செய்து, உடனே வருவதாகத் தெரிவித்தான்.

வரட்டும் என்று பார்த்துக்கொண் டிருந்தேன்.

உடனே அவன் வழுக்கைத்தலையாரிடம் விடை பெற்று விரைந்து வந்தான். "நீ எங்கே அய்யா இந்தப் பக்கம் வந்தாய்?" என்முன்.

"நீ எங்கே இப்படி?" என்றேன்.

"இது தான் என் சொந்த ஊர். தெரியாதா? பாலூரிலிருந்து பூங்கா நிலையம் வரையில் ரயில்பாஸ் வாங்கி நாள்தோறும் ஆபீசுக்கு வருகிறேன்."

"அது தெரியும். ஆனால் இந்த ஊர்தான் சொந்த ஊர் என்று தெரியாது. அந்த வழுக்கைத் தலையார் யார்? முன்னமே தெரியுமா?"

"அவரா? எங்கள் ஊரார். பொல்லாத ஆள். அடே அப்பா! அவர் தெரியாமல் இருக்க முடியுமா?"

வண்டி நகரத் தொடங்கியது. "சரி, நாளைக்குப் பார்க்கலாம்" என்றேன்.

அவன் வண்டியுடன் நடந்தபடியே, "ஆமாம். எங்கே வந்தாய்? எது வரைக்கும்?" என்முன்.

"திருமணம். நத்தப்பேட்டை வரையில்" என்று உரக்கச் சொல்லி விடைபெற்றேன். வண்டி அவனை விட்டு ஓடியது.

"பக்கத்து ஊர்தான் நான் இறங்க வேண்டிய ஊர்" என்றார் முதியவர்.

நான் அவரை இரக்கத்தோடு உற்றுப் பார்த்தேன். அவர் இனிமேல் எப்படி வாழ்வார், வாழ்க்

கையைக் கெடுத்துக்கொண்ட மகனை இனிமேல் எப்படித் திருத்தப் போகிறார், நமக்கு ஏதாவது ஆற்றல் இருந்தாலும் இவருக்கு ஒரு தொழில் கொடுத்துக் காப்பாற்றலாம், தொழில் கொடுக்கும் நிலையில் நாம் இல்லையே, ஆபீஸ் எவளாள்தொழிலுக்கும் பெரிய இடத்துச் சிபாரிசு தேவையான காலமாக இருக்கிறதே என்றெல்லாம் பலவாறு எண்ணிக்கொண்டே அவரை இரக்கத்தோடு பார்த்தேன். நண்பன் இனியன் எதிரில் இருந்த ஒரு கிழவியோடு அவளுடைய பேரனைக் குறித்து ஏதோ பேசிக்கொண்டிருந்தான்.

அந்தப் பேச்சைக் கவனிக்க எனக்கு மனம் இல்லை. திரும்பி முதியவரையே பார்த்தேன். "அப்புறம் என்ன செய்யப் போகிறீர்கள் பெரியவரே!" என்று கேட்டேன்.

"அப்புறமா? எமன் வரும் நாளை எதிர்பார்த்திருக்க வேண்டியதுதான். எதுவும் நாம் நினைக்கிறபடி நடக்காது என்று பெரியவர்கள் சொல்வார்களே, அது சரியாய்ப் போச்சு. நாம் கேட்டு வந்தது இவ்வளவுதான் என்று குறைகாலத்தையும் கழித்துவிட்டு ஆண்டவனிடத்தில் போய்ச் சேர்ந்துவிடுவேன்" என்றார்.

என் நெஞ்சு உருகியது. ஒன்றும் செய்ய முடியாமல் ஒருவருடைய துன்பத்தைப் பார்த்துக்கொண்டிருக்க நேர்ந்ததே என்று வருந்தினேன். சின்ன வயதில் சந்திர கிரகண நாளில் என் பாட்டியின் மடியில் உட்கார்ந்து, நிலவு குறைந்து குறைந்து மறைந்து போவதைப் பார்த்துக்கொண்டிருப்பேன். "பாவம்! அந்த நிலாவைப் பாம்பு கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுது பார்" என்று பாட்டி சொல்வாள். நான் அதைக் கேட்டு, "அங்கே யாராவது தடி எடுத்துக்கொண்டுபோய் அந்தப் பாம்பை ஒரே அடியாக அடித்துக் கொன்று போடக் கூடாதா?"

என்று அவளுடைய மடியை விட்டு ஆத்திரத்தோடு எழுவேன். "அது யாராலும் அடித்துக்கொல்ல முடியாத பாம்பு. அங்கே யாரும் போக முடியாது" என்பாள் பாட்டி. உடனே, நான் சோர்ந்து, "அய்யோ பாவம்!" என்று மறுபடியும் மடியில் உட்கார்ந்தபடி நிலாவைப் பார்த்து வருந்திக்கொண்டிருப்பேன். அந்த முதியவரின் துயரத்தை நினைந்து ரயில்பெட்டியில் உட்கார்ந்து வருந்தியபோதும் என் மனம் அதே நிலையில்தான் இருந்தது. உடம்பு என்ன வளர்ந்த போதிலும் மனம் சில வேளையில் குழந்தை நிலையில் இருப்பதை அப்போது உணர்ந்தேன்.

"பேரனுக்கு நல்லபடி சொல்லிச் சம்பளத்தை நீ வாங்கிவைத்துக்கொள்ளணும் பாட்டி" என்றான் இனியன்.

உடனே நான், "நீ உன் சம்பளத்தை உன் பாட்டியிடம்தான் கொடுக்கிறாயா? மனைவியிடத்தில் கொடுக்கிறாயே!" என்றேன்.

"அட! என் கதைவேறு. நான் என்ன அப்படியா குறுக்கெழுத்துப் போட்டியில் காசைச் செலவழிக்கிறேன்? பருத்திச்சீட்டுகளுக்காகவும்குறுக்கெழுத்துப் போட்டிகளுக்காகவும் பேரன் காசைக் கண்டபடி செலவழிக்கிறானும். சாப்பாட்டுக்கு இந்தப் பாட்டி கடன் வாங்கிப் போடுகிறாளாமே" என்றான்.

நான் அந்தக் கிழவியைப் பார்த்தேன். "உங்கள் ஊரில் இந்தச் சீட்டும் போட்டியும் அதிகமா?" என்றேன்.

"என் சொல்கிறாய்? சின்ன பிள்ளைகள், பெண்கள் எல்லாரும் இதே வேலையாக இருக்கிறார்கள். ஆறுயிரம் வரும் பத்தாயிரம் வரும் என்று பேசிக்கொண்டு, கையில் அகப்பட்ட காசை எல்லாம் அதில் போடுகிறார்கள்" என்றாள் கிழவி.

"அப்படி யாருக்காவது வந்திருக்கிறதா?", என்றேன்.

"பட்டணத்தில் யார்யாருக்கோ வந்திருக்கிறதாம். காஞ்சிபுரத்தில் வந்திருக்கிறதாம். சொல்கிறார்கள்."

"உங்கள் ஊரில்—?"

"யாரோ ஒருத்திக்குப் பத்து ரூபாய் வந்ததாம். அதுவும் எனக்குத்தெரியாது. சொல்லக் கேள்விதான்" என்றாள்.

"ஆகவே, எல்லோருக்கும் வருவதில்லை. எங்கோ யாரோ ஒருவர்க்கு எப்போதோ வருகிறது. அதற்காக இவ்வளவு பேரும் என் பாடுபட்ட காசைப் பாழாக்க வேண்டும்?" என்றான் இனியன்.

எதிரிலிருந்த ஒருவர், "நிலத்திலே விளையும் என்று தெரிந்துதான் நல்ல விதைகளைக் கொண்டு போய்க் கூடைகூடையாய்க் கொட்டுகிறோம். யார் நிலத்திலோ விளையும் என்பதற்கு நாம் ஏன் கொட்ட வேண்டும்?" என்றார். அவர் உழவர் என்று எண்ணினேன்.

"ஒருவேளை நம் நிலத்திலேயே விளையும் என்ற ஆசையால்தான் செய்கிறார்கள்" என்றேன்.

"அது உறுதியாகத் தெரிந்தால்தான் மண்ணிலே விதையைப் போடுவோம். இல்லையானால் பைத்தியக் காரனும் போட மாட்டானே! கிடைத்தாலும் கிடைக்கலாம் என்று சந்தேகம் இருக்கும்போது அதில் என் பணத்தைப் போட வேண்டும்? பைத்தியம்தான். காலமே கெட்டுப்போச்சு. உழைத்துச் சாப்பிடவேண்டும் என்ற நோக்கமே யாருக்கும் இல்லை. உருட்டிப் புரட்டிப் பணக்காரர் ஆக வேண்டும் என்ற ஆசையே நிரம்பிப் போச்சு" என்றார் அந்த உழவர்.

"எங்கள் காலத்தில் இப்படி உழைக்காமலே பணக்காரர் ஆக வேண்டும் என்று யாரும் அலைந்ததும்

பார்க்கவில்லை. இது இல்லை அது இல்லை என்று வாடினதும் பார்க்கவில்லை. இந்தக் காலத்தில்தான் இப்படி ஆண்பெண் எல்லாரும் காசு காசு என்று அலைகிறார்கள்'' என்றாள் கிழவி. உடனே, இனியனையும் என்னையும் பார்த்து, '' நீங்கள் இந்தப் போட்டியிலும் சீட்டிலும் காசு போடுவதில்லையா?'' என்றாள்.

இனியன் சிரித்துக்கொண்டே மறுமொழி கூறினான். '' எனக்கு மட்டும் இதில் ஈடுபடவேண்டும் என்று ஆசை இருக்கிறது. இவன்தான் தடுக்கிறான்'' என்று என்னைக் காட்டினான்.

''வேண்டாம் அப்பா. அந்தவேலைக்கே போகாதே. இந்தத் தம்பி சொல்வது நல்லதுதான்'' என்றாள் கிழவி.

மறுபடியும் இனியன், '' இல்லை, பாட்டி. நான் சீட்டிலே காசைப் போட்டுவிடுவேன் என்று எண்ணுகிறாயா? ஒருகாலும் அப்படிச் செய்ய மாட்டேன். இப்படி நானே ஒரு போட்டி ஏற்படுத்தி நடத்தினால், எமாந்த மக்கள் அதில் காசைக் கொண்டுவந்து கொட்டுவார்கள். நான் சீக்கிரம் பணக்காரன் ஆகிவிட முடியும். எமாந்த மக்கள் நாட்டில் ஏராளமாக இருக்கும்போது நமக்கு என்ன குறைச்சல்? பணம் சேர்ப்பதற்கு இது ஒரு நல்ல வழி. ஆனால் இவன் கேட்கவில்லை. மக்களை ஏமாற்றுவது பாவமான தொழில் என்கிறான்'' என்றான்.

'' தம்பி சொல்வது சரிதான்'' என்றாள் கிழவி. என் பக்கத்துக் கிழவர் எழுந்தார்; வண்டி நின்றது. 'வரட்டுமா? ஊர் வந்துவிட்டது' என்று இறங்கினார் கிழவர். சீவரம் இதுதான் என்று அறிந்தேன். கிழவர் ஒரு சிறு மூட்டையை எடுத்துக் கொண்டு மெல்ல நடந்தார். அவருடைய நடையிலே வயதின் சோர்வை விட மனத்தின் சோர்வே மிகுதி

யாகப் புலப்பட்டது. உழைத்து வளர்ந்த அந்த உடம்பில் இன்னும் உரம் குன்றவில்லை. நல்ல உடையும் தந்து, தக்க ஊட்டமும் தந்தால், அவருடைய தோற்றம் சர்தார் பட்டேலின் தோற்றம் போல் பெருமிதத்துடன் விளங்க முடியும் என்று எண்ணினேன். வாடி உலர்ந்த வயிறும், அழுக்குப் படிந்த ஆடையும் அந்த உடம்பினுள் கிடந்த உரம் புலப்படாதவாறு செய்தன! உள்ளத்தின் சோர்வு உள்ளதையும் சூலைத்துவிட்டமையால், அஞ்சி மதிக்கத் தகுந்த அந்தத் தோற்றம் இரங்கி வருந்தத் தக்கதாக இருந்தது. வாயிலருகே சென்றதும் அவர் மூட்டையைக் கீழே வைத்துவிட்டு, இடுப்பிலிருந்து ஒரு சிறு முடிச்சை அவிழ்த்து, டிக்கட்டை எடுத்துக் கொடுத்தார். பிறகு அந்த மூட்டையை எடுத்துக் கொண்டு வாயிலைக் கடந்துசென்றார். சிறிது நேரத்தில் கண்ணுக்கு எட்டாதவராய் மறைந்தார். வண்டி இரக்கம் இல்லாமல் நகர்ந்தது.

என் மனம், கண்ணில் புலப்பட்ட காட்சிகளைப் பொருட்படுத்தாமல், அந்த நிலவொளியின் அழகிலும் ஈடுபடாமல், அவருடையதுயரக் கதையையே திரும்பத் திரும்ப எண்ணியது. அவர் பெரு மூச்சு விட்டுக் கடைசியில் சொன்ன சில சொற்கள் என் செவியில் மீண்டும் மீண்டும் ஒலித்துத் துயரம் தந்தன. எனக்கு என் இப்படிப்பட்ட மனம் அமைந்ததோ, என் இப்படிப் பிறர்க்காக நைந்துஉருகி வாட வேண்டுமோ, மற்றவர்களைப் போல் என் மனமும் கல்மனமாக இருந்தால் கவலை இல்லாமல் கேட்டுக் கவலை இல்லாமல் மறந்துபோயிருக்கலாமே என்று எண்ணினேன். கல்மனம் உடையவர்கள் நோய் இல்லாமல் நெடுங் காலம் வாழ முடியும் என்று யாரோ எப்போதோ சொன்னதையும் நினைத்துக்கொண்டேன். திரு. வி. க.

போன்றவர்கள் பிறர்க்காக நெக்கு நெக்கு நினைப்பவ ராய், உள்ளம் இளைத்து உடலும் இளைத்து வாடி மெலிவதையும் நினைத்துக்கொண்டேன். ஒரு கூட்டத் தில் குன்றக்குடி அடிகளார் பிறர் துன்பம் நினைந்து உருகிக் கண்ணீர் சொரிந்து நாக் குழறிப் பேசியதும் நினைவுக்கு வந்தது.

இத்தகைய நினைவுகளில் ஆழ்ந்து நின்ற போது, எதிர்பாராமல் இனிய னுடைய வாய், 'வாடிய பயிரைக் கண்டபோ தெல்லாம் வாடினேன்' என்ற அருட்பா அடியைப் பாடியது. என் முகக் குறிப்பை உணர்ந்து தான் அவன் இந்தப் பாட்டின் அடியை நினவூட்டி னனே என்று எண்ணினேன்.

வண்டி வேகம் தணிந்து மெல்லச் செல்லத் தொடங்கியது. சன்னல் வழியாக எட்டிப் பார்த் தேன். வண்டியின் வழியில் ஒரு பாலம் கிடந்தது. அங்கே கொட்டிக் கிடக்கும் கல்லையும் மணலையும் கண்டு, பழுது பார்க்கும் வேலை நடப்பதாக உணர்ந் தேன். அடுத்தாற்போல் ஒரு பர்லாங்குத் தொலைவில் தீவட்டிகள் தெரிந்தன. காஸ்விளக்குகள் இரண்டு காணப்பட்டன. மக்கள் சிறு கூட்டமாகக் கூடியிருந் தனர். வண்டி நகர நகர, அது ஒரு திருமணக் கூட்டம் என்றும், பெண்ணை அழைத்துப் போக வந்த கூட்டம் என்றும், வந்தவர்களுக்கு வெல்லத் தண்ணீரும் மோரும் தந்து மகிழ்விக்கும் நிகழ்ச்சி நடைபெறு கிறது என்றும் உணர்ந்தேன். ரயில் ஓட்டுபவனும் வேண்டும் என்றே அந்தக் காட்சியைக் காண்பதற் காக வண்டியை மெல்லச் செலுத்தினன் போல் தெரிந்தது. அந்தக் கூட்டத்திற்குப் பக்கமாக என் பெட்டி போனபோது, மணப்பெண்ணைச் சுற்றி எட்டி எட்டிப் பார்க்கும் கிராமப் பெண்களின் கூட்டம் நன்றாகத் தெரிந்தது. அங்கிருந்த அந்தச்

சிறிய கோயில் பழுதுபார்க்கப்படாமல் சுவரெல்லாம் செடி முளைத்துப் பாழ்பட்டுக் கிடப்பதும் நன்றாகத் தெரிந்தது.

உடனே வண்டி வேகம் கொண்டது. வாலாஜா பாத் நிலையம் வந்தபோது, இனியன் என்னை நோக்கி, "இதுதான் இந்துமத பாடசாலையும் வள்ளலார் மாணவர் இல்லமும் உள்ள ஊர்" என்றான்.

என் உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. "தமிழ்நாட்டில் தனிஒருவர் – மாசிலாமணி முதலியார் – அவர் ஒருவரின் விடா முயற்சியால் நடக்கும் பெரிய அறநிலையத்தை – கல்விக் கூடத்தை – இது வரையில் போய்ப் பார்க்காமலே இருக்கிறோமே, நாமும் தமிழர்தானே?" என்றேன்.

"என்ன செய்வது? மறுநாளுக்கும் விடுமுறை எடுத்துவந்திருந்தால், திருமணம் முடிந்ததும் வழியில் இறங்கி இதையும் பார்த்துவிட்டுப் போகலாம்" என்றான் இனியன்.

"இன்னொரு நாள் இதற்கென்றே வருவோம்" என்றேன் நான்.

நத்தப்பேட்டை நிலையத்தில் நண்பன் தன் தம்பியை அனுப்பி, எங்களுக்காக ஒரு மாட்டு வண்டியும் ஏற்பாடு செய்திருந்தான்.

மாட்டுவண்டி போன வழியெல்லாம் மக்கள் கூட்டம் இருந்தது. "திருமணத்திற்கு ஏராளமான கூட்டம் வந்திருப்பதாகத் தெரிகிறதே" என்று மதுவின் தம்பியைக் கேட்டேன்.

"ஆமாம்" என்றான்.

"ஊரில் இது ஒரு திருமணம்தானே? இன்னும் வேறு திருமணங்கள் உண்டா?" என்றான் இனியன்.

"நாளைக்கு நடக்கும் திருமணம் மூன்று உண்டு" என்றான் மதுவின் தம்பி.

வண்டி சிறிது தொலைவு சென்று ஒரு பெரிய தெருவில் திரும்பியது. அந்தத் தெருவின் கோடியில் ஒரு பெரிய வீடு அலங்காரமாய்த் தெரிந்தது. " அது தான் நம் வீடா ?" என்றேன்.

" ஆமாம் " என்றான்.

" இவ்வளவு அருகே இருக்கும்போது ஒரு வண்டி எதற்கு? நடந்து வந்துவிட்டிருக்கலாமே " என்றேன்.

" அண்ணன் சொன்னார் " என்றான்.

நாகசுர இன்னிசை கேட்டது. பக்கத்துத் தெருவிலிருந்து இசைத்தட்டுப் பாட்டுக்களின் பேரொலி கேட்டது. " அப்பா ! எவ்வளவு ஒலி ! பேய்க்குரல் போல " என்றான் இனியன்.

" அது பக்கத்துத் தெருவின் திருமணம். நம் வீட்டிலும் அப்படி இசைத்தட்டு ஒலி வைக்க வேண்டும் என்று மாமா சொன்னார். அண்ணன்தான் வேண்டாம் என்று தடுத்துவிட்டார் " என்றான் மதுவின் தம்பி.

" ' தா 'விலையே ! அஞ்சாமல் சொல்லியிருக்கிறானே " என்று இனியன் மதுவைப் பாராட்டினான்.

மாட்டுவண்டி திருமண வீட்டின் எதிரே நின்றதும், இறங்கி உள்ளே நுழைந்தோம். உடனே கைகால் அலம்பிக்கொண்டு உணவுக்கு உட்கார வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். மணப்பந்தலில் மது தனியே உட்கார்ந்திருக்க, மங்கை ஒருத்தி அவனுடைய கைகளில் சந்தனம் பூசி நலுங்கு வைப்பதைக் கண்டோம். " இது முடியட்டும், மது வரட்டும், பிறகு சாப்பிடலாம் " என்று சொல்லி மதுவின் அருகே சென்றோம். அவன் எங்களைப் பார்த்ததும், " வாங்க " என்று அழைத்து அருகே வருமாறு சொன்னான். நாகசுர இசை நின்றது ; இளம்

பெண்கள் இருவர் மெல்லிய குரலால் பாடினர்கள். அவர்களின் குரல் கேட்க இனிமையாக இருந்தது.

பாட்டின் ஒரு பகுதி முடிந்து, மறுபடியும் நாகசுர இசை எழுந்தது.

ஆரத்தி சுற்றி முடிந்ததும் மது எழுந்தான்.

"என்ன மது! நீயும் கருநாடகமாக இருக்கிறயே?" என்றான் இனியன்.

"எதற்குச் சொல்கிறாய்? நலுங்கு பற்றிச் சொல்கிறாயா? அட! வந்தவர்களுக்கு ஏதாவது பொழுது போக வேண்டாமா? இதில் என்ன தீங்கு? நாகசுரம், சந்தனம் பூசுதல், வெற்றிலை வழங்குதல், இளம் பெண்கள் மகிழ்ச்சியாகப் போட்டியிட்டுப் பாடுதல் – இவற்றில் குற்றம் ஒன்றும் இல்லையே? அதனால்தான் ஒத்துக்கொண்டேன். ஏதாவது வீண் ஆடம்பரம் இருந்தால் கேள்; தெரியாத மொழியில் ஏதாவது சடங்கு நடந்தால் கேள். இந்த இரண்டும் மட்டும் கூடாது என்று முன்னமே ஏற்பாடு செய்து விட்டேன்" என்றான்.

"அந்த அளவிற்காவது முக்கியமான பகுதியில் கருத்தாக இருந்தாயே. தாய்மொழிக்குத் துரோகம் செய்யவில்லையே, அதுபோதும்" என்றான் இனியன்.

நாங்கள் உண்ண உட்கார்ந்த போது அவனும் எங்களுடன் உட்கார்ந்து உண்டான். மாப்பிள்ளைத் தோழராக இருந்த அவனுடைய மைத்துனரும் எங்களோடு இருந்து உண்டார். உணவு முடிந்ததும், மது அங்கிருந்த ஓர் அம்மையாரைப் பார்த்து, "அத்தை! நாளைக் காலை வரையில் எனக்கு ஒன்றும் வேலை இல்லையே" என்றான்.

"அதற்குள் எந்த ஊர்க்குப் போய்விட்டு வரப் போகிறாய்?" என்றாள் அவனுடைய அத்தை.

"எந்த ஊர்க்கும் போக வில்லை. சும்மா வெளியே போய் நண்பர்களோடு பேசிக்கொண் டிருப்பேன்" என்றான் அவன்.

"நானும் வர வேண்டுமா?" என்றார் மாப் பிள்ளைத் தோழர்.

"நீ பந்தலில் மட்டும் துணையாக இருந்தால் போதும். இவர்கள்தான் ஆபீசில் எனக்குத் துணை யாக இருப்பவர்கள்" என்றான் மது.

மூவரும் வெளியே புறப்பட்டு வெண்ணிலாவின் அழகைக் கண்டு களித்தவாறே மெல்ல நடந்தோம். ஊருக்கு அப்பால் ஒரு பர்லாங்கு நடந்து போயிருப் போம். எதிரே ஒருவன் பாதையின் இந்தப் பக்கத் திற்கும் அந்தப் பக்கத்திற்கும் ஊசலாடுவது போல் தடுமாறி நடந்துவந்தான். ஏதோ வாய் பிதற்றிக் கொண்டு வந்தான்.

"மது! என்ன இது?" என்றேன்.

"அதுவேதான் என்றான்" அவன்.

"எது?" என்றேன்.

"என் பெயர் சொன்னையே! அதுதான்" என்றான்.

இனியன் சிரித்தான். எதிரில் வருபவன் மேலே விழாதிருக்க வேண்டும் என்று பாதையின் ஒரு பக்க மாக ஒதுங்கி நின்றோம். வந்தவன் எங்களை உற்றுப் பார்த்தபடி சிறிது நின்று, "நீங்களா? தெரியும் தெரியும்" என்று குழறிவிட்டுச் சென்றான்.

"உங்கள் ஊரிலுமா இது இருக்கிறது?" என்றேன்.

"அங்கு இங்கு எனதபடி எங்கும் பிரகாசமாய் உள்ள பொருளாக ஆகிவிட்டது அது" என்றான் இனியன்.

" இல்லே அய்யா ! போன ஆண்டு வரையில் எங்கள் ஊரில் குடிகாரன் ஒருவனேயும் நான் பார்த்த தில்லே. எங்கள் ஊரில் கட்டுப்பாடு உண்டு. ஒருவரும் குடிக்க மாட்டார்கள். தப்பித் தவறி எவனாவது குடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டாலும், அதோ விளக்குத் தெரிகிறதே அந்த ஊருக்குப் போய் யாருக்கும் தெரியாமல் குடித்து மூலையில் முடங்கிக் கிடப்பான். வர வர, இரண்டொருவர் குடித்து விட்டு ஊருக்குள் வருவதை இப்போது பார்க்கிறேன். இதையும் பகலில் பார்க்க முடியாது " என்றான்.

" பகலிலும் குடிக்கிறார்களா ?" என்றேன்.

" குடிக்குப் பகல் என்ன ? இரவு என்ன ? காப்பி தேநீர் குடிப்பது போல் பகலெல்லாம் அதோ தெரிகிற அந்த ஊரார் குடிக்கிறார்களாம். அந்த ஊரே கெட்டுப் பாழாய்ப் போச்சு. எல்லாரும் சோம் பேறிகளாகிவிட்டார்கள். எல்லாரும் கடன்காரர். நிலபுலங்களே எல்லாம் இழந்துவிட்டார்கள் " என் றான்.

அவன் சொன்னவற்றைக் கேட்ட இனியன், " உங்கள் ஊரில் அவ்வளவு ஏழைகள் இல்லையா ?" என்றான்.

" அவ்வளவு இல்லே. ஏறக்குறைய எல்லோரும் வீடு வாசலுடன் ஏழெட்டுக் காணி நிலத்துடன் வாழ்கிறார்கள். ஊரில் உள்ள வீடுகளைப் பார்த்தாலே தெரியும். இங்கே எல்லாம் ஓட்டுவீடுகளாக இருக்கும். அந்த ஊரில் இரண்டொரு வீடுகள் தவிர எல்லாம் ஓலைக்குடிசைகள், புல்வீடுகளே " என்றான் மது.

" அப்படியானால், அந்தக் கிராமத்தில் ஏழைகள் நிறைய இருப்பதால், கள் சாராயம் விற்றுப் பிழைக் கவும் குடித்து மயங்கவும் கற்றுக்கொண்டார்கள் என்று சொல்லலாம் அல்லவா ? உங்கள் ஊரில் எல்

லாரும் கொஞ்சம் பொருள் வளம் உடையவர்கள்; ஆகையால் நல்ல சாப்பாடு உண்டு; இட்டளி காப்பி உண்டு; வாழ்க்கையில் கவலை குறைவு; குடிப் பழக்கத்துக்குப் போகவில்லை. அதனால் ஒருவர் இருவர் கெடுவதாக இருந்தாலும் கட்டுப்பாடு செய்ய முடிகிறது" என்றான் இனியன்.

"அந்த ஊரில் உள்ள ஏழைகளில் பெரியவர்கள் இல்லையா? அவர்கள் ஏன் கட்டுப்பாடு செய்யக் கூடாது?" என்று கேட்டேன்.

மது சொல்வதற்கு முன்னமே இனியன் குறுக்கிட்டான். "ஊரில் ஒருவர் இருவர் திருடராக இருந்தால், பிடித்து அடக்கலாம். பெரும்பாலோர் திருடராக இருந்தால், யாரைப் பிடிப்பது? ஒருவனைப் பிடித்தால், மற்றவர்கள் அவனுக்குத் துணையாக நிற்பார்கள். கடைசியில் பிடித்தவர்களுக்குப் பகையும் துன்பமும் வந்து சேரும்" என்றான்.

"ஆமாம். அப்படித்தான் சொல்கிறார்கள். அங்கே யாராவது கண்டித்தால், அறிவுரை சொன்னால், மறுநாள் அவனுடைய வீட்டில் உள்ளதையோ வயலில் உள்ளதையோ திருடிக்கொண்டு போய்விடுகிறார்களாம். குடித்துவிட்டு நடுத்தெருவில் எதிர்த்துப் பேசி வம்பு செய்கிறார்களாம். அதனால் நமக்கு வன் இந்தத் தொல்லை என்று நல்லவர்கள் ஒதுங்கிவிடுகிறார்களாம்" என்றான் மது.

"நன்மைக்குப் பக்கத் துணை சேர்வது அரிதாக இருக்கிறது. தீமைக்கு எளிதில் சேர்கிறது" என்று நான் வியந்தேன்.

ஓர் ஓடை குறுக்கிட்டது. அதன் வெண்ணிற மணல் அன்றைய நிலவில் புதிய அழகு பெற்று எங்களைக் கவர்ந்தது. மூவரும் அந்த மணலில் உட்கார்ந்தோம்.

" அந்தக் கிராமத்திற்குப் போய்ப் பார்த்து வந்தால் என்ன ?" என்றான் இனியன்.

" அய்யோ ! இந்நேரத்திற்கு அந்த ஊரில் நல்லவர்கள் கால் வைக்கலாமா ? ஆண்கள் பெண்கள் எல்லோரும் குடித்துவிட்டுக் கண்டபடி ஒருவரை ஒருவர் வைது சண்டையிட்டுக்கொண்டு கிடப்பார்கள். எவன் பெண்டாட்டி எவனோடாவது கிடப்பாள். அந்த அளவிற்குக் கெட்டுப்போன ஊர் அது. சில நாட்களில் ஒரே கலகமாய் அடிதடி கூச்சல் எல்லாம் நடக்கும். மூன்று மாதங்களுக்குமுன் என்னைக் காட்டிக்கொடுத்தாய் உன்னைக் காட்டிக்கொடுப்பேன் என்று சொல்லி இருவர்க்குள் பேச்சு வளர்ந்து கொலையில் முடிந்து மூன்று பிணங்கள் விழுந்தன. அந்த வழக்கில் சிறைக்குப் போனவர்கள் இன்னும் வெளியே வரவில்லை. அப்படிப்பட்ட ஊர்க்கு நாம் ஏன் போக வேண்டும் ?" என்றான் மது.

" எனக்கு என்னவோ, அப்படிப்பட்ட ஊரைத் தவறுமல் பார்க்க வேண்டும் என்று மனம் தூண்டுகிறது. நீ நினைப்பது போல் மக்கள் எல்லாரும் கெட்டவர்களாக இருக்க முடியாது. மனிதப் பண்பு அவர்களுக்கு இல்லாமல் போய்விடாது. அய்யோ, வறுமையால் அவர்களுடைய வாழ்க்கை வாடிக் கெட்டிருக்கும் " என்றான் இனியன்.

" இந்நேரத்திற்குப் போகவே கூடாது. வேண்டுமானால் நாளைக் காலையில் திருமணம் முடிந்தபிறகு தெரிந்தவன் ஒருவனை உங்களோடு அனுப்புவேன். அவனோடு போய்விட்டு வா. அதுவும் எதற்காக ? வீண்முயற்சி " என்றான் மது.

" அந்த ஊரில் விற்பது சாராயமா, கள்ளா ?" என்று இனியன் கேட்டான்.

" அந்த ஊரில் சாராயம். அதற்கு அப்பால் அரைமைல் தொலைவில் கிழக்கே ஓர் ஊர் உள்ளது. அங்கே கள் இறக்குகிறார்களாம். அந்த ஊரும் வர வாக் கெட்டுவருகிறதாம் " என்றான் மது.

யாரோ வரும் காலடி கேட்டது. திரும்பிப் பார்த் தோம். வந்தவர்கள் சிறிது தொலைவில் நின்றபடியே, " யார் ?" என்று கேட்டார்கள்.

" இந்த ஊர்த் திருமணத்திற்கு வந்திருக்கிறோம் " என்றான் இனியன்.

" இந் நேரத்திற்கு இங்கே என்ன வேலை ?"

" சும்மா பேசிக்கொண்டிருக்க, காற்றோட்டமாக வந்தோம்."

அதற்குள் இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலு மாக நான்கு நான்குபேர் எங்களைச் சுற்றி வளைப்பது போல் வந்து நிற்பது கண்டோம்.

" அடடா ! நம் சின்னையா வீட்டுப் பிள்ளை தான். வேறு யாரோ என்று பார்த்தோம் " என்றார் வந்தவர்களில் ஒருவர்.

" கலியாணப்பிள்ளை இந்த நேரத்தில் இங்கே என் வரவேண்டும் ? அங்கே கலியாணத்துக்கு வந்தவர்களை எல்லாம் கவனிக்காமல்—"என்றார் இன்னொருவர்.

" ஓ ! மணியகாரரா ?" என்றான் மது. " நீங்கள் என் இந்நேரத்திற்கு இங்கே வந்தீர்கள் ? இவர்கள் யார் யார் ? புதியவர்களாக இருக்கிறார்களே !" என்றான்.

" நாங்கள் வந்த வேலை வேறு. இவர்கள் மது விலக்கு அதிகாரிகள். இதோ பார், கையில் துப்பாக்கி யுடன் வந்திருக்கிறார்கள். அந்த ஊரில் சிலரைப் பிடிக்க வந்தார்கள். அவர்கள் தலைமறைவாய் ஓடை யிலோ தோப்புகளிலோ ஒளிந்து திரிகிறார்கள். இங்கே சிலர் பேசும் குரல் கேட்டுச் சந்தேகப்பட்டு

வளைத்துப் பிடிப்பதற்காக வந்தோம். அருகில் வந்து பார்த்தால் நீங்கள் இருக்கிறீர்கள்" என்றார் மணியகாரர்.

"சரி. போகலாம்" என்றார் வெள்ளைப் போர்வையை எடுத்துவிட்டுக் காக்கி உடையில் விளங்கிய நிசர்வ் போலீஸ்காரர் ஒருவர்.

"இப்போது உடனே போய்ப் பயன் இல்லை. கொஞ்சம் பொறுத்துப் போகலாம். உட்காருங்கள்" என்றார் வெள்ளை உடையில் இருந்த அதிகாரி ஒருவர்.

எல்லாரும் உட்கார்ந்தார்கள். வெள்ளை உடையில் இருந்த மற்றொருவர் பெரிய மூட்டை ஒன்றை வைத்திருந்தார். "என்ன அது?" என்று கேட்டேன்.

"போலீஸ் உடை; தொப்பி முதலியவை" என்றார் அவர்.

"ஆளைத் தேடிப் பிடிப்பதற்கு மாறுவேடம் வேண்டியதாக இருக்கிறது. மிரட்டி உண்மையைக் கக்கும்படி செய்வதற்குச் சமயத்தில் போலீஸ் உடையும் வேண்டியதாக இருக்கிறது" என்று மற்றொருவர் விளக்கம் கொடுத்தார்.

இனியன் எப்போதுமே துணிச்சலானவன்; யாரிடம் எதை எப்போது கேட்கலாம் என்று எண்ணிப்பாராமல் தயங்காமல் கேட்டுவிடுவான். ஆனால் அவன் கேட்பதில் ஒரு நயம் இருக்கும். அதனால் அந்தத் துணிச்சல் பெரும்பாலும் வெற்றியாகவே முடியும். இப்போதும் அவன் அவ்வாறு கேட்டு விட்டான். "நீங்கள் இவ்வளவு முயற்சி எடுத்து இப்படிப் பொறுப்பாக இரவிலும் கடமையைச் செய்கிறீர்கள். ஆனால் உங்களைப் பற்றிப் பொதுமக்கள் தவறுகப் பேசுகிறார்களே!" என்றான்.

உடனே ஒருவர், "பொதுமக்கள் என்று பொதுவாகச் சொல்லாதீர்கள். சிலர்க்குச் சர்க்காரின் மேல்

ஏதாவது குற்றம் குறை சொல்லிக்கொண்டே இருப்பது வழக்கமாகிவிட்டது. அவர்கள்சொல்வதைப் பொதுமக்கள் நம்பி இசைத்தட்டுப் போல் திரும்பச் சொல்லித் திரிகிறார்கள். இந்தத் தொழிலுக்கு வந்து அகப்பட்டு நாங்கள் படும் தொல்லை யாருக்குத் தெரியும்?" என்றார்.

"என்னதான் சொல்கிறார்கள்?" என்றார் மற்றொருவர்—அடர்ந்த மீசைக்காரர்.

"குற்றம் செய்யாதவர்களை எல்லாம் பிடித்துக் கொண்டு போவதாகச் சொல்கிறார்கள்" என்றான் இனியன்.

"இது வீண் பழி. நாங்கள் நேரே போய்க் கிராமத்தில் நுழைந்து யாரை வேண்டுமானாலும் பிடித்துக்கொண்டு போக முடியுமா? கிராமத்தார் சும்மா விடுவார்களா? கிராம மணியகாரரும் ஊர்ப் பெரிய மனிதர்களும் சொல்வதைக் கேட்டுத்தான் பிடிக்கிறோம்" என்றார் அடர்ந்த மீசையார்.

"அவர்கள் குற்றவாளிகளையே சொல்கிறார்கள் என்பது என்ன உறுதி? அவர்களும் யாரோ சொல்வதைக் கேட்டு உங்களுக்குச் சொல்லலாம்" என்றான் மது.

"அப்படிப் பார்த்தால், குற்றம் செய்யாதவர் களைப் பிடித்துக் கொடுத்தால் ஊர் எங்களைச் சும்மா விடுமா, தம்பி" என்றார் மணியகாரர்.

ஓடையின் வடகரையில் ஒரு மரத்திலிருந்து ஆந்தை ஒன்று அலறியது. காக்கைகள் திடீரென்று கலைந்து எழுந்து ஒலித்தன.

"அப்படிப் பார்த்தால், யார் யாரைத்தான் நம்ப முடியும்? போகட்டும்; எங்கள்மேல் வேறு என்ன குற்றம் சொல்கிறார்கள்?" என்று கேட்டார் மீசையார்.

"பணம் நிறைய வாங்குவதாக" என்றான் இனியன்.

"நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றான் மது.

"இப்போது நாங்கள் வந்த ரயிலிலும் பேசிக் கொண்டு வந்தார்கள்" என்றேன் நான்.

மூன்று பேரும் சேர்ந்து சொன்ன காரணத்தால், அவர்கள் எல்லோருக்கும் திகைப்பு ஆகிவிட்டது.

யார் முன்னே பேசுவது என்று ஒவ்வொரு வரும் சிறிதுநேரம் வாளா இருந்தார்கள். மீசையார் வாய் திறந்தார். "இந்தக் காலத்தில் எந்த ஆபீசிலும் யாரும் லஞ்சம் வாங்கி வாங்கிப் பெயரைக் கெடுத்துக் கொண்டார்கள். அதனால் நாங்கள் வாங்காமலிருந் தாலும் இல்லாததும் பொல்லாததுமாக எங்கள் மேலும் சொல்கிறார்கள்" என்றார்.

இதுவரையில் பேசாமலிருந்த கரியவர் – ரிசர்வ் போலீஸ்காரர் – பேசத் தொடங்கியது எனக்கு வியப் பாக இருந்தது. "அப்படிச் சொல்லாதீர்கள். நமக்குள் யாரோ சிலர் செய்கிறார்கள். அது எல்லார் மேலும் வந்து விடிகிறது என்று சொல்லுங்கள். இல்லாமல் பிறக்காது, அள்ளாமல் குறையாது. நானே என் காதால் கேட்டிருக்கிறேன். கண்ணால் பார்த் திருக்கிறேன். நமக்கொல்லாம் சம்பளம் எவ்வளவு?" என்றார்.

"அது தெரிந்ததுதானே. சம்பளம் மூப்பது ரூபாய், பஞ்சப்படி பத்தொன்பது" என்றார் மீசையார்.

"ஆக நாற்பத்தொன்பது ரூபாயில் யாராலும் ஒழுங்காகக் குடித்தனம் நடத்த முடியாது. உண்மை யாக நடந்தால், குடும்பம் கால்பட்டினி அரைப் பட் டினியாகத்தான் இருக்க முடியும். ஆனால் உங்களுக்கு நன்றாகத் தெரியும். நம் நண்பர்களில் சிலர் எவ்வளவு

ஆடம்பரமாக வாழ்கிறார்கள் என்பது தெரியும். நல்ல சாப்பாடு, பட்டு முதலான ஆடம்பரம் இவைகளை அவர்களின் வீடுகளில் பார்க்கலாம். நாற்பத்தொன்பது ரூபாயில் இவ்வளவும் செய்கிறார்கள் என்று நம்புகிறீர்களா ?'' என்றார் கரியவர்.

'' மாமனார் மாமியார் மைத்துனர் அண்ணன் தம்பி உதவியாக இருக்கலாம் '' என்றார் மீசையார்.

''ஏன் அண்ணே ! மனத்திலே வைத்துக்கொண்டு சும்மா மறைத்துப் பேசிப் பயன் இல்லை. இந்தக் காலத்தில் போலீஸ்காரர மாப்பிள்ளைக்கு இருநூறு முந்நூறுமாதந்தோறும் மணியார்டர்செய்யும் மாமனார் மாமியார் இருக்கிறார்களா ? வீண் பேச்சு ! முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கக் கூடாது. எலுமிச்சங்காயை வேண்டுமானால் மறைக்கலாம்.''

''இருந்தாலும் டிபார்ட்மெண்ட் ஆட்களைப் பற்றி நாமே இப்படிப் பேசினால்—.''

'' பேசாவிட்டால் யார்க்கும் தெரியாமல் இருக்க முடியுமா ? பெரிய பணக்காரனிடத்தில் நூறு ஐம்பது வாங்கினால் தெரியாது. ஏழைக் கிராமத்தானிடத்தில் வாங்கினால் எப்படியும் தெரிந்துவிடும். ஏனென்றால் அவனிடத்தில் இருப்பது குறைவு. அதில் வாங்கினால் தெரிந்துபோகிறது. குளத்தில் குடம் குடமாக மொண்டாலும் தெரியாது. தொட்டியில் ஒரு செம்பு மொண்டாலும் தெரியாமலிருக்க முடியுமா ?''

'' இருந்தாலும் நாம் என் பேச வேண்டும் ?''

'' பேசினால் என்ன ? இவர்கள் படித்த பிள்ளைகள், நல்லவர்கள் என்றுதான் பேசுகிறேன். நாம் பேசாமலிருந்தாலும், உலகமெல்லாம் தெரிந்த உண்மையாக இருக்கிறதே.''

இவ்வாறு இருவரும் பேசிய பேச்சு எங்கே பகையாக முற்றிவிடுமோ என்று நான் அஞ்சினேன். இனியன் குறுக்கிட்டுப் பேசியது நன்மையாயிற்று.

"உங்கள்மேல் குறை சொல்கிறேன் என்று நீங்கள் எண்ணக் கூடாது. என்னுடன் படித்தவன் ஒருவன் பட்டணத்தில் இருக்கிறான். அவனுடைய பெரியப்பாவின் ஊரில் நான்கு தென்னந்தோப்புகள் இருக்கின்றனவாம். பதநீர்க்கு லைசென்ஸ் வாங்கி விட்டுக் கள் இறக்குகிறார்கள். அதில் நல்ல காசு கிடைக்கிறதாம். நான்கு தோப்புக்காரரும் ஒற்றுமையாய்ச் சேர்ந்துமாதம் ஆயிரம் ரூபாய் உங்கள் டிபார்ட்மெண்டுக்குக் கொடுத்துவிடுகிறார்களாம். அந்த ஊர் மணியகாரர்க்கும் ஒரு தோப்புச் சொந்தமாம். ஆகவே அவரும் உடந்தையாம். இந்த ஊர் மணியகாரர் என்மேல் கோபித்துக்கொள்ளக் கூடாது" என்றான்.

"எங்கள் மணியகாரர் இதற்காகக் கோபித்துக் கொள்ளமாட்டார். அவர் ஏதாவது தப்புத் தவறு செய்தால்தானே கோபம் வரும்?" என்று மது தந்திரமாக அவரையும் மடக்கிவிட்டான்.

கரியவர் மெல்லப் பேச்செடுத்தார். "மனிதனுக்குக் கவலை மிகுதியானால் குணம் கெட்டுப் போகிறது. காந்தியைப் போல் யாரோ ஒருவர்தான், நெருப்பில் போட்ட பொன்போல் துன்பம் படப்படக் குணத்திலும் உயர்ந்து நிற்கிறார்கள். மற்றவர்கள் நெருப்பில் போட்ட கட்டையாய்க் கருகிக் கெட்டுப் போகிறார்கள். என் மனத்தையே சொல்கிறேன். குடும்பத்தில் மனைவியும் மக்களும் சில நாளில் படும் துன்பத்தைப் பார்த்தால், கொஞ்சம் பணம் வாங்கிக் குடிகாரர்க்கு உதவிசெய்தால் என்ன என்று தோன்றுகிறது. ஆனால் என்னை யாரும் நம்பிக் கொடுக்க

மாட்டேன் என்கிறார்கள். என்ன காரணமோ தெரியவில்லை" என்றார்.

உடனே மீசையார்க்குப் பக்கத்தில் இருந்தவர், "அய்யா அய்யா! இதை எங்கேயும் வெளியில் சொல்லிவிடாதே, ஆபத்து. உண்மையைச் சொன்னதற்காக அரிச்சந்திரனைச் சுடுகாட்டுக்குத் துரத்தி மனைவியின் கழுத்தை வெட்டச் சொன்ன நாடு இது. கொஞ்சம் பயந்துதான் பேச வேண்டும். தெரியுமா?" என்றார்.

மறுபடியும் இனியன் குறுக்கிட்டுப் பேச்சை மாற்றினான். "அது மட்டும் அல்ல; அந்தத் தென்னந் தோப்பில் முறையாக வந்திருந்து போலீஸ்காரரும் மதுவிலக்கு ஆட்களும் குடித்துவிட்டுப் போவதாகவும் சொன்னான்" என்றான். அப்போது நிலவொளி குறைந்தது. வானத்தில் பெரிய மேகம் ஒன்று நிலவை மறைத்துவிட்டது கண்டேன்.

"அது இருக்கலாம்" என்றார் மீசையார். "மனிதனுடைய மனம் உரம் இல்லாதது. கொஞ்ச நேரம் கவலையை மறந்து இருப்பதற்கு வேறு வழி இல்லாதால், இதைத் தேடுகிறார்கள். பெரிய பெரிய படிப்பாளிகள், புலவர்கள், கவிகள், கலைஞர்கள், அரசியல் அதிகாரிகள் இவர்களில் பலர் குடிக்கும்போது, சின்ன ஆட்கள் குடித்தால் இதைக் குற்றமாகச் சொல்வதற்கு இல்லை" என்றார்.

"வேறு துறைகளில் உள்ளவர்கள் குடிக்கலாம். ஆனால் மதுவிலக்குத் துறையில் இருந்துகொண்டு—" என்றான் மது.

"அதற்கு என்ன செய்யலாம்? அவர்களும் மனிதர்கள்தானே? மனிதனுடைய குறை மனிதனை விட்டுப் போய்விடுமா?" என்றான் இனியன்.

எதோ ஒரு குருவி தன்னந்தனியாக ஒற்றைக் குரலில் தலைக்குமேல் கத்திக்கொண்டு சென்றது. "என்ன துயரமோ,பாவம்! சொல்லாமல் சொல்கிறது" என்றான் இனியன்.

சிறிது நேரம் எங்களிடையே அமைதி நிலவியது. தொலைவிலே கழுதை போல் ஒன்று ஓடியது.

" அதுதான் கழுதைக்குடத்தி என்று சொல்வார் கள். பார்த்திருக்கிறயா தம்பி !" என்று மணியகாரர் மதுவைக் கேட்டார்.

" கேள்விப்பட்டது உண்டு. பொல்லாதது என்று சொல்வார்கள் " என்றான் மது.

" பொல்லாததுதான். ஆனால் இரண்டு பேர் சேர்ந்திருந்தால் அது பயந்து ஓடும் " என்றார் மணியகாரர்.

"குதிரைபோல் அவ்வளவு வேகமாக ஓடுகிறதே " என்றேன்.

" காட்டு விலங்குகள் எல்லாமே வேகமாக ஓடும். மற்ற விலங்குகளிடமிருந்து தப்பி ஓடிஓடிப் பழக்கம்" என்றார் மணியகாரர்.

" உங்கள் ஊர்க் குடிகாரர் எங்களிடமிருந்து தப்பி ஓடி ஓடிப் பழக்கப்பட்டது போல " என்றார் மீசையார்.

எதிரே இருந்த புதரை நோக்கிக் குள்ளநரி ஒன்று ஓடியது. அதுவரையில் மேகத்தில் மறைந்திருந்த நிலா வெளிவந்து ஒளி வீசியது. புதரை நோக்கி ஓடிய குள்ளநரி நன்றாகத் தெரிந்தது. ஆனால் அது அங்கே நிற்காமல் உடனே அங்கிருந்து திரும்பி வேறொரு புதரை நோக்கி ஓடியது.

" சரி ! போய் நம் வேலையைப் பார்க்கலாம் " என்று எழுந்தார் மீசையார். மற்றவர்களும் எழுந் தார்கள். புறப்பட்டுப் போனார்கள்.

இன்னும் இனியன் எதாவது இல்லாத குற்றங்களைச் சொல்லிப் பேச்சை வளர்த்துவான் என்ற அச்சத்தால் மீசையார் புறப்பட்டுவிட்டாரோ என்று எண்ணினேன். அவர்களின் தலை மறைந்தபிறகு அந்தக் கருத்தை மதுவிடம் சொன்னேன். அவனும் அதுவே காரணம் என்றான்.

அவர்கள் போய் மறைந்தார்களோ இல்லையோ, எங்கள் எதிரில் ஒருவன் மெல்ல அடி எடுத்து நடந்து வந்தான். நாங்கள் மூன்றுபேரும் பயந்து போனோம். நெஞ்சு திடுக்கிட்டது. இனியன், அஞ்சாமல், "யார் அது?" என்றான்.

"நான் ஓர் ஏழை சாமி! தப்பாக ஒன்றும் நினைக்காதீர்கள் சாமி" என்றான்.

"இந்நேரத்திற்கு இங்கே என்ன வேலை?" என்றான் மது.

"சொல்கிறேன் சாமீ" என்று திரும்பித் திரும்பிப் பார்த்து எங்கள் எதிரில் சிறிது விலகி உட்கார்ந்தான்.

"இது வரையில் நீ எங்கே இருந்தாய்? திடீரென்று எங்கள் எதிரில் வந்தாயே" என்று இனியன் கேட்டான்.

"இதோ இந்தப் புதரில் மறைந்திருந்தேன்" என்று புதரைச் சுட்டிக் காட்டினான்.

"இவன் அங்கே இருந்ததனால்தான் அந்தக் குள்ளநரி அங்கே போனதும் திரும்பி ஓடிவந்து விட்டது" என்றேன்.

"குள்ளநரியா? நான் பார்க்கவில்லையே" என்றான் மது.

"ஆமாம் சாமி" என்றான் அந்த ஏழை.

"நீ ஏன் அங்கே ஒளித்திருந்தாய்?" என்றான் இனியன்.

" அதுதான் உங்களுக்குத் தெரியுமே சாமி! இந்நேரம் நீங்களும் பேசிக்கொண்டிருந்தீர்களே. நீங்கள் அவர்களைப் பற்றிச் சரியாகச் சொன்னீர்கள். பணம் வாங்குவது, கண்டவர்களைப் பிடித்துக்கொண்டு போவது எல்லாம் பொருத்தமாகச் சொன்னீர்கள். என்ன சொன்னாலும் அவர்களுக்குப் புத்தி வராது, சாமி " என்றான்.

இவனுக்குமட்டும் சொன்னால் புத்தி வருமோ என்று எனக்குள் எண்ணியவாறே இனியனுடைய முகத்தைப் பார்த்தேன். இனியன் என் முகத்தைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். கண்ணாலும் ஏதோ சைகை செய்தான். இனியன் அவனைப் புலன் விசாரிக்கப் போகிறான் என்பதை உணர்ந்துகொண்டேன்.

" சரி, போகலாமா ?" என்றான் மது.

" என்ன அவசரம்? இன்னும் கொஞ்சம் பொறுத்துப் போகலாம். யாரோ ஏழை ஒருவன் துன்பப்பட்டு வந்திருக்கிறான். இவனுக்கு நாம் உதவி ஒன்றும் செய்யாவிட்டாலும், இவனுடைய குறைகளையாவது கேட்டுவிட்டுப் போகலாம். அப்போதுதான் இவனுடைய மனத்துக்கு ஆறுதலாக இருக்கும்" என்றான் இனியன்.

" ஆமாம் சாமி. நீங்கள் நல்லா இருக்கணும். கடவுள் உங்களுக்கு நன்மையே செய்யணும் " என்றான் அந்த ஏழை.

இனியனுடைய திட்டம் பலித்தது கண்டு அவனைப் பார்த்துக் கண்ணால் பாராட்டினேன்.

" நீ என்ன செய்தாய் ? சாராயம் காய்ச்சினையா ? கள் இறக்கினையா ?" என்று இனியன் கேட்டான்.

" சாராயம் காய்ச்சத் தெரியும். என்னைப் போல் ஏழைகள் கள் இறக்க முடியுமா ? அது பணக்காரரால்

தான் முடியும். அதற்குத் தோப்பு வேண்டுமே'' என்றான்.

''உனக்கு ஏன் இந்த வேலை? பேசாமல் ஏதாவது பயிரிட்டுப் பிழைக்கலாமே.''

''என்ன பயிரோ போங்க. அதற்கு நிலம் பரப்பாக இருக்கணும். நல்ல கிணறு இருக்கணும். மோட்டார் போட்டு இறைக்கணும். அப்போது தான் கையில் காசு பார்க்கலாம். அரைக்காணி கால்காணியை வைத்துக்கொண்டு மாடு வாங்கி இறைத்துப் பயிரிட்டு யாராவது முன்னுக்கு வந்திருக்கிறார்களா? பார்த்தீர்களா? ஏழைக்குப் பயிர்த்தொழில் உதவாதுங்க. பயிர் செய்த வரைக்கும் நானும் என் பெண்டாட்டியும் பிள்ளைகளும் வயிறுரக் கஞ்சி குடித்ததில்லை; நல்ல துணி கட்டினதில்லை.''

''இப்போது எப்படி?''

''இந்தப் போலீஸ் ரிசர்வ் மதுவிலக்கு ஆட்கள்– இவர்கள் தொல்லை இல்லையானால், பயம் இல்லாத சாப்பாடும் துணியும் உண்டு. நல்லபடி சாப்பிடுகிறோம். காசும் சேர்கிறது. ஆனால் இவர்களின் வாயிலே போட்டுவிடணும்.''

''பிடித்துக்கொண்டால்?''

''நாலு மாசம் ஆறுமாசம் போய்ச் சிறையில் ஓய்வு எடுத்துக்கொள்ளலாம் சாமி. அங்கேயும் நல்ல சாப்பாடு. பருப்புக் குழம்பு, காய் கூடப் போடுகிறார்கள். கவலை இல்லாமல் வேளை வேளைக்குக் கிடைத்துவிடுகிறது. பயிர்த் தொழில் செய்த காலத்தில் ஒரு நாளிலாவது இப்படிப்பட்ட சாப்பாடு சாப்பிட்டதில்லை.''

''அப்படி இருக்கும்போது, இவர்களைப் பார்த்து என் பயப்படுகிறாய்?''

"சிறையில் தள்ளுவதைப் பற்றிப் பயமே இல்லை சாமி. பெண்டாட்டி பிள்ளைகள் எப்படியாவது கடனே உடனே வாங்கிப் பிழைத்துக்கொள்கிறார்கள். வெளியே வந்த பிறகு நான் பாடுபட்டுக் கடனைத் தீர்த்துவிடுகிறேன்."

"பின்னே என் பயப்பட வேண்டும் ?"

"காரணம் அது இல்லைங்க. இரண்டு முறை சிறைக்குப் போய்வந்த போது பயப்படவே இல்லை. மூன்றும் முறை போய்வந்த பிறகுதான், இனி இவர்களுக்கு அகப்படக் கூடாது என்று பார்க்கிறேன். காரணம் வேறென்றும் இல்லைங்க. நினைத்தாலும்மனம் கொதிக்குதுங்க. நான் போன பிறகு என் பெண்டாட்டி தனியாக இருக்கும்போது நடு இராத்திரியில் வந்து அவளை மிரட்டுகிறார்கள், பயப்படுத்துகிறார்கள், போலீஸ் சட்டை போட்டு வந்து அவளைத் துன்பப் படுத்துகிறார்கள். கையைப் பிடித்து இழுக்கிறார்கள் என்றும், மார்த்துணியைப் பிடித்து இழுக்கிறார்கள் என்றும் அவள் சொன்னபோதுதான் என்னால் பொறுக்க முடியவில்லைங்க. அக்கிரமம் செய்கிறார்கள் அநியாயக்காரர்கள். இவர்களை எல்லாம் சிறையில் தள்ளித் தண்டிக்கணும் சாமி. கடவுள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார் ; சும்மா விடமாட்டார்."

"கடவுள் நல்லவர் கெட்டவர் இரண்டு வகையார்க்கும் துணையாக இருக்கிறார். சும்மா பார்த்துக் கொண்டிருக்கிறார். உனக்கு மட்டும் உதவி செய்வார் என்று எண்ணுகிறாயா ?"

"என்னமோ போங்க." இவ்வாறு சொன்னதும், பயந்த குறிப்போடு தொலைவில் ஏதோ ஒலி கேட்டு உற்றுப் பார்த்தான். திரும்பித் திரும்பிப் பார்த்தான்.

"இப்படி என் பயந்து பயந்து வாழ'ணும்" என்று நான் மெல்லக் கேட்டேன்.

"கொஞ்சம் இருங்கள் சாமி" என்று பயந்த உள்ளத்தோடு மெலிந்த குரலில் சொன்னேன். மெல்ல மூட்டியிட்டு எழுந்து இங்கும் அங்கும் பார்த்தான். யாரோ இருவர் சிறிது தொலைவில் பேசிக்கொண்டு சென்றார்கள். சர சர சர என்ற ஒலியுடன் தொலைவில் ஏதோ ஒன்று ஓடியது.

"அது என்ன தெரியுமா சாமி?" என்றான்.

"ஏதாவது ஓணான் கீரி இருக்கலாம்" என்றேன்.

"ஓணான் கீரி ஒலி வேறு வகையாக இருக்கும். அது பாம்பு. பாம்பு போனால்தான் அப்படி ஒலி கேட்கும்."

"பயம் போய்விட்டதா?"

"அவர்கள் உங்கள் ஊர்க்குக் கலியாணத்துக்குப் போகிறவர்கள். சந்தேகப்பட்டுப் பார்த்தேன். நெஞ்சு திக்கென்றது. என்ன செய்வது, சாமி? பயிர்த்தொழில் தவிர வேறு ஏதாவது நல்ல தொழில் கிடைத்தால் இந்தச் சாராயத்தைக் கையால் தொடவே மாட்டேன். வேறே எங்கே வேலை கிடைக்கப் போகிறது?"

"பயிர்த்தொழில் நல்லது என்று பெரியவர்கள் எல்லாம் பாடியிருக்கிறார்களே."

"யாருக்கு? பண்ணை வைத்துக்கொண்டு சுகமாக இருக்கிறார்களே அவர்கள் பேசுகிற பேச்சு இது. எழை பயிர்வைத்தால் ஒருநாளும் முன்னுக்கு வர முடியாது. நல்ல கஞ்சி நல்ல துணிமணி இல்லையானால் பயிர்த்தொழில் ஒரு தொழிலா சாமி! அதைவிடத் திருடலாம், கொள்ளை அடிக்கலாம். நாங்களும் மனிதர் தானே? எங்களுக்கும் நாக்கு இருக்கிறது. எங்கள் நாக்கும் ருசியான சாப்பாடு தேடுகிறது."

"உன் பாட்டன் மூப்பாட்டன் எல்லாம் பயிர் தானே செய்தார்கள்?"

"செய்தார்கள். அவர்கள்காலம் வேறு. அப் போது எல்லாருமே கூழ் குடித்தார்கள் ; எல்லாருமே ஒரு துணி இரண்டு துணியோடு திரிந்தார்கள். இந்தக் காலத்தில் ஓட்டல் இருக்கிறது. சினிமா இருக்கிறது. உழைக்காதவர்கள், வியர்வை விடாதவர்கள் எல் லாரும் நல்ல சாப்பாடு சாப்பிட்டு, நல்ல துணிமணி போட்டுக்கொண்டு திரிந்தால், எங்கள் மனம் கேட்க வில்லை. நானும் முதலில் சாராயம் என்றால் என்ன என்று தெரியாமல் இருந்தேன். பிறகு ஊர்ப் பிள்ளை களைப் பார்த்து நானும் கெட்டுப் போனேன்."

"நீயும் குடிப்பாயா ?"

"குடிப்பேன் சாமி. கெட்டதுதான். என்ன செய்வது ?"

"இப்போது குடிக்கவில்லையே."

"நான் குடித்து மூன்றுநாள் ஆச்சு. இப்போது குடித்தால் வந்தது வம்பு. எங்கேயாவது எப்படியாவது அகப்பட்டுக்கொள்வேன். அதற்காகவே ஆசையை அடக்கிக்கொண்டு குடிக்காமல் இருக்கிறேன். அவள் கர்ப்பமாக இருக்கிறாள். பத்தாம் மாதம் இது. இப் போது அவளை இப்படி விட்டுவிட்டுச் சிறைக்குப் போக மனம் இல்லை. பிள்ளை பெற்றுவிட்டாளா னால், தாய்வீட்டிலே கொண்டுபோய் விட்டுவிட்டுப் போனாலும் போய்விடுவேன். வேறு என்ன செய்வது? நான்கு நாளாக விடாமல் என்னையே தேடிக்கொண்டு வேட்டையாடி வருகிறார்கள். இராத்திரியில் அமைதி யாக வீட்டில் படுப்பதற்கும் கொடுத்துவைக்கவில்லை. எப்போது வந்தாலும் நடு இராத்திரியிலேயே வரு கிறார்கள் பாவிகள் !"

"இப்படித் துன்பப்படுவதை விடப் பயிர்த் தொழிலே செய்து உப்பில்லாத கூழ் குடித்தாவது பயம் இல்லாமல் வாழலாமே."

"ஒவ்வொரு வேளையில் எனக்கும் அப்படித் தோன்றுகிறது."

"இனிமேல் பயிர்த்தொழில் சீர்ப்பட்டுவிடும். வருங்காலத்தில் உழைத்துப் பயிர் வைக்கிறவர்களுக்குத் துணையாக அரசாங்கமே ஆதரவு செய்யப் போகிறது. அந்தக் காலத்தில் பயிர்த்தொழில் செய்தால், நல்ல சாப்பாடும் துணியும் கிடைக்கும்; வீடு வாசலும் நல்லபடி அமையும்."

"அப்படி ஒரு காலம் வந்தால், நாங்கள் இந்தத் தொழிலுக்கு வந்து இப்படி அல்லல்பட மாட்டோம். சாராயம் காய்ச்ச வேண்டும் என்று சட்டம் போட்டாலும் காய்ச்சமாட்டோம், சாமி."

இந்தப் பேச்சைக் கேட்டதும் வெதும்பியிருந்த என் உள்ளத்தில் குளிர்ந்த மழை பெய்தாற்போல் இருந்தது. சிறிதுநேரம் எங்களிடையே அமைதி நிலவியது. எல்லோருடைய உள்ளமும் என் உள்ளம் போலவே தண்மை பெற்றுப் புத்துணர்ச்சி பெற்றிருக்கும். அதனால்தான் அமைதியாக இருக்கிறார்கள் என்று எண்ணினேன்.

"அவர்களே புட்டியைக் கொண்டுவந்து வைத்து விட்டுச் சாராயம் இருந்ததாகச் சாட்சிவைத்துப் பிடித்துக்கொண்டு போகிறார்களாமே" என்றான் இனியன்.

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"சொல்லக் கேள்விதான்."

"சும்மா இல்லாததைச் சொல்லக் கூடாது. முதல் இரண்டு முறை என்னைப் பிடித்தபோது, வீட்டிலேயே சாராயத்தைக் கண்டுபிடித்துவிட்டார்கள். கையோடு அகப்பட்டுக்கொண்டேன். மூன்றாம் முறையில் நான் வீட்டிலே பொருளை வைக்காமல், வேறே இடம் பார்த்துவைத்து நெடுநாள்வரையில் ஏமாற்றிவந்தேன்.

என்னை எப்படியாவது பிடிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு, நீங்கள் சொன்னபடி, புட்டியைக் கொண்டுவந்து வைத்துச் சாட்சி தேடிப் பிடித்துக்கொண்டு போனார்கள். என்னவோ, அவர்கள் தொழிலை அவர்கள் செய்யணுமே.''

'' அது சரி. அவர்களும் குடிக்கிறார்களாமே.''

'' நானே என் கையாலேயே சாராயம் கொடுத்திருக்கிறேன். என் வீட்டிலேயே குடித்திருக்கிறார்கள். கொண்டுவந்து கொடுக்கச் சொல்லியும் இருக்கிறார்கள். எல்லாம் உண்டு. அவர்கள் யோக்கியமாக இருந்தால், ஊர்கள் சீர்ப்பட்டுவிடும். என்ன செய்வது ?''

'' அவர்கள் எல்லாருமா குடிக்கிறார்கள் ?''

'' அய்யோ பாவம் ! எல்லார்மேலும் எப்படிச் சொல்ல முடியும் ? அவர்களில் பாதிப் பேர் கிட்ட வரமாட்டார்கள். இந்த வாசனையும் பிடிக்காதவர்கள் பலர் இருக்கிறார்கள். சிலர் இதே வேலையாக எங்களைத் தேடிவருகிறார்கள். சிறையில் போய்ப் பார்க்கணும். அங்கே வருகிறவர்களைக் கேட்கணுமே. எத்தனையோ வகையான கதைகளைக் கேட்கலாம். அவர்களே சில ஊர்களுக்குப் போய்க் காய்ச்சும் முறை எல்லாம் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். அவர்களே பலரைக் காய்ச்சச் சொல்லிக் கெடுத்திருக்கிறார்கள். பங்கு வைத்து வியாபாரம் செய்வது போலவும் சிலர் செய்திருக்கிறார்களாம். என்னைப் போல் அங்கே வந்த ஊரார் பலர் இந்தக் கதைகளை எல்லாம் சொன்னார்கள்.''

''நீ சொன்னதுபோல், அவர்கள் சீராக இருந்தால் மதுவிலக்கு எப்போதோ வெற்றி பெற்றிருக்கும்.''

'' சந்தேகமே இல்லாமல். கள் சாராயம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டிருக்கும்.''

" அவர்கள் மட்டும் என்ன செய்வார்கள், பாவம். உனக்குப் பயிர்த்தொழிலால் நல்ல சாப்பாடும் துணி மணியும் கிடைக்கவில்லை. அவர்களின் தொழிலிலும் போதுமான சாப்பாட்டுக்கும் துணிமணிக்கும் வழி இல்லை. அதனல் மனம் கெட்டுப்போகிறது."

மறுபடியும் முன் அலறிய இடத்திலிருந்தே ஆந்தை அலறியது. முன்போலவே காக்கைகள் கலைந்து எழுந்தன. சிறிது நேரத்தில் அடங்கின.

" நேரம் ஆயிற்றே. போகலாமே " என்றான் மது.

" இன்னும் ஒன்று கேட்டுவிட்டுப் போகலாம் " என்றான் இனியன்.

" சரி. கேட்டுமுடி " என்று மது பொறுமையாக இருந்தான்.

இனியன் கேட்கத் தொடங்கினன் : " சிறையில் என்ன செய்கிறீர்கள் ? அங்கே எப்படிக் குடி இல்லாமல் இருக்க முடிகிறது ?"

" அங்கே குடிக்க வழி இல்லை. தவிர, நல்ல சாப்பாடு, வேலையான உழைப்பு, நல்ல தூக்கம் எல்லாம் உண்டு. கடன் முதலான தொல்லைகள் இல்லை. பலவகையான கவலைகள் இல்லை. அதனல் குடிக்க வேண்டும் என்ற எண்ணமே வருவதில்லை."

" கவலையே இல்லையா ?"

" ஒரே கவலை ; குடும்பத்தைப் பற்றி ; பெண் டாட்டிபிள்ளைகள் எப்படி இருக்கிறார்களோ என்று. அது தவிர, வேறு யார் எங்களைக் கடன் கிடன் என்று வதைக்கப் போகிறார்கள் ? யார்மேல் நாங்கள் பொறுமைப்பட்டுக் கவலைப்படப் போகிறோம் ?"

" சிறையில் சிறைய வேலை இருக்கிறதா ?"

" வேலை இருந்தாலும், எல்லாரும் சேர்ந்து பேசிக் கொண்டு செய்வதால் எப்படியோ பொழுது போகிறது."

"என்ன வேலை?"

தோட்ட வேலை. கயிறு முதலானவை செய்வது, அதிகாரிகளின் வீட்டுக்குப் போய் அவர்கள் சொன்ன வேலைகளைச் செய்வது."

"வீட்டுக்குப் போய் அவர்களுடைய சொந்த வேலையா செய்வீர்கள்?"

"ஆமாம் சாமி. அதை ஏன் கேட்கிறீர்கள்? வீட்டில் நெல் குற்றுவோம். மாவு ஆட்டுவோம். விறகு வெட்டுவோம். அவர்களுடைய சொந்தத் தோட்டத்தில் வேலை செய்து காய்கறி பயிரிட்டுக் கொடுப்போம். சிறையில் உள்ள தோட்டத்தில் காய்கறி பயிரிட்டு அதிலும் பாதி அவர்களுக்குக் கொண்டு போவோம். அதிகாரியின் மருமகனை யாரோ அதே ஊரில் ஓட்டல் வைத்திருக்கிறார். அந்த ஓட்டலில் மாவு ஆட்டுவது முதல் பற்றுத்தேய்ப்பது தண்ணீர் மொள்ளுவது வரையில் எல்லா வேலையும் நாங்கள் செய்வோம். கூலி கொடுக்காமலே வேலைகளை முடித்துக்கொள்வது அவர்களுக்கு எவ்வளவோ லாபம் என்று சிறையில் எல்லாரும் பேசிக்கொள்வார்கள்."

"ஓட்டல் வேலை கூடவா?"

"ஓட்டலே சிறையால்தான் நடக்கிறது. நல்ல வரும்படி. கொள்ளைதான். வேலைகள் மட்டுமா, அரிசி காய்கறி உப்பு மிளகாய் எல்லாமே காசு போடாமலே ஓட்டலுக்குக் கிடைக்கிறது. விற்கிற பணம் எல்லாமே லாபம்தான்."

"அது எப்படி?"

"கைதிகளுக்குச் சாப்பாட்டுக்காக வருகிற அரிசி புளி மிளகாய் எல்லாம் என்ன செய்வது? பாதி எங்கள் வயிற்றில், பாதி அப்படியே ஓட்டலுக்குப் போய்விடுமாம். இது அங்கே எல்லாரும் பேசிக் கொள்கிற கதை. சர்க்கார் நல்லவர்கள்தான். அவர்

கள் எங்களுக்காகச் செலவழிக்கிற பணம் முழுதும் எங்களுக்குப் பயன்பட்டால், நாங்கள் நாள்தோறும் கலியாணச் சாப்பாடே சாப்பிட முடியுமே."

"ஏராளமாகச் செலவழிக்கிறார்கள். உண்மை தான். சிறையில் நீங்கள் நிறைய இருப்பீர்கள்."

"இப்போதெல்லாம் திருடு கொள்ளை என்று சிறைக்கு வருகிறவர்களைப் பார்ப்பதே அருமையாக இருக்கிறது. கள் சாராயத்தால் உள்ளே வந்தவர்கள் தான் மூக்காலே அரைக்கால் பங்கு இருப்போம்."

"அடிதடி கொலை வழக்குகளில் வருவதில்லையா?"

"உண்டு. அவர்களும் எங்கள் கூட்டமே. குடியாலும் சாராயம் காய்ச்சிய பகையாலும் கொலை அடிதடி செய்துவிட்டு வருகிறார்கள். அப்படி வருகிறவர்கள் குறைவுதான்."

"போதும் அப்பா உங்கள் கதை" என்று இனியன் எழுந்தான். நாங்களும் எழுந்தோம். அவன் தொலைவில் என்னவோ பார்த்துவிட்டுப் பதுங்கி நின்றான். "நானும் இனிமேல் இங்கே இருக்கக்கூடாது சாமி" என்று அந்த ஓடையின் மரங்களின் நிழலிலேயே நகர்ந்தான்.

நாங்கள் தொலைவில் உற்றுப் பார்த்தோம். எங்கள் கண்ணுக்கு ஒன்றும் தெரியவில்லை. "சரி, எப்பாடியாவது போகட்டும், வாங்க அய்யா" என்று மது அழைத்துச் சென்றான்.

"பாவம்! மாப்பிள்ளையை இராக்காலத்தில் இங்கே இவ்வளவு நேரம் இருக்கச் செய்துவிட்டோம்" என்றேன்.

"இன்றைக்குக் குற்றம் இல்லை. நாளைக்கு இப்படிச் செய்தால்தான் பாவம்" என்று இனியன் கிண்டலாக அவனுடைய முகத்தைப் பார்த்தான்.

மதுவின் முகத்தில் புன்னகை இருந்தது.

மறுநாள் திருமணம் முடிந்த பிறகு மது சொன்ன படி பக்கத்து ஊர்க்குப் போய்ப் பார்க்கவில்லை. திருமணம் காலையிலேயே ஏழரை மணிக்குள் முடிந்து விட்டமையால், உடனே சிற்றுண்டி முடித்துச் சென்னைக்குப் புறப்பட்டோம். இன்னும் இருந்து திருமண விருந்து உண்டபிறகு போகுமாறு மது மிக வற்புறுத்தினன். அவனுடைய உணர்ச்சி மிகுந்த உள்ளத்தை நினைந்து, 'இன்னும் இப்படியே இருக் கிறானே! காலத்தின் போக்கை அறிந்து கடிகாரம் போல் வாழத் தெரியவில்லையே' என்று பேசிக்கொண் டோம். விடைபெற்றுப் புறப்பட்டோம்.

வந்த வழியில் ஒரு பிணம் போய்க்கொண் டிருந்தது. ஒரு பெண்ணின் பிணம் எனத் தெரிந்தது. ஒரு சிறு கூட்டம் உடன் வந்தது. ஒரு பையன் – ஏழுவயது உள்ளவன்-அழுது சொரியும் கண்களுடன் 'அம்மா அம்மா' என்று கதறிக்கொண்டு வந்தான். அந்தக் காட்சி என் நெஞ்சத்தையே பிளப்பது போல் இருந்தது. பிணத்தின் முகத்தில் இளமை கண்ட போது, 'என்ன உலகம் இது!' என்று உள்ளம் நைந்தது. அந்தச் சிறு கூட்டம் எங்களை விட்டுக் கடந்த பிறகு, எதிரில் வந்த இருவர் பேசிய பேச்சு என் செவியில் விழுந்தது.

"அவனே கொடுத்தானே, ஊரில் எந்தக் குடி காரப் பயல் கொடுத்தானே? யாருக்குத் தெரியும்?"

"யாராக இருந்தாலும் என்னவாக இருந்தாலும், இப்படிக் கண்ட மருந்து தின்று உடம்பைப் பாழாக் கிச் செத்திருக்க வேண்டாமே!"

இவ்வாறு அவர்கள் பேசிய பேச்சைக் கேட்டதும் ஒன்றும் தெரியாதவன் போல் நான் அவர்களைப் பார்த்து, "என்ன உடம்புக்கு? பாவம்! கணவன் இல்லையா?" என்றேன்.

" குங்குமம் மஞ்சள் இட்டு எடுத்துக்கொண்டு போகிறார்களே. கணவன் இல்லாமல் என்ன? சாராயம் காய்ச்சிவிட்டுச் சிறையில் கிடக்கிறான். இரண்டு குழந்தைகளை விட்டுவிட்டு இவள் இப்படிச் சிவலோகம் சேர்ந்துவிட்டாள் " என்றார் ஒருவர்.

" என்னவோ மருந்து கிருந்து என்று சொன்னீர்களே " என்றான் இனியன்.

" இவளையும் சிறையில் தள்ளப் பார்த்தார்கள். ஊரார் மிரட்டலுக்குப் பயந்து வயிற்றில் பிள்ளை வாங்கிக்கொண்டாள். பிள்ளையைக் கரைக்க முடியாமல் செத்தாள் " என்றார் மற்றவர்.

" குழந்தைகளை விட்டுவிட்டு எப்படிச் சிறைக்குப் போவது என்று பார்த்தாள். கடைசியில் குழந்தைகளை விட்டுவிட்டு வேறு உலகத்திற்கே போய்விட்டாள் " என்றார் முன்னவர்.

இருவரும் நகர்ந்தார்கள். இனியன் ஒன்றும் பேசாமல் தலைகவிழ்ந்து வந்தான். என் கோழைமனம் கொதிப்படைந்தது; வாடிக் கருகியது.

ரயில் நிலையத்திற்குப் போய்ச் சேரும் வரையில் இனியனும் என்னோடு பேசவில்லை; நானும் வாய் திறக்கவில்லை. டிக்கட் வாங்கப் பணம் எடுக்க நின்ற போது நானும் பெருமூச்சு விட்டேன். அவனும் பெருமூச்சு விட்டு " அய்யோ! உலகமே " என்றான்.

விரைவில் வண்டியும் வந்தது. ஏறி உட்கார்ந்தோம். பக்கத்தில் இருந்தவர்களைத் திரும்பிப் பார்த்தோம். வலப்பக்கத்தில் இளைஞன் ஒருவன் இருந்தான். இடப்பக்கத்தில் இருந்தவர் வியாபாரி போல் தோன்றினர். எதிரே ஒரு குடியானவனும் வெள்ளைக் கதர்ச் சட்டை அணிந்தவர் ஒருவரும் அவரை அடுத்துச் சிறு பிள்ளைகள் இருவரும் அவர்களின் தாயும் இருந்தார்கள். வண்டியில் அவ்வளவாகக் கூட்டம் இல்லை.

சீவரம் நிலையத்திற்கு வண்டி வந்தபோது மூன்றிய நாளில் பேசிப் பிரிந்த அந்தக் கிழவரின் நினைவு வந்தது. அவருடைய மகன் இன்னும் காய்ச்சியும் குடித்தும் திரிந்து தந்தையின் மனத்தை வதைக்கின்றானே என்றும், அந்தப் பாவி மருமகள் எங்கே தவறுக வாழ்கின்றாளோ என்றும், இந்தத் தள்ளாத வயதில் கிழவருடைய மனம் பேரன் பேர்த்தியுடன் விளையாடி மகிழ்ந்து அன்பாக அமைதியாக இருக்க முடியவில்லையே என்றும் எண்ணி வருந்தினேன். வாங்கிய வடையில் பாதியை மகனுக்காக என்று முடிபோட்டு வைத்துக்கொண்டு போகும் அவ்வளவு அன்பான மனம் இருக்கிறதே, அத்தகைய அன்பான தந்தையை இந்தத் தள்ளாத வயதில் அவன் கவலை இல்லாமல் காப்பாற்றக் கூடாதா என்று எண்ணி வருந்தினேன்.

அந்தக் கிழவர் அங்கே எங்கேனும் வந்திருக்கிறாரா என்று இங்கும் அங்கும் பார்த்தேன். வண்டி நகர்ந்தது. தார் பூசிய சட்டங்கள் வேலியாக அமைந்த ஒரு மூலையில் கருநிற வெள்ளாட்டுக் குட்டிகள் இரண்டு துள்ளிக் குதித்து விளையாட, அவற்றின் எதிரே தாய்ஆடு அவற்றைப் பார்த்தபடியே பெருமிதத்தோடு படுத்து அசை போட்டுக்கொண்டிருந்தது. வேலியாக அமைந்த கருநிறச் சட்டங்களின்மேல் உட்கார்ந்திருந்த ஒரு காக்கை, அந்தக் குட்டிகள் துள்ளிவரும் போதெல்லாம் எழுந்து எழுந்து பறந்து திரும்பத் திரும்ப அங்கேயே உட்கார்ந்தது. ரயில் நகர்ந்தபடியே இருந்தபடியால் அந்தக் காட்சியை நெடுநேரம் பார்க்க முடியவில்லை. ஆயினும் அந்தக் காட்சி ஒரு படம் போல் என் உள்ளத்தில் பதிந்து நின்றது. எண்ணெய் பூசினாற்போல் மினு மினு என்று ஒளியுடன் விளங்கிய அந்த வெள்ளாட்டின் கருமயிர் என்ன கவர்ச்சியானது ! பெருமிதத்துடன்

படுத்திருந்த அந்தத் தாயின் எதிரே இன்பமாய் விளையாடிய அந்தக் குட்டிகளின் வாழ்வு எவ்வளவு மகிழ்ச்சியானது! ரயில் வருதல் போதல், அதன் பேரொலி, மக்களின் கூட்டமும் பரபரப்பும் ஆகிய எவற்றையும் பொருட்படுத்தாமல் அந்த வெள்ளாட்டுக் குடும்பம் எவ்வளவு அமைதியாகவும் அன்பாகவும் வாழ்கிறது என்று எண்ணி வியந்தபோது, ரயில் ஏறுமுன் கண்ட ஒரு தாயின் பிணமும் கதறி அழுத மகனின் தோற்றமும் நினைவுக்கு வந்தன. வெள்ளாட்டுக் குடும்பம் இன்பமாய் வாழ்கிறது! மனிதக் குடும்பம் வாழ முடியாமல் அழிவும் அழுகையுமாய் முடிகிறதே என வருந்தினேன்.

திடீரென்று கதர்ச் சட்டையார் என்னைப் பார்த்து, "என்னங்க! இங்கே எங்கே வந்து போகிறீர்கள்?" என்றார்.

அவர் யார் என்பது நினைவுக்கு வரவில்லை. ஆனாலும், அவராக நினைவு வைத்துக்கொண்டு பேசும் போது என்ன செய்வது என்று நானும் பேசினேன். "இங்கே நத்தப்பேட்டையில் ஒரு திருமணம் நண்பர்க்கு. அதற்காக வந்து போகிறேன்" என்றேன்.

"என்னை மறந்துவிட்டிருப்பீர்கள். போன மாசம் உங்கள் ஆபீசுக்கு வந்து உங்கள் உதவியால் ஒரு வேலை முடித்துக்கொண்டு வந்தேன். உங்களுக்கு நினைவு இருக்காது. என்னைப் போல் எத்தனையோ பேர் உங்களை நாடி வருகிறார்கள். உங்களுக்கு எப்படி நினைவு இருக்கும்?" என்றார்.

"இருக்கலாம். மறந்துவிட்டேன். உங்கள் சொந்த ஊர்?" என்று கேட்டேன்.

"காஞ்சிபுரம். இப்போது சென்னைக்கு வருகிறேன். வேறொரு வேலையாக" என்றார்.

அவருக்குப் பக்கத்தில் இருந்த அந்தச் சிறுவர் களையும் அவர்களின் தாயையும் பார்த்தேன். அந்த அம்மாவின் கண்கள் சிவந்து நீர் கலங்கியிருந்தன. கண்களை அடிக்கடி துடைத்தபடி இருந்தாள்.

கதர்ச் சட்டையார் பேசினர். "உங்களைப் போலவே ஆபீசுகளில் எல்லாரும் இருந்துவிட்டால், அரசாங்கத்திற்கு எவ்வளவோ நல்ல பெயர் வந்து விடும். கிராம மக்களுக்கும் எவ்வளவோ நன்மை ஏற்பட்டுவிடும்" என்றார்.

"இது என்னங்க. ஆபீசில் சம்பளம் வாங்கும் போது கடமையைச் செய்ய வேண்டாமா? கடமை யைச் செய்வதற்குத்தானே அங்கே போயிக்கிறோம்" என்றேன்.

"அப்படி எல்லோரும் இல்லையே. கோயில் பூசாரி தன்னைக் கடவுளின் தொண்டன் என்று எண்ணுமல், வழிபட வருவோரிடம் காணிக்கை வாங்கிப் பிழைக்கும் கமிஷன் ஏஜண்ட் என்று எண்ணுவது போல், ஒவ்வோர் ஆபீசில் உள்ளவர் களும் தங்கள் தொழிலைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண் டிருக்கிறார்களே. வாங்குவது பொதுமக் களின் வரிப்பணம் என்ற எண்ணமும் இல்லை; தாங்கள் பொதுமக்களின் ஊழியர்கள் என்ற எண்ண மும் இல்லை. தாங்கள் பொதுமக்களுக்கு அதிகாரிகள் என்றும், பொதுமக்கள் தங்களுக்கு லஞ்சம் தரக் கடமைப் பட்டவர்கள் என்றும் ஒவ்வொருவரும் எண்ணிக்கொண்டு ஆபீசுகளில் அநியாயம் செய்து மிரட்டுகிறார்களே" என்றார்.

"உங்களுக்கு நிரம்ப அனுபவம் இருக்கும்போல் தெரிகிறது" என்றேன்.

"காங்கிரசின் விடுதலைப் போராட்டத்தில் ஈடு பட்ட காலம் முதல் நான் எப்போதும் மற்றவர்களுக்

காக ஆபீசுகளுக்குப் போவது உண்டு. வர வரக் கெட்டு இப்போது ஒழுங்கு மிகக் குலைந்துபோயிருக் கிறது. நிறையச் சம்பளம் வாங்குகிறவர்கள் முதல் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்கள் வரையில் எல்லா ருமே அகப்பட்ட வரையில் சுருட்டப் பார்க்கிறார்கள். நம் சொந்த நாடு, நம் சொந்த ஆட்சி என்ற கடமை யுணர்ச்சியே இல்லாமல் நாட்டுமக்களைச் சுரண்டிப் பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் வந்து விட்டது. அதனல் என்னைப் போல் உண்மைக்குப் பாடுபடுகிறவர்களுக்கு இடம் இல்லாமல் போய் விட்டது. நானும் மக்களை ஏமாற்றிக் காசு வாங்கி அதில் பாதி எடுத்துக்கொண்டு பாதி அவர்களுக்குத் தர வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அப்படிச் செய்து கதர்ச் சட்டை போட்டுத் திரிகிறவர்களும் இப்போது ஏற்பட்டுவிட்டார்கள். எனக்கு மனம் வர வில்லை. உங்களைப் போல் இரண்டொருவர் மட்டுமே விதிவிலக்காக உண்மையாக உள்ளபடி நடக்கிறீர் கள்" என்று பேசிக்கொண்டே இருந்தபோது மெல்லிய விம்மல் கேட்டு அந்த அம்மாவின் பக்க மாகத் திரும்பி அவளுடைய அழுகையைப் பார்த்தார். "ஏன்'மா அழுகிறாய்? அழுவதால் ஒரு காரியமும் முடிக்க முடியாது. மனத்தைத் தேற்றிக்கொள் அம்மா" என்றார்.

"யாருக்காவது உடம்பு நன்றாக இல்லையா?" என்றேன்.

அந்த அம்மா முன்னிலும் மிகுதியாக அழத் தொடங்கிவிட்டாள்.

"இந்த அம்மாவின் கணவனும் நானும் ஒன்றாக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைக்குப் போனவர்கள். இப்போது ஒரு பெரிய வழக்கில் அகப் பட்டுக்கொண்டு சிறையில் இருக்கிறான். ஜாமீனிலும்

விட மறுத்துவிட்டார்கள். இந்த அம்மா பயப்படு கிறார்" என்றார்.

"என்ன வழக்கு? ஏதாவது சாராயம்...?"

"சே, சே! அவன் அந்தப் பக்கமே போகமாட் டான். நேர்மையானவன்; உண்மையானவன். இவர் களின் ஊர், பக்கத்துக் கிராமம். ஊரில் பஞ்சாயத்துத் தேர்தல் ஏற்பாடாகி யிருந்தது. தேர்தல்நாளுக்கு முந்திய நாள் ஊரில் ஒரு திருவிழா நடந்தது. தேர் தலுக்காக மக்கள் இரண்டு கட்சியாகப் பிரிந்து பகை வளர்த்துவந்தார்கள். மாமனுக்கும் மைத்துனனுக்கும் பகை, அண்ணனுக்கும் தம்பிக்கும் பகை, அப்பனுக் கும் பிள்ளைக்கும் பகை, எதிர்வீட்டுக்கும் பக்கத்து வீட்டுக்கும் பகை – இவ்வாறு ஊரெல்லாம் பகை மூற்றியிருந்தது. திருவிழா அன்று அந்தப் பகை பெருங் கலகமாய் வளர்ந்து, அடிதடியில் மாறி, குத்தும் கொலையுமாய் முடிந்தது. நான்குபேர் பிண மாகிவிட்டார்கள். பத்துப்பேர் வெட்டும் குத்துமாய் ஆசுபத்திரிக்குப் போயிருக்கிறார்கள். யார் யார் மேல் சந்தேகப்பட்டார்களோ அவர்களை எல்லாம் அதிகாரிகள் பிடித்துச் சிறையில் தள்ளினர்கள். அவர்களில் இந்த அம்மாவின் கணவனும் ஒருவன். நான் கேள்விப்பட்டதும் ஓடினேன். ஊரே சுடுகாடு போல் இருக்கிறது. ஒருவரை ஒருவர் பார்க்கப் பயம், ஒருவரோடு ஒருவர் பேசப் பயம், எல்லாரும் கதவைச் சாத்தி வீட்டுக்குள் கிடக்கிறார்கள். செத்த வீட்டி லும் அழுகை, சிறைக்குப் போன வீட்டிலும் அழுகை. இந்த அம்மாவின் தாய்வீடு பல்லாவரம்; இவர்களை அங்கே கொண்டுபோய் விட்டுவிட்டு, அப்படியே சென்னைக்குப் போய் நல்ல வழக்கறிஞரைக் கேட்க லாம் என்று புறப்பட்டேன்" என்றார்.

அந்த அம்மாவின் அழுகை ஒருவாறு குறைந் திருந்தது. பேசாமல் இருந்தேன். இதுவரையில் தலை குனிந்தபடியே கேட்டுக்கொண்டிருந்த இனியன் இப் போது எதிர்பாராமல் வாய்திறந்து, " சுதந்தரம் வந்த பிறகே நாடு மிகவும் கெட்டுவிட்டது " என்றான்.

கதர்ச்சட்டையார் இதைக் கேட்டதும் எழுச்சி பெற்றவராய்ச் சோர்வு நீங்கி உட்கார்ந்தார். ஒரு கணைப்புக் கணைத்து, " சுதந்தரம் காரணம் என்று சொல்லாதீர்கள். நாங்கள் விடுதலைப் போராட்டம் நடத்திச் சுதந்தரம் கேட்டோம். ஆனால் இப்படிப் பட்ட தேர்தல்பேயும் அதனோடு சேர்ந்து வர வேண்டும் என்று கேட்கவில்லை " என்றார்.

" தேர்தல் இல்லாவிட்டால் என்ன செய்வது ? உரிமை ஆட்சியை நடத்துவது யார் ?"

" பழங்காலத்தில் இந்த நாட்டில் சுதந்தரம் இருந்தது. ஊர்களில் தேர்தலும் இருந்தது. ஆனால் இப்படிப்பட்ட வம்புகள் இல்லையே."

" அப்போது எல்லோருக்கும் வாக்குரிமை இல்லை. அரசனுக்கு வேண்டியவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்."

" இப்போது வாக்குரிமை இருந்துமட்டும் பயன் என்ன? பணத்துக்கு வேண்டியவர்கள் தேர்ந்தெடுக் கப் படுகிறார்கள். விடுதலைப் போராட்டத்தில் பாடு பட்டவர்களாக இருந்தாலும், பணம் இல்லாதவர் களுக்கு இப்போது தேர்தலில் இடம் ஏது ? எதிர்க் கட்சியில் இருந்தவர்களே ஆனாலும், அவர்கள் செல் வர்களாக இருந்தால், அவர்களை வலிய அழைத்துத் தேர்தலில் நிற்கவைக்கிறார்கள். அப்போது தொண் டர்கள் இப்போதும் தொண்டர்களே. அப்போது பதவியில் இருந்தவர்கள், இப்போதும் பதவியில் இருப் பவர்களே. இந்தத்தேர்தல்முறை யாருக்கு வேண்டும்?

பணத்திற்கு அடிமைப்பட்ட அடிமைநாட்டு முறை இது. சுதந்தர நாட்டுக்கு இது தகாது.''

''நீங்கள் ஏன் தேர்தலில் நிற்கக் கூடாது?''

''நின்றால் தோல்விதான். வெற்றி பெற வேண்டுமானால், நிறையப் பணம் வேண்டும், அல்லது பணக்காரருக்குப் பக்கப் பாட்டுப் பாடி அவர்களுக்கு வால் பிடிக்க வேண்டும். அந்தப் பணக்காரரிடம் கடன் வாங்கித் தேர்தலுக்குச் செலவிட வேண்டும். பதவி பெற்ற பிறகு மக்களிடம் லஞ்சம் வாங்கி அந்தக் கடனைத் தீர்க்க வேண்டும். இது என்ன தேர்தல் முறை? ஆங்கில மோகம், அந்நிய மோகம் என்று மேடைகளில் கத்திவிட்டு, கடைசியில் அந்நியரிடமிருந்து இந்த மோசமான முறையைக் கண்மூடிக் கற்றுக்கொண்டோம்.''

''நீங்கள் சொல்வதே புதிதாக இருக்கிறதே.''

''அந்நிய மோகம் அந்த அளவிற்கு நம் கண்ணை மறைத்திருக்கிறது. பழைய கல்வெட்டுக்களைப் பாருங்கள். நம் நாட்டுப் பழைய தேர்தல் முறை தெரியும். அதுதான் திருவுளச் சீட்டுப் போன்ற முறை.''

''சீட்டுக் குலுக்கி எடுத்தால் கண்டவர்கள் எல்லாம் வந்துவிடுவார்களே?''

''இப்போது மட்டும் வாழ்வது என்ன? கண்டவர்கள் எல்லாரும் பதவிக்கு வந்துவிடுகிறார்கள். பண பலம் இருந்தால் வர முடியும் என்ற தைரியத்தோடு ஊரைப் புரட்டுகிறார்கள். திருவுளச் சீட்டு முறை இருந்தால், இந்த நம்பிக்கை ஏது? ஏழையின் பெயரும் வந்துவிடும்; பணக்காரரின் பெயரும் வரலாம். ஆனால் தகாதவர்களின் பெயர்க்குச் சீட்டே இல்லாமல் விலக்க முடியும். இப்போது ஏழைகளைத் தானே பணம் விலக்கிவிடுகிறது?''

"உண்மைதான்" என்று பெருமூச்சு விட்டு இனியன் மறுபடியும் தலை கவிழ்ந்திருந்தான்.

"ஜனநாயக முறை இல்லாமல் போகுமே" என்றேன் நான்.

"இப்போது மட்டும் ஜனநாயக முறையா வாழ்கிறது? அந்தப் பெயர் சொல்லிப் பணநாயக முறைதான் வாழ்கிறது. வெறும் பெயர்களைப் படித்துவிட்டு நிறைய அறிவு வந்துவிட்டதாக நமக்கு வீணான மயக்கம் தலைக்கேறியிருக்கிறது. பொதுவாக இந்தக் காலத்தில் எல்லார்க்கும் சொல்கிறேன். உங்களைக் குறித்துச் சொல்வதாக நீங்கள் வருத்தப்படக் கூடாது" என்றார்.

"காந்தியடிகளும் ஒத்துக்கொண்டு செய்ததுதானே இது?"

"அவருடைய காலம் எல்லாம் சுதந்தரம் பெற்றுத் தருவதிலேயே கழிந்தது. அதனோடு சேர்ந்து வந்த அந்நிய மாசுகளைத் துடைத்துப் பண்படுத்தி வளர்ப்பதற்குக் காலம் இல்லாமல் போய்விட்டது. தாய் அருமையான குழந்தையைப் பெற்றாள்; கண்ணை மூடிக்கொண்டாள்; வளர்த்துப் பண்படுத்த வழி இல்லாமல் போயிற்று. அவர் உயிரோடு இருந்திருந்தால், இந்தத் தேர்தல் முறையைத் திருத்துவதற்காக ஒரு சத்தியாக்கிரகம் நடத்தியிருப்பார்; மதுவிலக்கும் வெற்றி பெற்றிருக்கும்; கிராமங்களும் சீர்ப்பட்டிருக்கும். நாம் கொடுத்துவைக்கவில்லை. அவர் பிரிந்துவிட்டார்" என்று சோர்ந்த குரலில் முடித்தார்.

"மதுவிலக்கு எப்படி வெற்றி பெற்றிருக்க முடியும்? அதில் என்ன அந்நிய முறை இருக்கிறது?" என்றான் இனியன்.

"நம் முன்னோர்களான சேர சோழ பாண்டியர்களின் காலத்தில் கள்ளுக்கடைகளே அரசாங்கமா

நடத்தியது? சேர சோழ பாண்டியர்கள் கள்ளுக் கடைகளை ஏலம் விட்டார்களா? அல்லது சட்ட விரோதம் ஆக்கினர்களா? இல்லையே. வெள்ளையரின் காலத்தில் அரசாங்கம் கமிஷன் வாங்கிக்கொண்டு வெளிப்படையாகக் கள் சாராயக் கடைகள் நடத்தின. இப்போது அரசாங்க அதிகாரிகள் சிலர் கமிஷன் வாங்கிக்கொண்டு கள்ளத்தனமாக நடத்துகிறார்கள். இதுதான் வேறுபாடு.''

"மக்களின் மனப்பான்மை கெட்டிருக்கும்போது இதற்கு யார் என்ன செய்ய முடியும்? பொய் சொல்வது மனித இயல்பு; அதை அடியோடு ஒழிக்க முடியுமா? அதுபோல்தான் இதையும் சட்டத்தால் அடியோடு ஒழிக்க முடியாது.''

"ஒழிக்க முடியும். ஆனால் படித்த வழக்கறிஞர்களே பொய் கற்றுக்கொடுத்து, அதற்குச் சட்டத்தின் துணையும் தேடிக்கொடுத்தால் எப்படி அது ஒழியும்?''

"வழக்கறிஞர் இல்லாத பழங் காலத்தில் பொய் சொல்லும் வழக்கம் இருந்ததில்லையா? அரிச்சந்திரனைப் பொய் சொல்லும்படி வற்புறுத்தினவன் படித்தவன் தானே?''

"அது சரி. யாரோ ஒருவர் இருவர் பொல்லாதவர்கள் விதிவிலக்காக இருந்தார்கள். ஆனால் இப்படிப் பொய் சொல்வதில் ஒரு திறமை வளரவில்லை அல்லவா?''

"அது போகட்டும். மதுவிலக்கு, காந்தியடிகளின் முறைதானே? அது என் வெற்றி பெறவில்லை.''

சிறிது அமைதியாக இருந்து பேசத் தொடங்கினர் கதர்ச் சட்டையார். "நான் ஏதாவது இப்படிச் சொன்னால், உடனே என் பழைய நண்பர்களும் என் மேல் சந்தேகப்படுகிறார்கள்; சிலர் தேசியத்துக்கே

பகைவன் என்றும் என்னை எண்ணுகிறார்கள். நான் என்ன செய்வது? உண்மையை எப்படிச் சொல்லாமல் இருப்பது? வைத்தியர் சொன்னார் என்று மருந்து மட்டும் உட்கொண்டு அவர் சொன்ன பத்தியத்தைப் போற்றாமல் இருந்தால், குற்றம் யாருடையது? காந்தி யடிகள் சொன்ன ஒன்று இரண்டை மட்டும் எடுத்துக் கொண்டு, மற்றவற்றை மறந்துவிட்டால் அவருடைய திட்டம் எப்படி நிறைவேற முடியும்? அவருடைய வழியில் நின்று, அவருடைய திட்டத்தை நிறைவேற்று வதானால், அவர் சொன்ன முழு வழியிலும் நடந்து பார்க்க வேண்டும். அப்படி நடந்து பார்த்து முடியா விட்டால், கைவிட்டுப் போகட்டும். அவருடைய திட்டப்படி முதலில் கிராமங்களை வளம் படுத்த வேண்டும்; கிராமங்களுக்கே ஆட்சி அதிகாரம் தர வேண்டும்; குடியானவன் நிலையை உயர்த்த வேண்டும். இதைச் செய்யாமல் மதுவிலக்கை மட்டும் கொண்டு வருவது வீண்முயற்சி ஆகிறது.''

''இப்போது கிராமங்களைத்தானே முதலில் கவனிக்கிறார்கள்?''

''பெயரளவில்தான். பொருள் அளவில் அல்ல. எண்ணிப் பாருங்கள். விலைவாசி ஏறும்போது முதலில் பாதிக்கப்பட்டவன் உழவன். இப்போது விலை இறங் கும்போதும் முதலில் நெல்விலை இறங்குகிறது; உணவுப் பொருள்களின் விலை இறங்குகிறது. நகரங் களில் உள்ள மில் முதலியவை தங்கள் உற்பத்திப் பொருள்களின் விலையை இன்னும் குறைக்கவில்லை. பார்த்தீர்களா? ஆகவே நாட்டில் வரும் எல்லாத் துன்பங்களுக்கும் முதல் பலி உழவன் - கிராமத்தான். இயற்கையும் அடிக்கடி அவனைத்தான் கெடுக்கிறது. பெய்து பூச்சிகளை அதிகமாக்கிக் கெடுக்கிறது. பெய்யா மல் வறட்சியாக்கிக் கெடுக்கிறது. இயற்கைக்கும்

இவன்தான் முதல் பலி ஆகின்றான். பயிர்த் தொழி லுக்கு எந்தப் பாதுகாப்பும் இன்ஷ்யூரன்ஸ் போன்ற வைகளும் இல்லை. நகரத்தில் எந்தச் சிறு தொழிலுக் கும் எல்லாம் உண்டு.''

'' ஆட்சி அதிகாரம் கொடுத்தால் வம்பும் வழக்கும் செய்கிறார்களே.''

'' காந்தியடிகள் சொன்ன முறையில் அதிகாரம் கொடுக்கப்படவில்லையே. கிராமங்களுக்குச் சுதந்தரம் வேண்டும் என்றார். எங்கே சுதந்தரம்? எந்தப் போலீஸ்காரரும் வேறு எந்த அதிகாரியும் இரவில் எந்த நேரத்திற்கேனும் கிராமத்திற்குள் புகுந்து மிரட்டலாம். இதுவா சுதந்தரம்? சுதந்தரம் என்றால், அந்த ஊரை ஆளும் தலைவனுடைய அனுமதி இல்லா மல் எவ்வளவு பெரிய அதிகாரியும் அங்கே நுழைய இடம் இருக்கக் கூடாதே! கல்லூரித் தலைவருடைய அனுமதி இல்லாமல் பெரிய ராணுவ அதிகாரியும் கல்லூரிக்குள் நுழைய முடியாது அல்லவா? அப்படிப் பட்ட சுதந்தரம் வேண்டும். இப்போது நேர்மாறாக இருக்கிறதே. எந்தக் கிராமப் பஞ்சாயத்தையும் எப் போது வேண்டுமானாலும் சர்க்கார் கலைத்துவிட அதி காரம் இருக்கிறதே. கிராமங்கள் நகர அதிகாரிகளிடம் கெஞ்சித் தொங்குகிற நிலைமை இன்று உள்ளது. நகரங்கள் கிராமங்களை அண்டி அடங்கி வாழும் காலம் வர வேண்டும். இப்போது அப்படி இல்லையே. கிராமத்தில் அரை குறையாய்ப் படித்த ஒருவன், அதிகாரிகளைக் காக்கா பிடித்துவைத்துக்கொண்டால், கிராமத்தையே தன் விருப்பம்போல் ஆட்டி வைக்க லாமே. அடிப்படையை விட்டுவிட்டுக் கோபுரத்தைப் பொன்னால் அலங்காரம் செய்கிறார்கள். மத்திய சர்க் கார் என்று சொல்லி எல்லாச் சிறப்பும் பொறுப்பும் அங்கே குவித்துவைத்திருக்கிறார்கள். அதனால் மாகா

ணங்களிலும் கிராமங்களிலும் மக்களுக்கு நாய்ப்புத்தி வளர்கிறது. நாய் தன் இனத்தைக் காட்டிக்கொடுத்து எசமானனுக்கு வால் ஆட்டுகிறது; அதனால் இரண்டு எலும்பு மிகுதியாகப் பெறுகிறது. மாகாணத்தைக் காட்டிக்கொடுத்து மத்திய சர்க்காருக்குப் பின் பாட்டுப் பாடினால் பதவி உயர்வு கிடைக்கிறது. அப்படியே எவனாவது ஒருவன் தன் கிராமத்தைக் காட்டிக் கொடுத்து நகர அதிகாரிக்கு வால் ஆட்டினால் அவனுக்குத் தனிச் சலுகை கிடைக்கிறது. காந்தியடிகள் கனவு கண்ட நல்ல சுதந்தரத்தில் நாய்ப் புத்திக்கு இடமே இல்லை. இது மறைமுகமான அடிமைத் தனமே தவிர, சுதந்தரம் அல்லவே அல்ல. இந்த நிலையில் கிராம ஆட்சி எப்படி உண்மையாக இருக்க முடியும்? மதுவிலக்கிலும் இப்படித்தான் காட்டிக் கொடுப்பதும் துரோகமும் மலிந்து, உண்மையான முயற்சி இல்லாமல் போய்விட்டது.''

இவ்வாறு அவர் சொல்லிக்கொண்டிருந்த போது சான் வண்டி செங்கல்பட்டு நிலையத்தை அடைந்தது. இதுவரையில் அவருடைய பேச்சில் ஈடுபட்டிருந்த காரணத்தால் அந்த வழுக்கைத் தலையாருடைய ஊரைப் பற்றியும் மறந்துவிட்டேன். நிலையத்தில் இங்கும் அங்கும் பார்த்தேன். பழகிய முகம் ஒன்றும் தெரியவில்லை. கதர்ச்சட்டையார் அந்த இரண்டு சிறுவர்களுக்கும் சிற்றுண்டி வாங்கித் தருவதற்காக அழைத்துச் சென்றார். போலீசார் முன்னும் பின்னும் தொடர நான்கு கைதிகள் வண்டியை விட்டு இறங்கிச் செல்வதைக் கண்டேன். நானும் வண்டியை விட்டு இறங்கி அவர்களைத் தொடர்ந்து சென்றேன். அவர்கள் நிலையத்தைக் கடந்து சென்றதும் திரும்பி வந்தேன். அதற்குள் இனியன் காப்பி வாங்கி வைத்திருந்தான். அதைப் பருகினேன். கதர்ச்சட்டையார்

அந்தச் சிறுவர்களை அழைத்துக்கொண்டு திரும்பினர். அவர் தம் கையில் இருந்த ஒரு பொட்டலத்தை அந்த அம்மாவிடம் கொடுத்தார். காப்பி விற்பவனை அழைத்துக் காப்பி கொண்டுவருமாறு செய்தார். அந்த அம்மா காப்பியை மட்டும் குடித்துவிட்டுப் பொட்டலத்தைப் பிரிக்காமலே வைத்திருந்து, சிறுவர்களின் கையில் கொடுத்தாள்.

வண்டி நகர்ந்ததும் பழைய ஏரியின் காட்சி என்னைக் கவர்ந்தது. கதிரவன் ஒளிபட்டு மின்னும் நீரில் இடையிடையே செங்கழுநீர்ப் பூக்கள் விளங்கிய காட்சி மிக அழகாக இருந்தது. நீர்ப்பரப்பு ஒரு சிறு கடல்போல் தோன்றியது.

ஏரி மறைந்தபின், அவருடைய முகத்தைப் பார்த்தேன். என்ன கேட்பது என்று எண்ணினேன். உடனே கிராமத் தலைவரைப் பற்றிக் கேட்கத் தோன்றியது. "ஆமாங்க. கிராமத் தலைவர் உண்மையானவராக இருந்தால் சரி. இல்லாவிட்டால் என்ன பயன்?" என்றேன்.

"நீங்கள் சொல்வது சரி. தந்திரத்தாலும் முயற்சியாலும் பண பலத்தாலும் தேர்தலில் தலைவனாக வருகின்றவன்தான் பொல்லாதவனாக மாற முடியும். திருவுளச் சீட்டால் வருகின்ற நிலை இருந்தால், பொல்லாதவனாக மாற வழி இல்லை. ஒரு வேளை அவனால் தீமை ஏற்பட்டாலும், நகரத்து அதிகாரிகளால் வருகின்ற தீமையைவிட உள்ளூர்க் கொடியவனால் வருகின்ற தீமை மேலானது என்று எண்ணவேண்டும். வெள்ளைக்காரன் ஆட்சியால் வரும் தீமையைவிட சுதந்தர ஆட்சியால் வரும் தீமையை வரவேற்க வேண்டும் அல்லவா? அதுதானே தேசியம், காந்தியம்? என் என்றால், அயலார் கொடுமைக்கு ஆளானால் அது நம் பண்பைக் கெடுக்கும், வளர்ச்சியைக் கெடுக்கும்;

ஆனல் நம்மவர்கள் கொடுமை செய்தால், எப்படியும் ஒரு காலத்தில் திருத்த முடியும். அதனல் நமக்கு உணர்ச்சியும் ஏற்படும்; வளர்ச்சியும் ஏற்படும்" என்ருர் அவர்.

"ஆமாங்க. இதற்கும் மதுவிலக்கு வெற்றி பெறுவதற்கும் தொடர்பு என்ன? தெரியவில்லேயே."

"நல்லபடி வாழ வேண்டும் என்ற ஆசை மக்களிடம் இருந்தால்தான் மதுவிலக்கு வெற்றிபெற முடியும். இப்போது நூற்றுக்கணக்கில் ஆயிரக் கணக்கில் சிறைக்குப் போகிருர்கள். மானம் முதலிய உணர்ச்சிகள் எல்லாம் இல்லே. நல்லபடி வாழவேண்டும் என்ற ஆசை போய்விட்டது. எப்படியாவது பணம் தேடி வாழ வேண்டும் என்ற ஆசை எல்லாருக்கும் வந்து விட்டது."

"நகரங்களிலும் இந்த ஆசைதான் எல்லாரையும் பிடித்து ஆட்டுகிறது."

"உண்மைதான், நகரங்கள் முதலில் கெட்டுத்தான் கிராமங்களேக் கெடுக்கின்றன."

"வேறே வழி?"

"அது ஒன்றுதான் வழி. இல்லையானல், இப்போது மதுவிலக்கு என்று சொல்லி அஞ்சாமல் அநியாயம் செய்வோர்க்கு இடம் தருவதை விட, வேருென்று செய்யலாம். காப்பி போல் யார் வேண்டுமானலும் கள்ளும் சாராயமும் உண்டாக்கி விற்பனே செய்ய விட்டுவிடலாம். அப்போது போட்டி ஏற்பட்டு, மட்டக் காப்பிக்கு இடம் இல்லாததுபோல், மட்டச் சாராயத்துக்கு இடம் இல்லாமல் போய்விடும். மட்டமான கெட்ட சாராயத்தைக் குடித்துவிட்டுக் கிராமங்களில் உடம்பைக் கெடுத்துக்கொண்டு பலவகை நோய்கள் வந்து சாகிருர்களே, அந்தக் கொடுமையாவது இல்லாமல் போகும். விலேயும் குறைந்து சரக்கின்

தரமும் உயர்ந்துவிடும். வீண் செலவு ஏற்படாது. கள்ளத்தனமும் இருக்காது. லஞ்சமும் மலியாது. என்னவோ போங்க! பேச்சுக்குச் சொன்னேன். கள் சாராயம் அடியோடு கூடாது என்பதுதான் என் கொள்கை" என்று சோர்ந்த குரலில் சொன்னார்.

இரவு நெடுநேரம் கண்விழித்திருந்த காரணத்தால், என் உடம்பும் உள்ளமும் சோர்ந்திருந்தன. அவருடைய பேச்சைக் கேட்க வேண்டுமே என்று கண்களைத் துடைத்துக் கொட்டாவி விட்டபடி விழித்திருந்தேன். எப்படியோ உறக்கம் வந்துவிட்டது. அவர் தட்டி எழுப்பியபோது தாம்பரம் நிலையம் வந்திருந்தது. "நாங்கள் இங்கே இறங்கி மின்வண்டியில் ஏறிப் பல்லாவரத்தில் இறங்க வேண்டும்" என்றார். "நல்லது. செய்யுங்கள்" என்று கை கூப்பினேன். விடைபெற்றுச் சென்றார்.

"மிக உண்மையான காந்தி அன்பர் இவர்" என்றான் இனியன்.

"ஆமாம், பாவம்" என்றேன்.

"பாவம் என்ன, பாவம்?" என்றான் இனியன்.

"சும்மா பேச்சுக்குச் சொன்னேன்."

"வெறுஞ்சொல் அல்ல, பொருளோடுதான் சொன்னாய். பணமும் தந்திரமும் ஓங்கியுள்ள இந்த உலகத்தில் அன்பும் உண்மையும் உள்ள காந்தி நெறிக்கு இடம் இல்லையே என்ற இரக்கத்தால் அப்படிச் சொன்னாய்."

"நான் நெடுநேரம் தூங்கிவிட்டிருந்தேனே?"

"ஆமாம்."

"அப்புறம் அவருடன் பேசிக்கொண்டிருந்தாயா?"

"ஆமாம்"

"என்ன பேசினாய்?"

" என்னென்னவோ ! எவ்வளவோ பேசினேம். பிறகு சொல்வேன். தூங்கு. நானும் சிறிது கண் ணயர்வேன்."

ஆபீசுக்குப் போன பிறகும் சோர்வு இருந்தது. நண்பன் பாலு என்னைப் பார்த்து, " என்ன இவ்வளவு சோர்வாக இருக்கிறுயே ?" என்று கேட்டான்.

" பயணம். களைப்பு " என்றேன்.

" ஒரு நாள் பயணத்திலா ? நான் சீசன் டிக்கட் வாங்கி நாள்தோறும் போய்வருகிறேனே. எனக்கு இல்லையே."

" எல்லாம் பழக்கம்."

உடனே வழுக்கைத்தலையாரின் நினைவு வந்தது. "அவர் பொல்லாத ஆள் என்றுயே. என்ன காரணம்?" என்றேன்.

" அவரைப் பற்றி உனக்கு ஏன் ? நான் அந்த ஊரான். அவருக்கு அஞ்சிப் பிழைக்க வேண்டி யிருக்கிறது. உனக்கு என்ன பயம் ?" என்றுன்.

" அவ்வளவு பொல்லாதவரா ?"

" அடே அப்பா ! பொல்லாதவன். அவன் மனம் வைத்தால், யாரை வேண்டுமானலும் குடும்பத்தோடு அழித்துவிட முடியும். தேர்தலில் அந்த ஊரில் அவனை ஒருவரும் எதிர்த்துநிற்க முடியாது. நின்றுல், ஒழிந்தார்கள். அதிகாரிகள் எல்லாரும் தெரியும். யார் வந்தாலும் இவர்வீட்டில் விருந்து நடக்கும். நல்ல குணமும் உண்டு. நம்பினவர்களைக் கைவிட மாட்டார். கோயில் பள்ளிக்கூடம் என்றுல் தாராள மாகக் கொடுப்பார். ஆனல் பெண்வகையில் மட்ட மானவர்."

" அதில் பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் அப்படி இருக்கிறுர்கள்."

" மிக மட்டம். கெடுத்த குடும்பங்களுக்குக் கணக்கு இல்லை."

" அப்படியா ? என்ன தொழில் ?"

" வரி குளம் கட்டிடம் கண்ட்ராக்டர். மருமகன் சென்னையில் ஸ்பிரிட் வியாபாரம் நடத்தி ஏராள மாகச் சாராயத்தில் சம்பாதிக்கிறார். இவர் தென்னந் தோப்பில் திருட்டுக் கள் வியாபாரம் நடத்துகிறார். இவைகள் இல்லாமல் பணம் வேறே கொடுத்து வட்டி வாங்குகிறார்."

" இவ்வளவுதானே ?"

" இன்னும் என்ன வேண்டும் ?"

" பொல்லாதவர் என்று சொன்னீயே !"

" அது பட்டவர்களுக்குத் தானே தெரியும் ?"

" சரி " என்று பேச்சை முடித்தேன்.

நான்கு நாள் கழித்து இனியன் தன் மனைவிக்கு நகை வேண்டும் என்று ஆபீசிலிருந்து நேரே என்னை நகைக் கடைக்கு அழைத்துச் சென்றான். அங்கே அவனுடைய மனைவி முன்னமே போய் நகைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ வகைகளில் நகைகளை எடுத்தெடுத்துக் காட்டினார்கள். இனியனுடைய மனைவிக்கோ எதை யும் தேர்ந்தெடுக்க முடியாமல் இருந்தது. " எல்லாம் அழகாக இருக்கின்றன ! எதைப் பார்த்து எடுப்பது ? எதை வாங்குவது " என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே திரும்பத் திரும்பப் பார்த்த நகைகளையே பார்த்துக்கொண்டிருந்தாள். இனியனுக்குச் சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டன. " பேசாமல் இரு. பெண் களின் நாள் என்று ஒரு நாள் பொறுத்து விட்டுவிட வேண்டும் " என்று சொல்லிப் பேசாமல் இருக்கச் செய்தேன். அவன் சலித்து வந்து என்பக்கத்தில் உட்கார்ந்துவிட்டானோ, " என்ன போங்க. ஒன்றும்

பார்த்துச் சொல்லாமல் பேசாமல் போய் உட்கார்ந் திடுகிறீர்கள்" என்று அவள் வருந்தினாள். அவன் அங்கே போவதும் என்னிடம் வருவதுமாக இருந்தான். நான் கடைக்கு வருவார் போவாரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். கடை முழுதும் கல் இழைத்த நகைகள் வானத்து விண்மீன்கள் போல் ஒளி வீசி விளங்கும் காட்சி தனி அழகாக இருந்தது. ஏழைக் கிராமத்துக் காட்சியும் இந்த உலகத்துக் காட்சியும் என் அகக்கண்ணிலும் புறக்கண்ணிலுமாக மாறி மாறி நின்றன. வைரம் வாங்கும் இடம் தனியே மிக மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. அங்கே ஒரு பெரிய வழுக்கைத்தலை தெரிந்தது. எழுந்து பார்த்தேன். ரயிலில் கண்ட அதே வழுக்கைத் தலை தெரிந்தது. எழுந்து பார்த்தேன். ரயிலில் கண்ட அதே வழுக்கைத் தலையார் என்று அறிந்தவுடன், அருகே சென்று கவனித்தேன்.

அவர் முன்னமே முன்பணம் கொடுத்திருந்த தாகத் தெரிந்தது. சட்டைப் பையிலிருந்து ஒருசீட்டு எடுத்து நீட்டினர். கடைக்காரர் அழகான சிறு பெட் டியை எடுத்து மேசைமேல் வைத்தார். வழுக்கைத்தலை யார் அதைத் திறந்து உள்ளே இருந்த இரண்டு தோடு களையும் உற்றுப் பார்த்தார். பக்குவமாகக் கையில் எடுத்துச் சுற்றிச் சுற்றிப் பார்த்தார். பூதக் கண்ணாடி போல் இருந்த ஒன்றைக் கடைக்காரர் அவரிடம் கொடுத்து ஏதோ சொன்னர். அந்தக் கண்ணாடியைப் பொருந்த வைத்து அதன் வழியாக அந்தத் தோடுகளை உற்றுப் பார்த்தார். "சரியாக ஒன்றே முக்கால் காரெட், சந்தேகமே வேண்டாம்" என்றார் கடைக் காரர். பெரிய புத்தகம் எடுத்து அதில் விலை முதலி யவை எழுதி அதைக் கிழித்துக் கொடுத்தார். நூறு ரூபாய் நோட்டுகளாகப் பத்தொன்பது எடுத்துக்

கொடுத்தார் வழுக்கைத்தலையார். இன்னும் கொஞ்சம் சில்லரை நோட்டுகளும் கொடுத்தார். "சரிதான்" "மிக நன்றி" "எப்போது வேண்டு மானாலும் மாற்றிக்கொள்ளலாம், எதற்கும் உத்தரவாதம்" என்ற சொற்கள் கேட்டன. வழுக்கைத் தலையார் விடை பெற்றுப் புறப்பட்டார். அவரைப் பற்றி நண்பன் சொல்லியவற்றை நினைத்தேன். எந்தக் குடும்பத்தைக் கெடுப்பதற்கு இந்த நகை பயன்படப் போகிறதோ என்று எண்ணினேன்.

உடனே இனியனிடம் நடந்தவை எல்லாம் சொன் னேன். "இதுதான் உலகம்" என்றான் அவன். இனியன்மனைவி நகை வாங்கி முடிப்பதற்கு அதன் பிறகும் அரைமணி நேரம் ஆயிற்று. அவள் முகம் எல் லாம் முறுவலாய் மலர்ந்து முன்னே செல்ல, அவளைத் தொடர்ந்து இனியன் செல்ல, நான் பின்னே வந்தேன்.

வெளியே வந்து கிழக்கு நோக்கி நடந்து பூக்கடை போலீஸ் நிலையத்தின் பின்புறத்தில் நின்றோம். "அடுத் தாற்போல் என்ன வாங்க வேண்டும்?" என்று இனியன் தன் மனைவியைக் கேட்டான். அவள் ஏதோ சொன்னாள். பெரிய பட்டுத் துணிக் கடைக்கு எதிரே வழுக்கைத் தலையார் நின்றிருப்பதைப் பார்த்தேன். உடனே இனியனை அழைத்து, "அதோ பார், அந்த ஆள். கொஞ்சம் பொறு. பார்க்கலாம். பிறகு போகலாம்" என்றேன்.

நாலைந்து பட்டுப் புடைவைகளைச் சுமந்துகொண்டு அந்த ஆள் வாடகை மோட்டாரை எதிர்பார்த்திருந்த தாகத் தெரிந்தது. டாக்சி ஒன்று வழியில் போனதைக் கைதட்டி அழைத்தார். அது வந்து நின்றவுடன் ஏறி உட்கார்ந்தார். அந்த வண்டி தெற்கே திரும்பிக் காற்றாய்ப் பறந்தது.

"என்ன அய்யா! என்ன அப்படிப் பார்க்கிறாய்? யாராவது சினிமாக்காரியா" என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். பாலு பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான். உங்கள் ஊர் வழுக்கைத் தலையாரைத்தான் பார்த்தேன்" என்று நடந்தவற்றைச் சொன்னேன். இனியனும் அவனுடைய மனைவியும் வந்திருப்பதைக் காட்டினேன். அவர்கள் இருந்த இடத்திற்குப் போய், நான்கு பேருமாக நடந்தோம்.

"என்ன செய்தி?" என்று பாலுவைக் கேட்டேன்.

"இன்றைய செய்தித்தாளில் பார்த்திருக்க லாமே?" என்றேன்.

"அட! உலகச் செய்தியைக் கேட்க வில்லை அய்யா. பொதுவாகச் சும்மா கேட்டேன்."

உண்மையாகவே தெரிந்துகொள்ள வேண்டிய செய்தி இருக்கிறது. அதற்காகத்தான் சொன்னேன்."

"என்ன அது?"

"எங்கள் ஊர்க்குப் பக்கத்தில் சிவரம் என்று ஓர் ஊர் இருக்கிறது."

"ஆமாம். அன்றைக்கு ரயிலில் வந்தபோது பார்த்தேனே."

"அந்த ஊரில் ஒருநல்ல குடும்பம். தாய் இல்லாத பிள்ளை என்று மகனை அருமையாக வளர்த்தான் ஒரு கிழவன். மகன் வளர்ந்து பெரியவன் ஆனான். நல்லவன்தானும். எப்படியோ சாராயம் காய்ச்சவும் குடிக்கவும் கற்றுக்கொண்டானும். மனைவிக்கும் கற்றுக்கொடுத்துவிட்டானும். இரண்டுமுறை அகப் பட்டுக்கொண்டு சிறைக்கும் போய் வந்திருக்கிறானும். அவனுடைய மனைவியும் சாராயத்தால் கெட்டுப் போய் எவனோடோ ஓடிவிட்டாளாம். கிழவன் நல்லவனும். மகனுடைய பாசத்தால் மகனுக்குப் பதிலாக அந்தக் கிழவனே ஒரு முறை சிறைக்கும்

போய் வந்தானும். மகனிடத்தில் அவ்வளவு அன்பாம். சாராயம் காய்ச்சக் கூடாது என்று கிழவன் மகனைத் தடுத்திருக்கிறான். கண்டித்திருக்கிறான். அந்தக் குடிகார மகன் அவ்வளவு அன்பாக வளர்த்த அப்பன் மேல் அன்பு வைக்கவில்லை.''

என் மனம் திடுக்கிட்டது. ரயிலில் கண்டு பேசிப் பழகிய கிழவன்தான் என்று உணர்ந்து திடுக்கிட்டது. ''அப்புறம்?'' என்றேன்.

''நேற்று விடியற் காலையில் அந்தக் கிழவனைக் குத்திக் கொன்றுவிட்டு அந்தப் பாவி எங்கேயோ ஓடி மறைந்துவிட்டான். என்ன செய்வது? கொடுமை'' என்றான்.

என்னால் ஓர் அடியும் எடுத்து வைக்க முடியவில்லை. உள்ளம் நைந்தது. வாய் திறந்து பேசவும் முடியாமல் நண்பனுடைய முகத்தையே உற்றுப் பார்த்தேன். மெலிந்த குரலில் ''அய்யோ கடவுளே! கிழவனுக்கு இந்தக் கதியா நேர்ந்தது?'' என்றேன்.

''ஒருவன் பட்டும் வைரமும் சுமந்துகொண்டு தலைநகரத்தின் பெரிய தெருவில் நிற்கிறான். ஒருவன் பழியும் பாவமும் சுமந்துகொண்டு எங்கோ ஓடி ஒளிகிறான். நல்ல உலகம் இது'' என்றான் இனியன்.

UNIVERSITY EXTENSION
30 JAN 19